தன்னலத்திலேதான் சௌக்கியம் இருக்கிறதா?

வேலவன்

தன்னலத்தில்தான் சௌக்கியமிருக்கிறது என்று மனிதன் தவருகஎண்ணிக்கொண்டிருக்கிருன்.

தன்னலம் என்பது என்ன?

நான், என் உடம்பு, என் மனம், என் புத்தி, என் வீடு, என் குடும்பம், என் இனம், என் மொழி, என் நாடு என்ற ரீதியில் நம் சிந்தனை சுழன்று கொண்டிருப்பதே தன்னலத்தின் இலக்கணமாகும். இந்தச் சுழலிலிருந்து விடுபட விடுபட, மனிதனது ஆற்றலும் ஆனந்தமும் அதிகரிக்கின்றனவென்பதை நாம் அனுபவபூர்வமாக அறியலாம்.

உதாரணமாக, சுப்பையர் மகன் ராமசாமி ஒரு பீட் கான்ஸ்டபிளாக நியமிக்கப்பட்டான்.

அவன் பீட் நிற்கும் முச்சந்தி வழியே, எத்தனையோ கோடீஸ்வரர்கள், சர்க்கார் அதிகாரிகள், மாபெரும் கலைஞர்கள் முதலியோர் தமது கார்களில் வருகிருர்கள்.

அந்தக் கார்களெல்லாம் அவன் நிற்கச் சொல்லும்போது நிற்கின்றன; போகச் சொல்லும்போது போகின்றன. கேவலம் தன் கை அசைப்பினுலேயே, அந்தப் பெரிய மனிதர்களின்போக்குவரத்தை ஆட்சிசெய்கிருன் அந்த ராமசாமி.

இவ்வளவு அதிகாரம் அவனுக்கு எங்கிருந்து வந்தது? அவன் சுப்பையர் மகன் என்பதற்காகவா? அவன் சுப்பையர் மகனுயிருந்தாலும் சரி, செல்லக் குடும்பனுடைய பிள்ளையாயிருந்தாலும் சரி, அதைப்பற்றி அந்தக் கார் டிரைவர்களுக்குக் கவலையில்லை. அவன் ஒரு சர்க்கார் ஊழியன் என்பதற்காகத்தான், அவன் காட்டும் சமிக்ஞைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிகிருர்கள்.

அதாவது, அவன் தான்பிறந்த குடும்பத்தை, பிறந்தஇனத்தைத் தியாகம் செய்யும் அளவுக்கு, மற்றவர்கள் அவனுக்கு வணக்கம் செலுத்துகிருர்கள்.

அந்தப் போலீஸ் உடையைக் களைந்தெறிந்துவிட்டு, அவன் மறுபடியும் சுப்பையர் மகன் ராமசாமியாக வந்து நிற்பானேயாகில், அவனையாருமே பொருட்படுத்தமாட்டார்கள்.

அதே ராமசாமி, போலீஸ் கமிஷனராகப் பதவி உயர்வு பெற்றுவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது சென்னை நகரமே அவனுக்கு மரியாதை செலுத்தும்.

அவனே பின்னர் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக ஏற்றம் பெற்றுவிடுவானுயின், இந்தத் தமிழ் நாடு எங்கிலும் அவனது அதிகாரம் பரவும்.

பிற்பாடு அந்த ராமசாமியே மத்திய அரசாங்கத்தின் உள்துறை மந்திரியாகப் பதவி ஏற்பானுனல், இந்தப் பாரத தேசம் முழுவதும் அவன் செல்வாக்குப் பரவுகிறது.

அந்த மந்திரிப் பதவியைவிட்டுவிட்டு. அவன் ஐக்கிய நாடுகளின் சபையில் காரியதரிசியாகிவிட்

டான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது இந்த அகில உலகமும் அவனது அதிகார வரம்புக்கு உட்பட்டுவிடுகிறது.

இதோ பாருங்கள்:

சுப்பையர் மகன் ராமசாமி, தன் வீட்டையும் இனத்தையும் தியாகம் செய்தான்; அவனுக்குச் சாலையில் செல்லும் பெரிய மனிதர்கள் எல்லாம் கட்டுப்பட்டு நடந்தார்கள்.

அவன் சாலையைத் தியாகம் செய்தான்; நகர் முழுவதும் அவனுக்குக் கட்டுப்பட்டு நடந்தது.

நகரைத் தியாகம் செய்தான்; தமிழ்நாடு பூராவும் அவனது அதிகாரம் பரவியது.

தமிழ்நாட்டைத் தியாகம் செய்தான்; பாரதம்முழுவதிலும் அவன் செல்வாக்கு விரிவடைந்தது.

கடைசியாக, அவன் பாரதத்தையே தியாகம் செய்தான்; உலகிலுள்ள சகல நாடுகளும் அவனுக்கு மரியாதை செலுத்தின.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

நாம் எந்த அளவுக்கு நம் தன்னலத்தைத் தியாகம் செய்கிறேமோ, அந்த அளவுக்கு நம் சீரும் சிறப்பும் செல்வாக்கும் வளருகின்றன.

"அதெல்லாமில்லே; சுப்பையர் மகன் ராமசாமிக்கு அவன் வகித்த பதவியைப் பொறுத்து அதிகாரமும் செல்வாக்கும் அதிகரித்தனவே தவிர, அவன்செய்த தியாகத்தைப் பொறுத்து அல்ல!" என்று சொல்லப்படலாம்.

சற்று சிந்தித்துப் பார்த்தால், இது உண்மையல்லவென்பது தெரியவரும். உண்மையில் அவனுடையபதவியின் அடிப்படையே தன்னலமின்மைதான்! எப்படியெனின், அவன் பதவியிலிருக்கும் போது, தன் குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லது தன் இனத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக ஒருவனுக்குச் சலுகை காட்டுகிறுன் எனத் தெரிய வருமாயின், உடனே அந்தப் பதவியே போய் விடுகிறது!

ஏன் அப்படி?

பதவியும் தன்னலமும் ஒன்றுக்கொன்று அவ்வளவு முரணனவை. ஒன்று இருக்குமிடத்தில் மற்ருென்றுக்கு இடமில்லை.

போலீஸ் இலாகாவிலோ அல்லது இதர அரசாங்க இலாக்காக்களிலோ வகிக்கும் பதவி மட்டும்தான் இப்படியென்று எண்ண வேண்டாம். உலகிலுள்ள எல்லாப் பதவிகளுமே இப்படித்தான். புராணங்களில் பேசப்படும் கைலாச பதவி அல்லது வைகுண்ட பதவியிலிருந்து, சாதாரணப் பஞ்சாயத்துத் தலைவர் பதவி வரையில், இதுவே தான் நிரந்தரமான நியதி.

ஒரு பள்ளிக்கூட ஆசிரியர் தன் இனத்தைச் சேர்ந்த பையன் ஒருவனுக்கு வேண்டுமென்றே அதிக மார்க் போடுவாராயின், அவரை மற்ற பையன்கள் மதிக்க மாட்டார்கள்.

ஓர் அரசியல் தலைவர் தமது மொழியினர் அல்லது மாவட்டத்தினருக்கு மட்டுமே அபிமானத்தோடு தொண்டாற்றி வருவாராயின், அவரை மற்ற மொழியினரும் மாவட்டத்தினரும் தம் தலைவராக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஒரு குறிப்பிட்ட மதத்தில் பற்றுடையஒருவர், எல்லாச் சமயங்களையும் பற்றிய ஒரு பொதுவான ஆராய்ச்சி செய்வாராளுல், அந்த ஆராய்ச்சியின் முடிபுகளை மற்ற சமயத்தினர் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

ஒரு குறிப்பிட்ட மொழியில் பற்றுடைய ஒருவர், எல்லா மொழிகளையும்பற்றி ஒரு பொதுவான ஆராய்ச்சிசெய்வாரானால், அந்த ஆராய்ச்சியின் முடிபுகள் எவ்வளவு நியாயமானவையாய்த் தோன்றியபோதிலும், அவற்றை மற்ற மொழியினர் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

எனவே, ஒரு குறிப்பிட்ட மொழியிலோ, மதத்திலோ, இனத்திலோ, நாட்டிலோ மட்டுமே ஒருவன் பற்றுடையவனாயிருத்தல், அவனது உயர் தகுதிக்கே ஊனம் விளைவிப்பதாயிருக்கிறதல்லவா!

காரணம், பற்றின் விளைவாக மனிதன் உள்ளத்தில் பாரபட்சம் தோன்றுகிறது; பாரபட்சத்திலிருந்துதான் அநீதிகள் பிறக்கின்றன; அதனாலேயே, இத்தகைய அபிமானங்களுக்கு ஆளானவன் உயர்ந்த பதவிகளை வகிப்பதற்கு தகுதியற்றவனாகக் கருதப்படுகிறான்.

அபிமானம் என்பது தன்னலத்தின் ஒரு வித மாறு வேடம் தானே? அந்தத் தன்னலம் யாருக்கு இல்லையோ, அவனே தலைசிறந்த பதவிகளை வகிக்கத் தகுதியுடையவனாகிறான்.

இன்னும் சொல்லப்போனால், தன்னலமற்றவனைப் பதவிகள் தாமாகவே தேடி வந்து அடைகின்றன.

எனவே, தன்னலமின்றி வாழ்வதுதான் ஒருவனது தன்னலத்துக்கே உகந்ததென்று, அதாவது அவனுக்குப் பேரும் புகழும் பெருமையும் செல்வாக்கும் தேடித்தரக் கூடியதென்று, தெளிவாகத் தெரிகிறதல்லவா? ●

நாம் தயாராக இருக்கிறோம்!

மதுரை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த
தேசிக பரமாச்சார்ய ஸ்வாமிகள்

அரசாங்க அவைகளிலும், நீதி மன்றங்களிலும், பள்ளிக்கூடங் களிலும், பொதுமேடைகளிலும், எந்த எந்த இடங்களில் யார் யார் இருக்கத் தகுதியுடையவர் என்ற ஒரு நியதியும், ஒழுங்கும், கட்டுப்பாடும்இருக்கும்பொழுது;

இவர்களையெல்லாம் பிறக்கவும் வாழவும், பதவிகளில் ஏற்றவும், பதவியிலிருந்து இறக்கவும், இப் புவியிலிருந்தே நீக்கவும் செய் கின்ற இராஜாதி ராஜன் வீற்றி ருக்கிற கோயில்களில் மட்டும், அதற்குரிய நியதியும், ஒழுங்கும், கட்டுப்பாடும் இருக்கக் கூடா தென்ற போராட்டத்தில் மடாதி பதிகளும் ஈடுபடத் துணிவார்கள் என்றால்;

என்னே இவர்தம் விபரீதப் போக்கு!

ஒருவன் கடவுள் இல்லை யென்பது, இப்புவியில் பிறப் பதற்குக் காரணமாயிருந்த தந்தையாரையும் தாயாரையும் நேரே காணாத காரணத்தினால், "எனக்குத் தந்தையும்கிடையாது, தாயாரும்கிடையாது; நானாகவே வந்துஉதித்து விட்டேன்" என்று சொல்வது எவ்வளவு பேதை மையோ, அவ்வளவு பேதைமை யுடைய காரியமாகும். இவ்வுல கத்திலுள்ள பெற்றோர்கள் நமக் குப் பாரமுள்ள சட்டை போன்ற உடலைக் கொடுக்கவும் வளர்க் கவும், கடவுளால் நியமிக்கப் பெற்ற தாதியர்கள் ஆகிறார்கள். ஆனால் உண்மையில்கடவுள் தான் நமக்கு எல்லாப் பிறவிகளுக்கும் உண்மையான உடலைக் கொடுத்த அம்மையும் அப்பனும் ஆகிறார்.

இந்தப் பேருண்மையையும், பெறுதற்குரிய பகுத்தறிவையும், அதற்கு வேண்டிய அபூர்வமான கருவியையும், நாம் வாழ்வதற்கு வேண்டிய போகப்பொருள்களை யும் கொடுத்து;

நம்மை மண்ணுலகில் பிறக்க வும், வாழவும், இறக்கவும், இறந்தபின் தொடர்ந்துவாழவும், மனிதன் அனுபவ அறிவு பெற் றுத் தெய்வத் தன்மை அடையும் வரை திரும்பத் திரும்ப அவனைப் பிறக்கவும் வைக்கிற ஒப்பற்ற காருண்யமுள்ள கடவுள் ஒருவர் இருககிறார் என்றபேருண் மையையும்;

எப்படிப்பட்டவரையும், எத் தனையோ அனுபவப் பிரமாணங் களாலும், அனுமானப் பிரமா ணங்களாலும், சர்வ சமய நூற் பிரமாணங்களாலும் ஒப்புக் கொள்ளுமாறு நிரூபிக்கவும், வெற்றிபெறவும், நாம் திருவருள் துணைகொண்டு எப்பொழுதும் தயாராக இருக்கிறோம். ○

ஸ்ரீ லலிதா ஸ்தவராஜம்

ஸ்ரீ வித்யா மார்த்தாண்ட
பிரம்மஸ்ரீ C.V. ஸ்வாமிசாஸ்திரிகள்

அக்னி குண்டத்திலிருந்து ஆவிர்பாவம் அடைந்த ஸ்ரீ லலிதாம்பிகையின் அருட்பார்வை, தேவர்களை முன்னிலும் பன் மடங்கு வலிமை படைத்தவர்கள் ஆக்கியது. பக்திப் பரவசத்தால் கசிந்துருகிய சிந்தையர்களாய், பரதேவதையை அவர்கள் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்யலாயினர்:—

''ஹே தேவீ! ஜகன்மாதாவே! மேலானவற்றிற்கெல்லாம் மேலானவளே! மங்களத்திற்கு இருப்பிடமானவளே! காமேஸ்வரனது பத்தினியே! காமாக்ஷீ! சுந்தரீ! எல்லாத் தேவர்களாலும் ஆராதிக்கத் தகுந்தவளே! காமேஸ்வரீ! பக்தர்கள் விரும்பியதையெல்லாம் தருபவளே! பிரம்ம ஸ்வரூபிணீ! பிரம்மானந்த ரஸ வடிவினளே! நாராயணீ! பரஸ்வரூபிணீ! உலகனைத்திற்கும் ஆனந்தத்தை அளிப்பவளே! ஸ்ரீகண்டனுக்குப் பிரியமானவளே! லலிதாம்பிகே! வெற்றியைத் தருபவளே! பூர்ணமான ஐஸ்வர்யத்தை அருள்பவளே! நீ ஸர்வோத்கிருஷ்டமாக விளங்குவாயாக!

''காலத்தின் ஸ்வரூபமாக இருப்பவளே! ஆயிரம் கால்கள், ஆயிரம் கைகள், ஆயிரம் முகங்கள், ஆயிரம் கண்கள், இவற்றோடு விளங்குபவளே! அணுவுக்கும் அணுவானவளே! மஹத்திற்கும் மஹத்தானவளே! பரத்திற்கும் பரமானவளே! தேஜசுக்கும் தேஜசாக இருப்பவளே! உனக்கு நமஸ்காரம்!

''அதலம் உனது கால்கள். விதலம் உனது முழங்கால்கள். ரஸாதலம் உன் இடுப்பு. பூலோகம் உன் வயிறு. புவர்லோகம் உன் இருதயம். ஸ்வர்கம் உன் முகம். சந்திரனும் சூர்யனும் அக்கினியும் உன் கண்கள். திக்குகள் உன்கைகள். வாயு உன் மூச்சு. வேதங்கள் உன் வாக்குகள். உலகத்தைப் படைத்தல் உன் விளையாட்டு. சின்மயனான சிவன் உன் தோழன். ஆனந்தமே உனக்கு ஆஹாரம். சாதுக்களின் இருதயமே உனக்கு இருப்பிடம்.

"காணப்படுவனவும் காணப் படாதனவுமான பிரபஞ்சங்கள் அனைத்தும் நின் வடிவம். ஆகாயமே நின்கேசம். அதிலுள்ள நக்ஷத்திரங்களே உனக்குப் புஷ்பங்கள். தர்மம், ஞானம், ஐஸ்வர்யம், வைராக்கியம் இந்நான்கும் நின் கைகள். அதர்மம், அஞ்ஞானம், அனைஸ்வர்யம், அவைராக்யம் இவை ஆயுதங்கள். இயமம் முதலியவை நின் கைவிரல்கள். நியமம் முதலியவை நின் கால்விரல்கள். உலகுக்கு உயிரூட்டுபவையான ஸ்வாஹா ஸ்வதா என்னும் இவ்விரண்டு மந்திரங்களும் நின் ஸ்தனங்கள்.

"பிராணுயாமம் உன் நாசி. ஸரஸ்வதியே உனக்கு நாவாக இருக்கிருள். பிரத்யாஹாரம் இந்திரியங்களாகவும், தாரணை மனமாகவும், தியானம் புத்தியாகவும், ஸமாதி இருதயமாகவும் உன் பால் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

"விருக்ஷங்களை உரோமங்களாகவும், உஷத்காலத்தைச் சேலையாகவும், இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் முக்காலங்களையும் உனது அழிவற்ற சரீரமாகவும் நீ பெற்றிருககிருய்!

"வேள்வி வடிவினளாகவும், உலகத்தைத் தாங்குபவளாகவும், எங்கும் நிறைந்தவளாகவும், எல்லாவற்றையும் காப்பவளாகவும் உள்ள நீயே அனைத்திற்கும் ஆதாரம் என்பதை, யாவரும் அறிவதில்லை. நீ எல்லோருடைய உள்ளத்திலும் இருந்தபோதிலும் கூட, மாயையின் காரணமாக உன்னை அறிந்து கொள்ளமுடிவதில்லை.

"நாமரூபமயமான பிரபஞ்சத்தை நீ விளையாட்டாகப் படைக்கிருய்! படைத்தும் அந்த நாம ரூபங்களில் பற்றில்லாமல் இருக்கிருய். உலகினரின் விருப்பங்களை அறிந்து நிறைவேற்றுகிருய்! அத்தகைய சர்வ சக்தியான உனக்கு நமஸ்காரம்!

"அக்னி, சூரியன், சந்திரன், வாயு, பிருதிவி முதலியவை எவளுடைய கட்டளையால் இயங்கிக் கொண்டிருக்கின்றனவோ, அந்த தேவிக்கு நமஸ்காரம்.

"அளவிடற்கரிய மாபெரும் சக்திவடிவினளாகிய எவளால் பூமிமுதல் ஆகாயம் வரையிலான பஞ்சபூதங்களும் தாங்கப்படுகின்றனவோ, எவளிடத்தில் சூரியன் உதிக்கிருனே, அந்த தேவிக்கு நமஸ்காரம்.

"ஸ்வர்கமும் அந்தரிக்ஷமும் எவளுக்குள்ளே அடங்கியிருக்கின்றனவோ, இந்த உலகு எங்கும் எவள் நீக்கமற நிறைந்திருக்கிருளோ, அந்த தேவிக்கு நமஸ்காரம்.

"ஸமஸ்தப் பிரபஞ்சங்களும் எவளிடத்தே தோன்றி நின்று ஒடுங்குகின்றனவோ, அந்த தேவிக்கு நமஸ்காரம்.

"இரஜோ குணத்தால் படைப்பவளாகவும், ஸத்வ குணத்தால் காப்பவளாகவும், தமோ குணத்தால் அழிப்பவளாகவும், அதே சமயத்தில் இம் முக்குணங்களையும் கடந்த நிர்குண வடிவினளாகவும் விளங்குகிற அந்த தேவிக்கு நமஸ்காரம்.

"உலகனைத்திற்கும் ஒரே தாயாகவும், ஒரே தந்தையாகவும், ஸகல துவந்துவங்களின் வடிவினளாகவும் இருக்கின்ற அந்த தேவிக்கு நமஸ்காரம்.

"உத்தமமான குருஸ்வரூபிணியாகவும், வாக்விபூதியின் வடிவினளாகவும், லக்ஷ்மீயாகவும், சாம்பவியாகவும், ஸந்தோஷரூபிணியாகவும், ஸர்வசக்தியாகவும் உள்ள அந்த தேவிக்கு நமஸ்காரம்.

"ஆதியந்தமில்லாததாயும், பாஞ்ச பௌதிகம் அல்லாததாயும், மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டததாயும், அத்விதீயமாயும் இருக்கின்ற உனது பெருமையை, அன்னையே, நாங்கள் எவ்வாறு வர்ணிப்போம்!

"வேதஸ்ரூபிணீ! மாயாஸ்வரூபிணீ! மந்திரஸ்வரூபிணீ! ஸர்வஸ்வரூபிணீ! எல்லா ஜடசேதனங்களுக்கும் உள்ளே நின்று, அவற்றை இயக்கிக்கொண்டிருப்பவளே! எங்களுக்கு இன்னருள் பாலிப்பாயாக!"

இந்திரனும் தேவர்களும் அம்பிகையை இவ்வாறு ஸ்தோத்திரம் செய்து, அவளது பாதாரவிந்தத்தில் சரணடைந்தனர்.

அம்பிகை அவர்களுடைய பக்திக்கு வசப்பட்டவளாகி, "நீங்கள் பயப்பட வேண்டாம். உங்கள் பகைவனாகிய பண்டாசுரனை நானே ஸம்ஹாரம் செய்து, மூன்று உலகங்களுக்கும் விரைவில் விடுதலை அளிக்கிறேன். நீங்கள் சிறிதும் கவலையில்லாமல் மகிழ்ச்சியோடு இருங்கள்!" என்று திருவாய் மலர்ந்தருளினாள்.

அத்துடன், "நீங்கள் செய்த இந்த ஸ்தோத்திரத்தை எந்த மனிதர்கள் பயபக்தியுடன் படிக்கிறார்களோ, அவர்கள் தர்மம், ஐஸ்வர்யம், புகழ் இம்மூன்றுக்கும் என்னருளால் பாத்திரர் ஆகிறார்கள். அவர்கள் வித்யாவினய ஸம்பன்னர்களாகவும், ஆரோக்யவான்களாகவும், மிகச்சிறந்த புத்திர மித்திர களத்திரங்களைப் பெற்றவர்களாகவும், இந்நிலவுலகில் நெடுங்காலம் வாழ்ந்திருப்பார்கள்!" என்றும், ஸ்ரீபரதேவதை ஆசி வழங்கினாள்.

ஆவியுலகத்தோடு தொடர்பு கொள்ளலாமா ?

திருப்பராய்த்துறை
ஸ்வாமி
ஸ்ரீ சித்பவானந்தர்

இறந்தவர்களின் ஆவிகளை Planchet பலகை மூலம் இவ்வுலகுக்கு வரவழைத்துப் பேசலாம் என்கிறனர் சிலர். இவ்விதம் பேசிக்கொண்டும் இருக்கிறார்கள் என்கின்றனர் சிலர். இவ்விஷயம் எவ்வளவு தூரம் உண்மை? உண்மையாகவே இறந்தோரின் ஆத்மாக்கள் வந்து பேசுகின்றனவா? இறந்த பின்பு எத்தனை வருஷ காலம்வரை அவ் ஆவிகள் அந்தப் பலகையில்வரும்? ஆவிகளுக்கு நம் வருங்காலத்தைக் கூற சக்தி உளதா? அன்றி நமக்கு அவ் ஆவிகள் ஏதாவது நன்மை செய்ய முடியுமா? — இதுகேள்வி.

ஸ்தூல சரீரத்தை நீத்துவிட்ட ஆத்மாக்கள், ஸ்தூல சரீரத்திலிருக்கும் நம்மோடு தொடர்பு வைக்கின்றன என்பதை, இரண்டு முறைகளில் மக்கள் நம்பி வருகிறார்கள்.

சிலரைப் பிசாசு பிடித்துக் கொள்கிறது என்பது ஒரு முறை.

இன்னும் சிலரிடம், தேகவியோகமானவர்கள் பலகையின் மூலமாக எழுதிப் பேசுகின்றனர் என்பது மற்றொரு முறை.

இரண்டாவது முறை ஆகிய பிளான்செட் (Planchet) பலகையின் மூலம் எழுதித் தெரிவித்தல், மிக அண்மையில் வந்துள்ளது. இதில் பலர் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். இவ்விரு முறைகளையும் சேர்ந்தே ஆராய்ந்து பார்ப்போம்.

செத்தவர்கள் எல்லாரும் பிசாசு ஆய்விடுவதில்லை என்பது கோட்பாடு. அகால மரணத்தில் மாய்கின்றவர்களில் பலர் பிசாசு ஆய்விடுகின்றார்களாம். அத்தகையவர்கள் பெரிதும் மன உறுதியில்லாத பெண்களை வந்து பிடிக்கின்றார்கள் என்று மக்கள் நம்பி வருகிறார்கள்.

பெண் பேய்கள் ஆண்களைப் பிடிக்கின்ற செய்தி உலகில் அதிகம் இல்லை. பெண்களுக்கிடையிலும் மன உறுதி படைத்தவர்களைப்பேய் ஒன்றும் செய்வதில்லை. பேய் பிடித்தவர்களுடைய இயல்புகளை ஆராய்ந்து பார்த்தால், பேய் பிடித்தல் என்பது ஒருவிதமான மனநோய் என்பது வெளியாகும்.

தனக்கு விளங்காத பாஷைகளையும், பேயின் வசப்பட்டிருக்

கும் பொழுது பேசுவதைக் கேட்கலாம். பேயின் வசப்பட்டு இருப்பது என்பது, உண்மையில் மனது ஒருவித அசாதாரணமான நிலையை அடைந்து விடுதலாம். அந்த அசாதாரணமான மனநிலையில், மனதுக்குப் புதிய ஆற்றல்கள் தாற்காலிகமாக வந்து விடுகிறது. அதைத் தவிர, பேய் என்னும் ஆத்மா சரீரத்தில் பிரவேசித்து ஆதிக்கம் செலுத்துகிறது என்பதற்கு ஆதாரம் இல்லை.

தேகவியோகம் ஆய்விட்ட ஆத்மாக்களும், பெரிதும் மன உறுதியில்லாத மக்கள் மூலமாகவே எழுதிப் பேசி வருகிறார்கள் என்பதைக் காணலாம். அத்தகைய ஆத்மாக்கள் பேச்சுக்கு உடந்தையாய் இருப்பவர்களை, ஆங்கிலத்தில் Medium என்று அழைப்பார்கள்.

யார் ஒருவன் மீடியம் ஆக ஒத்து அமைகின்றானோ, அவன் நாளுக்கு நாள் இச்சா சுதந்தரத்தை இழந்து விடுகின்றான். மனவலிவு அற்றவன் ஆய்விடுகின்றான். அவன் முதலில் ஏதேனும் ஓர் ஆத்மாவுடன் தொடர்பு கொள்கிறான். நாளடைவில் பல ஆத்மாக்கள் அவன் மூலம் செய்திகளைத் தெரிவிக்க ஆரம்பிக்கின்றன. அவனுடைய மன வலிவு குறைந்துகொண்டே வருவது அதற்குக் காரணமாகிறது. விஷயத்தைத் துருவி ஆராய்கின்றவர்களுக்கு இவ்வுண்மை புலப்படும்.

உயிர்வாழும் மனிதன் ஒருவன், தனது இச்சா சுதந்தரத்தை எல்லாம் இழந்துவிடும்படி, அவன் வேறு ஒரு ஆத்மாவின் கையில் கருவியாக அமைவது பாராட்டத் தக்கதன்று. உயிர் வாழ்ந்திருக்கும் பொழுதே ஒருவனைச் சிறிது சிறிதாகக் கொலை செய்வதற்குச் சமானமாகும் இது.

இந்த மனிதன் மூலம் நமக்குச் செய்திகளைக் கொடுக்கும் ஆவி உலகத்தவர், அலாதிசக்தி வாய்ந்தவர்கள் என்று சொல்லுதற்கில்லை. அவர்கள் உண்மையையே பேசுகிறார்கள் என்று சொல்லுவதற்கும் இடமில்லை. நமது எதிர்காலத்து நிலையை அவர்கள் அறிந்து கொள்கிறார்கள் என்று கூறுவதற்கும் இடமில்லை. நாளை ஒரு நாளைக்கு வரப்போகிற விஷயங்களை யெல்லாம், இன்றைக்குச் சரியாகச் சொல்லுதற்கு ஆவி உலகத்தவர்க்கு சக்தி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தால், அவர்களுக்கு அச்சக்தி இல்லை யென்பது நன்கு வெளியாகும்.

நமக்கு எந்த விதத்திலும் உதவி பண்ணுதற்கு ஆவி உலகத்தவர்களுக்கு இயலாது. இம் மண்ணுலகில் இருக்கும் பொழுது பெற்ற அறிவு அல்லது ஆற்றலுக்கு மேல், புதியது எதையும் அவர்கள் செத்தவுடன் பெற்று விடுவதில்லை. ஏகதேசம் உண்மை அமையப்பெற்ற வித விதமான செய்திகளைக் காகிதத்தில் அவர்கள் எழுதுவதைக் காணலாம்.

ஆவி உலகத்தோடு பேச்சு என்பதும், உண்மையில் மீடியம் அல்லது கருவியாக அமைந்த மனிதனது அசாதாரண மனநிலை என்று யூகிப்பதற்கு இடந்தருகிறது. பேய் ஆடுவது ஒருவித மனநோய் என்றால், ஆவி உலகத்தோடு இணக்கம் வைப்பது மற்றொரு விதமான மனநோய்ஆகும். தத்துவ ஆராய்ச்சி போன்ற கேள்விகளை ஆவி உலகத்தவரிடம் கேட்டால், அவர்கள் தக்க விடை

கொடுப்பதில்லை. கருவியாக அமைகின்றவனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அசாதாரணமான மனநிலையில் உயர்வு ஏற்படுகின்றதோ, அதற்கேற்றபடி ஏகதேசம் உண்மைகள் அடங்கிய விடைகளை ஆவி உலகத்திலிருந்து பெறலாம்.

ஆவி உலகம் என்பது, உண்மையில் கருவியாக அமைகின்றவனுடைய அசாதாரணமான மனநிலையேயாம். இதில் நம்பிக்கை வைக்கின்றவர்கள், பெரிதும் தமது விவேகத்தை இழந்துவிடுகின்றனர். மனிதனை நல்ல மனிதன் ஆக்குதற்காகிய எந்த விதமான உதவியையும், ஆவி உலகத்திலிருந்து நாம் பெறமுடியாது. இயற்கையின் நடைமுறையைப் பற்றிய புதிய எந்த மர்மத்தையும், ஆவி உலகத்திலிருந்து நாம் பெறமுடியாது.

நல்லறிவுக்குப் பங்கமாய் அமையும் இந்த ஆராய்ச்சியைச் சிறிதும் பொருட்படுத்தாது விட்டு விடுவதே, நாம் செய்யக் கிடக்கும் கடமையாகும். தூய வாழ்வும் நேர்மையான முயற்சியும் வேண்டுகின்ற அன்பர்கள், ஆவி உலகத்தைப் பற்றிய ஆராய்ச்சியை அறவே புறக்கணித்து விடுவார்களாக.

●

ஸ்ரீ சைதன்யரின் தென்னிந்திய யாத்திரை

டாக்டர் சம்பிதானந்த தாஸ்

[பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், வங்காளத்திலே தோன்றிய ஓர் அவதார புருஷர் ஸ்ரீசைதன்ய மஹாப்பிரபு. வங்காள வைஷ்ணவர்கள் அவரை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வாகவே கருதி வழிபடுகிறார்கள். அவருடைய வாழ்க்கைக்கும் உபதேசங்களுக்கும் ஏற்ப வாழும் உண்மையான வைஷ்ணவனுக்கு, சாதி வேறுபாடோ இனவேறுபாடோ கிடையாது. அவரது தென்னாட்டு யாத்திரை இக்கட்டுரையில் விவரிக்கப்படுகிறது.

— ஆசிரியர்.]

கி. பி. 1510-ஆம் ஆண்டில், ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீ சைதன்யர் தென்னிந்தியாவுக்கு யாத்திரை புறப்பட்டார். அவர் பூரியை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு, ஜகந்நாதர் ஆலயத்துக்குச் சென்று பகவானை வழிபட்டு, பக்தர்களும் சீடர்களும் பின் தொடரக் கீர்த்தனைக் கோஷ்டியுடன் கோயிலை வலம் வந்தார். கோயிலிலிருந்து கடற்கரையோரமாக அலலநாதாவை நோக்கி ஸ்ரீசைதன்யர் புறப்பட்டார்.

சீடர்களும் பக்தர்களும் அலல்நாதாவரையில் சைதன்யருடன் சென்றார்கள். நாள் முழுவதும், மக்கள் ஒவ்வொருவராக சைதன்யரை வந்து தரிசித்து அவருடைய ஆசியைப் பெற்று, வைஷ்ணவ தர்மத்தை ஏற்றவண்ணமாகவே இருந்தார்கள். அன்று அலல்நாதர் கோயிலில் சைதன்யர் தம்முடைய கோஷ்டியுடன் ஆடியும் பாடியும் பகவானின் நினைவில் ஆழ்ந்தார்.

அலல்நாதர் கோயில், பதினொன்று அல்லது பன்னிரண்டாவது நூற்றாண்டின் சிற்பக் கலையைச் சேர்ந்த கற்கோயில். ஆழ்வார்நாதர் என்னும் சதுர்புஜ விஷ்ணு விக்கிரகத்தை ஆழ்வார் ஒருவரே இங்கே பிரதிஷ்டை செய்தார் என்று சொல்லுகிறார்கள்.

அடுத்த நாள் அலல்நாதாவை விட்டு, சைதன்யர் தென்னிந்திய யாத்திரையைத் தொடங்

கிறார். போகும் வழி முழுவதும் மக்களிடையே வைஷ்ணவ தர்மத்தையும் பக்தியையும் சைதன்யர் பரப்பிக்கொண்டே சென்றார். எந்தக் கிராமங்களின் வழியாக அவர் சென்றாரோ, அந்தக் கிராமங்களில் உள்ள அனைவரும் அவருடைய பாணியிலே கீர்த்தனங்களைப் பாடியும் ஆடியும் பகவானை வழிபடத் தொடங்கினார்கள்,

அலல்நாதாவை விட்டு நீங்கியதும், சைதன்யர் தரிசித்த மிக முக்கியமான ஸ்தலம் கூர்மாசலமாகும். இங்கே இராமாநுஜர் பிரதிஷ்டை செய்த கூர்மதேவர் ஆலயத்துக்கு, சைதன்யர் சென்றார்.

'பூரியிலிருந்து கூர்மாசலம் வந்து சேர்ந்த இராமாநுஜர், இங்கே கோயிலில் சிவலிங்கம் இருப்பதைக்கண்டு, கோயில் முன் உபவாசம் கிடந்தார்' என்று 'பிரபந்நாமிர்தம்' என்னும் இராமாநுஜரின் சரித்திரம் சொல்லுகிறது. தீவிர வைஷ்ணவர்கள் சிவன் கோயில்களுக்குச் செல்லவேமாட்டார்கள். அப்படித் தப்பித் தவறிச் சென்றுவிட்டாலும், விஷ்ணுவைத் தவிர மற்ற தெய்வ பிம்பங்களைக் கண்டுவிட்டாலும், பிராயச்சித்தமாக உபவாசம் கிடப்பது சம்பிரதாயம்.

இந்த வழக்கத்தை யொட்டி உபவாசம்இருந்தஇராமாநுஜரின் கனவில் கூர்ம விஷ்ணு தோன்றி, அந்த ஊர் மக்கள் அறியாமையால் சிவன் என்று எண்ணித் தம்மை வழிபடுகிறார்கள் என்றும், உண்மையில் சங்கு, சக்கரம், தாமரையுடன் கூடிய விஷ்ணுவே அங்கே எழுந்தருளியிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், சந்நிதிக்கு வந்து தரிசனம் செய்து கொள்வதுடன், சிறிது காலம் அர்ச்சகராகவும் பணிசெய்யும்படி ராமாநுஜருக்குப் பகவான் கட்டளையிட்டார்.

கூர்மதேவரின் கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. ஆனால் கூர்மதேவர் மேற்குத் திசைப் பக்கமாகச் சேவை தருகிறார். இந்த அமைப்பு, பார்ப்பவர்களுக்கு விசித்திரமாகவே தோன்றும். இதற்குக் காரணமாக இங்கே ஒரு கதை வழங்குகிறது.

ஒரு சமயம், 'கிருஷ்ண கர்ணாம்ருதம்' என்னும் புகழ் பெற்ற நூலை எழுதிய பில்வமங்கள், இந்தக் கோயிலுக்கு வந்திருந்தார். எளிமையினாலும் பணிவினாலும் அவர் இந்த மூர்த்தியை நேருக்கு நேர் நின்று தரிசிக்காமல், பின்புறமாக இருந்து சேவித்தார். இதைக் கண்ட கூர்மதேவர், உடனே கருணையுடன் தாமும் திரும்பி அவருக்கு நேராகவே காட்சி அளித்தார். அன்றிலிருந்து கூர்மதேவர் விக்கிரகம் அப்படியே அமைந்துவிட்டது.

இந்தப் பிரதானக் கோயிலுக்கு இடப் புறத்தில், நான்கு கரங்களுடன் கூடிய பில்வமங்களுக்கு ஒரு தனிக் கோயில் அமைக்கப் பெற்றிருக்கிறது. ஸ்ரீவைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் பகவான் இலக்ஷ்மிநாராயணருக்குக் கைங்கரியம் செய்யும் நித்யசூரிகள் அனைவருக்கும் நான்கு கரங்கள் உண்டு என்பது, ஸ்ரீவைஷ்ணவர்களுடைய சம்பிரதாயம். எனவே, இங்கே பில்வமங்களுக்கும் நான்கு கரங்களை அமைத்திருக்கிறார்கள். பில்வமங்களின் சமாதியின் மேலேயே இந்தக் கோயிலை எழுப்பியிருக்கிறார்கள்.

கூர்மதேவர்கோயிலில்ஒருபுறம் இராம லட்சுமணர், சீதை ஆகியோருக்காக ஒரு சந்நிதியும், மறுபுறம் கோவிந்தருக்காக ஒரு சந்நிதியும் இருக்கின்றன. இராமாநுஜர், திருமங்கைஆழ்வார், நம்மாழ்வார் ஆகியோருடைய சிலைகளும் வைக்கப் பெற்றிருக்கின்றன.

ஸ்ரீசைதன்யர் கீர்த்தனங்களைப் பாடியும் ஆடியும் பக்திப் பரவச நிலையில் இந்தக் கோயிலுக்குச் சென்றார். அவருடைய பக்திச் சிறப்பைக் கண்ட கோயில் அதிகாரிகள், மிக்க மரியாதையுடன் அவரை வரவேற்றனர். கூர்மர் என்னும் வைதிகப் பிராமணர் ஸ்ரீசைதன்யரைத் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்று விருந்தளித்தார். அவருடைய பாதத்தைப் பூசித்த நீரைத் தீர்த்தமாகவும் கொண்டார். சைதன்யர் உண்டு எஞ்சிய உணவையே உட்கொண்டார். அவருடைய குடும்பம் முழுவதுமே ஸ்ரீவைஷ்ணவ தர்மத்தைத் தழுவியது. சைதன்யரிடம் அவருக்குப் பக்தி அதிகரித்தது. யாத்திரை முழுவதும் அவருக்குத் துணையாகத் தாமும் வருவதாகவும், ஒரு கணமும் பிரியாமல் இருப்பதாகவும் சைதன்யரிடம் கூர்மர் தெரிவித்தார்.

ஆனால் அவர் தம்முடன் வருவதற்குச் சைதன்யர் அநுமதி தரவில்லை. அதற்குப் பதிலாக, அந்த ஜில்லாவுக்கு அவரையே ஆசார்யராக நியமித்து, வைஷ்ணவ தர்மத்தைப் பரப்பும்படி கட்டளையிட்டார்.

''வீட்டிலேயே இருந்து எப்பொழுதும் கிருஷ்ண நாமத்தைச் சொல்லிக் கொண்டிருங்கள். நீங்கள் சந்திக்கும் எல்லோருக்கும் கிருஷ்ணருடைய தத்துவத்தை விளக்குங்கள். ஆத்மிக போதனையாளராக இருந்து இந்தப் பிரதேசத்துக்கு நன்மை செய்து கொண்டிருங்கள். இந்தச் சம்சார சாகரத்தின் துன்பங்கள் எதுவும் உங்களைப் பாதிக்கமாட்டா. நான் திரும்பிவந்ததும் என்னை மீண்டும் சந்தியுங்கள்'' என்று கூர்மருக்குச் சைதன்யர் கட்டளையிட்டார்.

இங்கே சைதன்யர் ஓர் அற்புதத்தை நிகழ்த்தினார். பாகவதத்தில் சிறந்த பண்டிதரான வாசுதேவர் என்பவர், சைதன்யரைத் தரிசித்துவிட்டுச் செல்வதற்காக வந்தார். குஷ்டநோயால் பீடிததிருந்த அவரைக் கண்டதும், சிலர் அருவருப்பால் சற்று நகர்ந்துகொண்டனர். ஆனால் சைதன்யரோ அவரை அப்படியே ஆலிங்கனம் செய்தார். அடுத்த கணமே வாசுதேவருடைய நோய் நீங்கிப் பழைய வனப்பையும் அவர் பெற்றார்.

''எப்பொழுதும் கிருஷ்ண நாமத்தையே உச்சரித்துக்கொண்டிருங்கள். கிருஷ்ணனின் தத்துவத்தைப் பரப்பி எல்லா ஆத்மாக்களையும் காப்பாற்றுங்கள். பகவான் கிருஷ்ணன் உங்களை உடனே ஏற்றுக்கொள்வார்'' என்று அவருக்குச் சைதன்யர் உபதேசம் செய்தார். வாசுதேவரைக் கொடிய நோயிலிருந்து குணப்படுத்திய இந்த அற்புத நிகழ்ச்சிக்குப் பிறகு, சைதன்யரை எல்லோரும் வாசுதேவாம்ருதர் என்றும் அழைக்கலானார்கள்.

கூர்மாசலத்துக்குப் பிறகு சைதன்யர் தரிசித்த முக்கியமான ஸ்தலம் சிம்மாசலம்.

விசாகபட்டணத்துக்கு வடகிழக்கே ஐந்து மைல் தொலைவில் அமைந்திருக்கிறது சிம்மாசலம். இங்கே ஸ்ரீநரசிம்மர் எழுந்திருளியிருக்கிறார்.

சிம்மாசலத்தில் மலையில் உள்ள கோயிலை அடைய எண்ணூறு படிகள் கட்டப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு படியும் அரை அடி உயரம் இருக்கிறது. கோயில் கிழக்குப் பக்கமாக இருந்த போதிலும், நரசிம்மர் மேற்குப் பக்கமே காட்சி தருகிறார். இந்தக் கோயிலில் இருக்கும் ஆண்டாளுக்கும் பூஜைகள் நடைபெறுகின்றன. வைகாசி மாதத்தில், நரசிம்மருக்குச் சந்தனக் காப்பு செய்கிறார்கள்.

சிம்மாசலத்திலிருந்து புறப்பட்டு, ராஜமகேந்திரவரத்துக்கு அருகில் கோதாவரியைக் கடந்து, சைதன்யர் அக்கரையில் சென்று அமர்ந்தார். அங்கே, ஒரிஸ்ஸா மன்னனின்கீழ் ராஜமகேந்திரவரத்தில அதிபதியாக அதிகாரம் செலுத்திவந்த இராயராமானந்தர் எனபவர், ஸ்ரீசைதன்யரை வந்துபணிந்து, அவருக்குச் சீடராக மாறினார்.

ஸ்ரீசைதன்யர் மங்களகிரியை அடைத்தார். கிருஷ்ணா ஜில்லாவில், பெஜவாடாவிலிருந்து ஒரு மைல் தூரத்தில் இது அமைந்திருக்கிறது. மலைமேலே இருக்கும் கோயிலுக்குச் செல்வதற்கு அறுநூறு படிகள் கட்டப்பெற்றிருக்கின்றன. இங்கே வீற்றிருக்கும் நரசிம்மருக்குப் பானக நரசிம்மர் என்று பெயர் வழங்குகிறது. சேவார்த்திகள் நிவேதனத்துக்காகக் கொண்டு வரும் பானகத்தில் பாதியை மட்டும் இந்த நரசிம்மர் ஏற்றுக்கொள்வதாலேயே, பானக நரசிம்மர் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.

மங்களகிரிக்குப் பின்னர் குண்டூர் ஜில்லா வழியாக நிஜாம் ராஜ்யத்தின் எல்லைகளைக் கடந்து, பழைய ஸ்காந்தத்துக்குச் சென்றார். பிறகு கர்நூலிலிருந்து 70 மைல் தொலைவில் இருக்கும் ஸ்ரீசைலம் என்று அழைக்கப்படும் மல்லிகார்ஜுனம் என்னும் தலத்துக்குச் சென்றார்.

பின்னர், கர்நூல் ஜில்லாவில் இருக்கும் மற்றொரு பிரசித்தி பெற்ற நரசிம்ம ஸ்தலமான அஹோபிலத்துக்குச் சென்றார். இங்கே 64 தூண்களால், கோயில் கட்டப்பெற்றிருக்கிறது. அஹோபிலத்தைத் தரிசித்துவிட்டு, தென்திசைப் பக்கமாகத் திரும்பிக் கடப்பை ஜில்லாவில் பெண்ணாறு நதிக்கரையில், கடப்பைக்குப் பத்து மைல் தூரத்தில் இருக்கும் சித்தவட்டம் என்னும் இடத்தை அடைந்தார்.

சைதன்யர், சித்தவட்டத்தில் உள்ள இராமசீதா கோயிலுக்குச் சென்றார். இராமசந்திரருடைய பக்தர் ஒருவர் அவரைத் தம்முடைய வீட்டுக்கு விருந்தாளியாக அழைத்துச் சென்று உபசாரம் செய்தார். பின்னர் திருமடம் என்னும் தலத்துக்குச் சென்று, திரிவிக்கிரம விஷ்ணுவைத் தரிசித்தார். மீண்டும் சித்தவட்டத்துக்குச் சைதன்யர் திரும்பியபோது, இராமசந்திர பக்தரைக் கிருஷ்ண பக்தராக்கினார்.

சித்தவட்டத்துக்கு பிறகு, கடப்பை, வடஆர்க்காடு, நெல்லூர் ஜில்லாக்கள் மூன்றும் சந்திக்கும் எல்லையில், நெல்லூர் ஜில்லாவில் இருக்கும் வேங்கடகிரிக்குச் சைதன்யா விஜயம் செய்தார். அங்கிருந்து சைதன்யர் புறப்பட்டுத் திருப்பதிக்குச் சென்றார்.

அங்கே நான்கு திருக்கரங்களுடன் காட்சிதரும் பாலாஜியையும், கீழ்த்திருப்பதியில் இராமரையும் தரிசித்துக் கொண்டார். பின்னர் காளஹஸ்திக்குச்சென்று, பிரசித்திபெற்ற வாயுலிங்கத்தையும் காளத்திநாதரையும் சேவித்துக் கொண்டார். பிறகு நகரிமலை வழியாகச் சைதன்யர் காஞ்சிபுரம் வந்தடைந்தார்.

அங்கே விஷ்ணு காஞ்சிக்குச் சென்று, நீண்ட தோத்திரம் ஒன்றைப் பாடி வரதராஜப் பெருமாளைத் தரிசித்துக் கொண்டார். இங்கே கிருஷ்ணபக்தியில் திளைத்த வண்ணமே பலரை வைஷ்ணவ தர்மத்தை ஏற்றுக் கொள்ளச் செய்தார்.

இதற்கு அடுத்து சைதன்யர் சென்ற தலம் அநேகமாகத் திருக்கழுக்குன்றமாக இருக்கலாம். இங்கே வேதகிரி என்னும் மலைமீது வேதகீரீசுவரர் கோயில் அமைந்திருக்கிறது. இங்கே

தினந்தோறும் உச்சிக் காலத்தில் கோயில் பூசாரி அளிக்கும் பிரசாதத்தை உண்பதற்காக இரண்டு கழுகுகள் வந்து போவதால், பட்சி தீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

பட்சி தீர்த்தத்திலிருந்து சைதன்யர் விருத்தாசலம் சென்று, அங்கே இருக்கும் சிவாலயத்துக்கும் விஜயம் செய்தார்.

பின்னர் சைதன்யர் அருகில் உள்ள கிராமம் ஒன்றுக்குச் சென்று, அங்கே இருந்த ஏராளமான பிராமணர்களை வைஷ்ணவ தர்மத்தைத் தழுவும்படி செய்தார்.

தமிழ் நாட்டின் இப்பகுதியில் தான், ஸ்மிருதிகள், புராணங்கள், ஆகமங்கள் இவற்றில் ஆழ்ந்த பயிற்சியைப் பெற்ற அறிஞர்கள் பதஞ்சலியின் யோகசாஸ்திரத்தைப் பின்பற்றுபவர்கள், சாங்கியர்கள், மாயாவாதிகள், மீமாம்சகர்கள், நியாயத்தில் நிபுணர்கள், இன்னும் வெல்லமுடியாத பல மதத் தலைவர்கள் முதலியவர்கள் கடுமையாகச் சைதன்யரை எதிர்த்தார்கள். இருந்தபோதிலும், மாற்றாரின் வாதங்களை மறுத்துத் தர்க்கம் செய்து, வைஷ்ணவத்தின் உயர்வை வெற்றிகரமாகச் சைதன்யர் நிலைநாட்டினார். சைதன்யரின் இந்த வெற்றி, தமிழ் நாடு முழுவதும்பரவியது.

இந்தப் பகுதியிலே, ஒரு வனத்தில் புத்த பிக்ஷு ஒருவரும் அவருடைய சீடர்களும், சைதன்யரைப் பொதுக் கூட்டம் ஒன்றிலேயே எதிர்த்து, வாதப் போருக்கு அழைத்தார்கள். கடைசியில் சைதன்யருடைய தர்க்கத் திறமைக்கு முன் அவர்கள் பணிந்தார்கள். ஆனால் அவர்கள் வைஷ்ணவ தர்ம நெறியுடன் இருந்த சைதன்யருடைய வாழ்க்கையையே மாற்றி விடச் சதி செய்தனர். அதிர்ஷ்டவசமாகவும் ஆச்சரியமாகவும், பௌத்தர்களுடைய அந்த முயற்சிகளைச் சைதன்யர் முறியடித்தார். கடைசியில் பௌத்தர்களும் கிருஷ்ண நாமத்தை ஏற்றுக் கொண்டார்கள். சைதன்யர் பெற்ற பெரிய வெற்றிகளில் இதுவும் ஒன்றாகும்.

விருத்தாசலத்துக்கு அருகில் உள்ள இடங்களிலிருந்து, சைதன்யர் சிதம்பரத்துக்குப் போய், அங்கே உள்ள சிவாலயத்தைத் தரிசித்துவிட்டு, கொள்ளிடக் கரையில் இருக்கும் சீகாழிக்குச் சென்றார். அங்கேயிருந்து தெற்குப் பக்கமாகச் சென்று, காவேரி கடலில் கலக்கும் இடத்தையும் தரிசித்துவிட்டு, சைதன்யர் வேதவனம் சென்றார்.

இங்கே உள்ள அமிர்தலிங்கர் கோயிலுக்கும் வேறு பல ஆலயங்களுக்கும் சென்று, சைவர்களில் பலரை வைஷ்ணவ தர்மத்துக்கு மாற்றினார். இங்கே இருந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடன் வைஷ்ணவ தர்மம் பற்றி உரையாடிவிட்டு, தஞ்சாவூரிலிருந்து இருபதுமைல் தூரத்தில் உள்ள கும்பகோணத்துக்குப் புறப்பட்டார். பின்னர் அவர் சென்ற முக்கியமான தலம், கும்பகோணத்துக்குத் தெற்கே உள்ள பாபநாசம்.

[அடுத்த இதழில் முடிவு பெறும்]

★

வீரைக் கவிராஜ பண்டிதர்

இலக்கணவிளக்கப் பரம்பரை
திரு. ச. சோமசுந்தர தேசிகர்

பாண்டிநாட்டிலே வீரசோழன் என்று ஓரூர் உளது. அது வீரையென்றும் சொல்லப்படும்.

அந்த ஊரிலே, வேம்பத்தூர் அந்தணர் குடும்பங்கள் சில குடியேறியுள்ளன. அவற்றுள் ஒரு குடியிற் கவிராச பண்டிதர் என்பார் பிறந்தவர்.

இவருடைய இயற் பெயர் இன்னதென்று விளங்கவில்லை. 'கன்னலஞ் சிலைவேளெனுங் கவிராச பண்டிதன்' என்று கூறப்பட்டிருப்பதனாலே, இவருக்குப் பிள்ளைத் திருநாமம் ஒன்று உண்டென்று ஏற்படுகிறது, அஃது இதுவெனத் தெரிவதற்கில்லை.

இவர் தமிழையன்றி வடமொழியும் நன்கு கற்றவர். இவருக்கு அம்பிகாபதியென ஒரு குமாரனுண்டு.

இவரைக் குறித்துப் புலவர் புராண முடையார் கூறுங் கதை வருமாறு:

"'வேம்பத்தூர்ப் புலவர்கள் பல ஊர்களிலே வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குள்ளே ஒருவர்க்கு ஒரு தவமகன் பிறந்தான். அவன் உரிய பிராயத்தே கல்வி பயின்று வருநாளில், உமாதேவிக்குரிய மந்திரமொன்றைப் பயின்று உருவேற்றி வந்தான். இலட்சமுருவாக, அம்பிகையின் திருவருளால் பைந்தமிழ்ப் பனுவல் சொல்லுந்திறனில் மிகுந்து, உமாதேவியினுடைய எழிலையும் அவயவங்களையும் வர்ணித்தான். உமாதேவி மகிழ்ச்சிகூர்ந்து 'பெண்ணுடனே பிறவாதவர் போன்று இப்பண்ணுறு பாடலைப் பகர்ந்தனை' யெனவும், 'விண்ணுடன் மண்ணும் வெறுப்பினும் என் வாய் நண்ணுறுமாறு நவின்றிடுமென்றான்.'

"அச்சமில்லாமல் அவ்வாறு பரையிடங் கூறுவானைப் பார்த்துச் சினந்தவள்போல, அவனுடைய நாவை யுள்ளிழுத்துவிடச் செய்தாள். அவனுடைய நாவும் மறைந்தது. நாணுடன் அச்சமெய்தவே, அவன் உமாதேவியினுடைய விரைக்கழல் கும்பிட்டு நாவைத் திரும்பப் பெற்றான். அடியவனுக்கு இவ்வாறு தீங்கு செய்ததற்காக, சிவபெருமான் பிராட்டியாரைத்

தனது பக்தனுக்கு ஆறு திங்கள் அவளது 'கையிஞலுண்டி செய்தீ தலே பரிசாகு'மெனக் கட்டளே யிட்டார்.

"அந்தணன் தன்னுடைய நாவைத் திரும்பப் பெற்றபின் னர், தன் குலத்துக்குத்தக்க ஒரு மாதை மணந்துஇல்லறம நடத்தி வருநாளேயில், ஒரு பெண்ணேப் பெற்று வைத்து மனேவி யிறந் தாள். பின்னர் அவன் அந்தப் பெண்ணே வளர்த்து வந்தான். சிறிது காலஞ் சென்றபின் அவ னுக்குக் காசியாத்திரை செல்லும் விருப்பம் உண்டாயிற்று. அப் பொழுது தன் பெண்ணேத் தங்கை யிடம் ஒப்பித்துவிட்டு, காசிக்கு யாத்திரையாகப் புறப்பட்டுச் சென்ருன். சிறிதுதூரம் பயணஞ் சென்றவுடன், வெப்பந்தாங்காது ஒரு மர நிழலில் இளேப்பாறும் பொருட்டு உட்கார்ந்தவன் துயின்றுவிட்டான்.

"அப்பொழுது உமாதேவி அவனுடைய பெண்ணினுருவ மெடுத்து, சமையலுக்கு வேண் டிய பாத்திரமுங் கரண்டியுங் கையிற் கொண்டும், மற்றைய வைகளே மூட்டையாகக் கட்டித் தலேயில் வைத்துக்கொண்டும், அவனருகே வந்து நின்ருள்.

"அந்தணனும் விழித்தெழுந்து தன் பெண் வந்ததற்கு மகிழ்ச்சி கொண்டானுயினும், வழி நடத் தலினருமையை நினேந்து வருந் திக் கூறிஞன். மகளாக வந்த எம்மன்னேயும், அவற்றையொரு பொருட்டாக நினேக்க வேண்டா மென்று கூறி, பின்னே சென்று இன்னடிசிலாக்கியிட்டாள்.

"இவ்வாருகச் சென்று காசி யம்பதியடைந்து விசுவேசனேத் தரிசித்தனர். பின்னர் ஊரைச் சுற்றிப் பார்த்து வருகையிலே, கடைத்தெருவையடைந்து வளே யற் கடைப்பக்கம் வந்தனர். தன் னருமை மகள் வளேயலேக்கண்டு அவற்றுட் சில பூணவேண்டு மென்று சொல்லவே, என் செய் வான் பனவன், கவலே கொண் டான்.

"உலக முழுதீன்றபச்சிளங் கன் னியே ஒரு மகளாய்த் தோன்றி அறுசுவை யமுதூட்டும்போது, இந்தச் சிறு விளேயாட்டை முடித் தலுமருமையாமோ? தென்னுட் டுத் தமிழனெருவன் கடைத் தெருவிலெதிர்ப்பட்டான். அவன் அந்தணனேக் கண்டு, தன் ஞட்டினனெருவனேக் கண்டதா லளவிலா மகிழ்ச்சிகொண்டு, அவர்களுடைய இச்சைகளே நிறைவேற்றியதுடன், வேண்டிய உதவியும் புரிந்தான். இவ்வாறு காசியாத்திரை சென்று ஊருக் குத் திரும்பினர்.

"மாதமும் ஆருயின ஊரை யணுகும்போது ஒரு மரத்தடியில் தங்கினர். அந்தணன் சற்று அயர் வெய்திஞன். அருமை மகள் முன் ஞடி வீட்டுக்குச் செல்வதாகக் கூறி மறைந்து, நூறு வயதுக் கிழவி வடிவங்கொண்டு சென்று, பனவனின் தங்கையினுடைய வீடடைந்து, அவளுடைய தமை யன் திரும்பி வருவதாகக் கூறி மறைந்தாள்.

"அந்தணனுடைய அருமை மகள் அவன் யாத்திரை சென்ற நாளாகப் பாயும் படுக்கையு மாகக் கிடந்தாள். தன் தந்தை வந்தானென்று கேட்டவுடன் புத்துயிர் பெற்றெழுந்து நோய் நீங்கப்பெற்ருள். பார்ப்பனனும் வீடடைந்து, தன்னேடு வந்த வள் மலேயரையன் மடப்பாவை யெனவறிந்து ஆனந்த பரவச

ளுய்ப் பெருமையுற்று வாழ்ந் தான்.''

இவ்வாறு கூறும் புலவர் புராணமுடையார் கூற்றுக்கு ஆதாரம், அவர் பாயிரத்திற் கூறியாங்குச் சிறு வயதிற் கேட்டனவும், பின்னர் அவர்க்குத் தோற்றியனவுமாம். கவிராச பண்டிதருக்குப் பெண்தானுண்டு என்று புலவர் புராணமுடையார் கூற, நெல்லை வருக்கக்கோவை யியற்றிய அம்பிகாபதி இவருடைய குமாரர் என்று பிறர் கூறுவர். அதனைப்போலவே,'திருநெல்வேலி ஜில்லா செங்கோட்டையிற்றிகழ்ந்த கவி ராஜ பண்டிதரென்பார், சங்கராசாரியார் வடமொழியிலியற்றிய சவுந்தரியலகரியைத் தமிழில் மொழி பெயர்த்தனரென்பர் தமிழ் இலக்கிய வரலாறு ஆசிரியர் (பக்கம்.442).இவ்வாறுகூறுவதற்குரிய ஆதாரம் அவர் காட்டினரில்லை. கவிராச பண்டிதர் வீரசோழனிலேயேபலநாள்வாழ்ந்து, தன் இறுதிக் காலத்தில் துறவு பூண்டு சமாதியிடப் பெற்றனர் என்ப.

கவிராச பண்டிதர் இயற்றியன சௌந்தரிய லகரி, வராகிமாலை, ஆனந்தமாலை என்பனவாம். சௌந்தரியலகரி என்ற நூல் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. வடமொழி சௌந்தரியலகரி ஆதிசங்கரர் இயற்றிய தென்பர். அது தேவியினது பெருமைகளையும் அவயவங்களையும் நன்கு வர்ணிக்கும். தமிழ் நூல் வட மொழியின் மொழி பெயர்ப்பு. பிரமாதி ராயன் என்ற அந்தணர்-கவி ராசராசன் எனப்பட்டம் பெற்றவர்-வடமொழி சௌந்தரியலகரியின் நுட்பங்களை எடுத்துக்கூற, கவிராச பண்டிதர் தமிழ் மொழியிலே நயம்படக் கூறினர் என்று பாயிரம் கூறும்.

இந்த நூல் நூற்றுமூன்று பாக்களையுடையது. ஆனந்தலகரி சௌந்தரியலகரி என இரு பிரிவினையுடையது.கவியின்பம்சொலுந் தரத்ததன்று. இந்நூலுக்குச் சிறந்த உரையொன்றுண்டு.

இன்ன தன்மையை நூலினைக்
கவி ராசராசவரோதயன்
மன் னனம்பிர மாதி ராயன்
வடித்த ரும்பொருள் கூறவே
கன்ன லஞ்சிலை வேளெ னுங்கவி
ராச பண்டிதன் வீரையான்
சொன்னயம்பெறு காவியக்கவி
சொல்லவென்று தொடங்குவான்.

வேத நுண்பொரு ளாதி சுந்தரி
வீற டங்கலு மாயமே
ஈத றிந்து விடாசொ லுங்கவி*
ராஜ பண்டிதன் வீரையான்
ஞாத ரஞ்சகி தாள்பெ றுந்திரு
நாம மொன்பது நூறுமே
யோதி னன்பல போக முஞ்சிவ
லோக மும்பெறு வார்களே.

என்பவை கவிராச பண்டிதர் இந்நூலை இயற்றியதற்குரிய சான்றுகள்.

வராகிமாலை, ஆனந்தமாலை என்பன இரண்டுஞ் இரு சிறு நூல்கள். இவை இவரியற்றினவோவென ஐயுறுவர் பலர்.

இனி, இவர் காலத்தைக் குறிப்பதற்கான குறிப்புக்கள் ஒன்றுங் கிடைத்தில. ஆயினும் சௌந்தரியலகரியின் உரை செய்தவர்

---

* (பி-ம்) கொளுங்கவி.

உண்ணுமுலை எல்லப்ப நயினர் ஆவர். அவருடைய காலம் பதி ஞரும் நூற்ருண்டின் பிற்பகுதி யென்பது உறுதிபெற்ற செய்தி. அவருக்கு இந்நூலுடையார் முந் தியவராதல் வேண்டுமென்று தோன்றுகிறது. அன்றி நூலை நன்கு தெளிந்தே உரையாசியர் உரையியற்றியிருத்தலால், நூலா சிரியரோடு பழகியவராகவோ அவரோடு ஒரு புடை சம்பந்த முடையவராகவோ அவர் இருத் தல் வேண்டும் என்னலாம்.

கவிராசருடைய திருமகனர் அம்பிகாபதி, தென்காசி, மதுரை, திருநெல்வேலி, கருவை என்ற நான்கு ஊர்ப் பெயரும், சுவாமி பெயரும் அம்மை பெயரும் ஒரு பாவிலே பாடச் சொன்னபோது பாடிய பாட்டொன்று காணப் படுகிறது. இந்தப் பாட்டை அவர் தென்காசி யென்ற ஊர் பாண்டியர்களுக்குச் சிறப்புடைய தான பின்னர்ப் பாடியிருக்க வேண்டும். அவ்வாறு தென்காசி சிறப்படையத் தலைப்பட்டது 16-ம் நூற்ருண்டிலேயாம். இவை களாலே வீரைக் கவிராசரும் பதி ஞரும் நூற்ருண்டின் நடுப்பகுதி யில் வாழ்ந்தவர் என்று கொள் வது தவருகாது.

★

சிவகங்கையும் விஷ்ணுகங்கையும்

கங்கா நதியைப் பற்றிப் பல் வேறு புராணங்களிலும் இதிகாசங்களிலும் பேசப்பட்டுள்ளது. ஆனால், கங்கா நதி ஒன்று அல்ல—இரண்டு என்பது, பண்டிதர்களிலேயே பல பேருக்குத் தெரியாது.

மஹாவிஷ்ணு வாமனராக வடிவெடுத்துவந்து பலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் கேட்டார் அல்லவா? பலி அவர் கேட்டபடியே தர ஒப்புக் கொண்டான். உடனே அவர் திரிவிக்கிரமராக மாறி, பூமியை ஓரடியாகவும் ஆகாயத்தை மற்றோர் அடியாகவும் அளந்தார் என்பது பாகவதக் கதை.

அவர் ஆகாயத்தை அளந்த காலத்தில், அவருடைய கால் பெருவிரல் நகத்தால் அண்டகடாகத்தில் கீறல் ஏற்பட்டு, அதிலிருந்து கங்கை உற்பத்தி ஆயிற்று. அந்த கங்கையைத்தான் பரமேஸ்வரன் தன் சடையில் தாங்கியுள்ளார் என்பது, பௌராணிகர்களிடையே பொதுவாக நிலவி வருகிற ஒரு கருத்து.

இது ஒரு தவறான கருத்து என்பதை, நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன்பு வாழ்ந்திருந்த மாங்குடி மணிய சிவனார் என்னும் மகான் ஒருவர் எடுத்துக்காட்டியுள்ளார். திரிவிக்கிரம அவதாரத்தின் போது தோன்றிய கங்கை வேறு—சிவபெருமான் தலையில் தாங்கியுள்ள கங்கை வேறு என்பது, அவர் முடிபு. அதற்கு ஆதாரமாக, சிவரஹஸ்யம் என்னும் கிரந்தத்தை அவர் மேற்கோள் காட்டுகிறார்.

அந்த கிரந்தத்தின் த்விதீயாம்சத்தில்,

அந்யா விக்ரமதோவிஷ்ணோ:
பாததோ நிர்கதாந: |
கங்காத்வாராத் ப்ரதீச்யாப்திம்
ஸங்கதா மாளவாந்திமே ||

என்று ஒரு சுலோகம் வருகிறது.

இந்த சுலோகத்தின்படி, திரிவிக்ரமரின் கால்பெருவிரல் கீறியதால் அண்டகடாஹத்திலிருந்து வெளிப்பட்ட கங்கையானது, அவருடைய பாதத்தில் வீழ்ந்து, மாளவதேசத்தின் வழியாக மேற்கு சமுத்திரத்தை அடைந்துவிட்டது.

நகம் கீறிய துவாரத்தையும், திரிவிக்கிரமர் அப்போதே அடைத்து விட்டார். அப்படி அடைக்காமலிருந்தால், அந்த

மஹாப்பிரவாஹம் இந்த மண்ணுலகத்தையே அழித்துச் சென்றிருக்கும்.

எனவே, பகீரதன் தவம் செய்து கொண்டுவந்த ஆகாய கங்கை அது அல்ல.

பகீரதன் கொண்டுவந்த கங்கை எதுவென்ருல்,—

ஒரு சமயம், சிவபெருமானுடைய கண்களிரண்டையும் உமாதேவியார் தம் கைகளினல் பொத்தினர். அவ்விரு கண்களும் உலகிற்கு ஒளி தருகிற சூர்ய சந்திரர்களின் வடிவமாதலால், அவை மறைக்கப்பட்டவுடன் உலகம் பேரிருளில் மூழ்கியது.

அந்த இருளைப் போக்குவதற்காக, சிவபெருமானது நெற்றிக் கண் திறந்தது.

நெற்றிக் கண் திறந்தால் உலகம் எரிந்து அழிந்துவிடும் அல்லவா? அதை அவ்வாறு அழியாது காப்பாற்றுவதற்காக, உமாதேவியாரது கைவிரல்களிலிருந்து கங்கை வெள்ளம் தோன்றியது.

அந்த கங்கையைத்தான், அது கட்டுமீறி உலகனைத்தையும் மூழ்கடித்துவிடாதபடிக்கு, சிவபெருமான் தன் சிரத்தில் அடக்கிக் கொண்டார்.

அப்போது, பிரம்மதேவர் சிவபெருமானைப் பிரார்த்தித்து, அந்த நீரில் சிறிதைத் தமது கமண்டலத்தில் பெற்றுச்சென்று, அதனை சத்ய லோகத்தில் பெருக விட்டார்.

அதுதான் ஆகாச கங்கையாக விளங்கிக் கொண்டிருந்தது.

அந்த கங்கையினையே பகீரதன் தவம் செய்து பூமிக்குக் கொண்டு வந்தான். அதுதான் இப்போது காசியம்பதியில் ஓடிக்கொண்டிருப்பது.

இந்த கங்கையைப் பற்றி,

"இயம்கர்வபராக்ராந்தா
ஈசேநசசி மௌலிநா |
ஜடாகோடீரநிலயாம்
சக்ரேஸாச விஸர்ஜிதா ॥"

எனவரும் சிவரஹஸ்ய சுலோகத்தையும், மகான் மணியசிவனுரவர்கள் தமது கருத்துக்கு ஆதாரமாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரவர்களும், தமது பிரம்மதர்க்கஸ்தவத்தில் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிருர்களாம். கற்றறிந்த பெரியோர்கள் ஆராய்ந்து தெளிவார்களாக!

ஸத்ஸங்க மஹிமை

மஹரிஷி ஸ்ரீசிவானந்தர்

மகாவிஷ்ணுவின் பக்தர்களில் நாயகனாய் விளங்கும் நாரத முனிவரை, ஒருகாலத்தில் துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அதிக அன்புடன் வரவேற்றார்.

தனது சிம்மாசனத்திலே அமரும்படி உபசரித்து, தமது நாமங்களைப்பாடித் திரிலோகங்களிலும் சஞ்சரிக்கின்ற அம்முனிவரைப்பார்த்து, "முனிவரே! மூன்று லோகங்களிலுமுள்ள மக்களின் க்ஷேம லாபங்கள் எப்படி?" என்று வினவினார்.

பகவானுடைய இதர வினாக்களுக்கும் விடையளித்து வருகையில், நாரத முனிவர், "ஸத்ஸங்கத்தின் மஹிமையைப் பற்றி அநேக தடவைகளில் தாங்கள் சொல்லவும் கேட்டிருக்கிறேன். பாரமார்த்திக முன்னேற்றத்திற்கு இது வெகு இன்றியமையாததுவாமே? தாங்கள் எனக்கு துருவன், பிரஹ்லாதன், சிபி, பலி, உத்தவர் இன்னும் பல பக்தர்களின் சரித்திரத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த விஷயத்தைப்பற்றி தயவு செய்து திருவாய் மலர்ந்தருளுங்கள்," என்று பயபக்தியோடு விண்ணப்பித்துக்கொண்டார்.

அதற்குப் பகவான், "ஆம், நாரதரே! ஸத்ஸங்கம் இல்லாமல் என்னை அடைந்தவர் எவரையும் நான் பார்த்ததே இல்லை. கேட்டதே இல்லை. இது பற்றித் தெரிந்து கொள்ள நீர் அருகதை உள்ளவர்; ஏனெனில் திரிலோக சஞ்சாரியாகிய நீர், ஸத் சங்கத்தின் மஹிமையைப் பரப்பி விடுவீர். தற்சமயம் ஸத்ஸங்கத்தின் பிரயோஜனத்தை எடுத்துக்காட்டலாம். இங்கிருந்து நான்காவது மைலில் ஒரு ஆலமரம் இருக்கிறது. அதில் கொட்டைகளைக் கொறித்துக் கொண்டும், துள்ளிக் குதித்துக் கொண்டும், உல்லாசத்துடன் ஓர் அணில் வாசம் பண்ணுகிறது. தன் இனத்துடன் அது இணக்கம் வைத்துக் கொள்வதில்லை. தனித்து இருக்கும். உடனே அங்கே சென்று, ஸத்ஸங்கத்தின் நன்மைகளை அணிலிடம் கேளும். அது தெரிவிக்கிறதைக் கவனியும்" என்று பகர்ந்தார்.

அங்ஙனமே, நாரத முனிவர் பிரயாணமானார். வழி நெடுக, ஸத்ஸங்கத்தின் நன்மைகளை எப்படி ஒரு அணில் தெரிவிக்குமென்று வியப்பெய்தினார். பகவான் குறித்த ஆலமரத்தை அடைந்ததும், அதில் நாரதர் அணிலைக் கண்டார்.

"அணில் ஐயா! ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்னை இங்கு அனுப்பினார். தயவு செய்து ஸத்ஸங்கத்தின் நன்மைகளை எனக்குச் சொல்லும்" என்று முனிவர்கேட்டார்.

என்ன ஆச்சரியம்! அக்கணமே அணில் கீழே விழுந்து இறந்தது;

முனிவர் தமது எண்ணத்திற்கு மாருக அணில் ஆவி துறந்தது பற்றி, பெரிதும் வருந்தினுர். துவாரகைக்குத் திரும்பினுர். பகவானிடம் நடந்த விவரத்தைக் கூறி, தாம் செய்த குற்றத்தை மன்னிக்குமாறு பிரார்த்தித்தார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான், "முனிவரே! கவலைப்படாதீர். அணில் இறந்தது பற்றி ஏதேனும் பாவம் வந்துவிட்டதென அஞ்சாதீர். ஆலமரத்திலிருந்து நான்காவது மைலில், நாளுவித மலர்களாலும் கனிகளாலும் செறிந்து விளங்கும் வனப்பு வாய்ந்த பூங்காவனம் ஒன்றுண்டு. அதில் ஒரு மாமரம். அம்மரத்தில் ஒருகூண்டு தொங்குகிறது. அதிலே ஏழு வண்ணங்களுடன் கூடிய அழகிய கிளி ஒன்றைப் பார்ப்பீர். அக்கிளியிடம் கேட்டால் ஸத்ஸங்கத்தின் நன்மைகளைச் சொல்லும்" என்று மொழிந்தார்.

அங்ஙனமே நாரதர் பயணமாளுர். மாமரத்துக் கூண்டில் அழகியதோர் கிளி இருக்கக்கண்டு தைரியமாகக் கேள்வி கேட்டார். அப்பறவையிடம் வினு கேட்கப் பட்டதோ இல்லையோ, உடனே அது ஸ்மரணையற்று வீழ்ந்து இறந்து விட்டது.

மீண்டும் ஏமாற்றமடைந்த நாரதர், திரும்பினுர் துவாரகைக்கு. நிகழ்ந்ததுகூறப்பட்டது. இந்தத் தடவை மனத்தில் அவர் சஞ்சலமடைந்தார். அதே நேரத்தில், அதெல்லாம் ஆண்டவனின் லீலைகள் எனவும் எண்ணலாளுர்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, "முனிவரே! நீர் இரு முறை ஏமாறினீர். எனக்கு வருத்தம் உண்டாகிறது. ஆளுல், உமது முயற்சியில் இந்தத் தடவை வெற்றியைக் காண்பீர். இனி மோசம் போகமாட்டீர்! இது உறுதியென நம்புவீர். அயோத்தி மாநகரில், இரகு வம்சத்தில் உதித்த இராஜா ஒருவர், குடிமக்களைத் தமது சொந்தப் புத்திரர்கள் போலப் பாதுகாத்து அரசாட்சி புரிகின்ருர். இன்று அவருக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. பிறந்த அக்குழந்தையிடம் ஸத்ஸங்கத்தின் நன்மைகளைப் பற்றிக் கேட்டால், நிச்சயமாக நீர் விடை பெறுவீர்" என்று விவரித்தார்.

இப்போது நாரதர் முன்னிலும் அதிகமாகக் கவலைப்பட்டார். தம்மைக் கண்டவுடனே குழந்தையும் இறந்து விடுமாளுல், தமது நிலை மேசமாகி, தமது உயிர்க்கே ஆபத்தாய் முடியுமென்று கருதலாளுர். எனினும், பகவானுடைய விருப்பப்படி நடக்க வேண்டும். எனவே, நாரதர் அயோத்திமா நகருக்குப் புறப்பட்டார்.

மன்னரிடம் போய்க் குழந்தையைத் தாம் பார்க்க வேண்டுமென்ருர். அரசன் நாரதரைப் பக்தியோடு வரவேற்று, தமது புத்திர ஜனனத்தின் போது அத்தகைய முனிசிரேஷ்டரைத் தரிசிக்கும் பாக்கியம் வாய்க்கப் பெற்றமைக்காகப் பெரிதும் மகிழ்ந்து உபசரித்தார்.

நாரத முனிவர், "அரசரே! தங்கள் பக்திசிரத்தைக்காக நான் நிரம்பவும் சந்தோஷிக்கிறேன். பிறந்த பாலனிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அதற்கு விடை பகர அக்குழந்தைக்கே திறமை உண்டு" என்று தமது கருத்தை வெளியிட்டார்.

உடனே அரசர் உத்திரவிடவும், அரசியே பாலனை ஏந்தி வந்து, முனிவர் முன்பு தங்கக் கட்டிலில் வைத்தாள். பாலன் புன்முறுவல் செய்தான்.

"அன்புள்ள பாலா! ஸத் ஸங்கத்தின் நன்மைகளைச் சொல் எனக்கு" என்று வினவினார் முனிவர்.

எல்லோரும் அதிசயிக்கும்படி அக்குழந்தை கட்டிலில் எழுந்து நின்று கொண்டு, "முனிபுங்கவரே! எவ்வளவு அதிருஷ்டசாலி நான்! இதுதான் ஸத்ஸங்கத்தின் நன்மை. ஆலமரத்தில் அணிலாக இருந்த போது எனக்குக் கிடைத்த தங்கள் தரிசனம், மேலானதாகிய கிளியின் ஜன்மத்தை அருளியது. அக்கிளியாகிய எனக்கு, தாங்கள் மீண்டும் தரிசனம் அளித்தீர்கள். தங்கள் பேரன்பின் காரணமாக, இப்போது நான் மனுஷ்யப் பிறவி அடைந்துள்ளேன்-அதுவும் சக்கரவர்த்தியின் புத்திரனாக! தங்கள் பேரருளால் எனதுவாழ்க்கையின் இறுதியான இலக்ஷியத்தை - ஸ்ரீ வைகுண்டாதிபதியோடுஇரண்டறக்கலத்தல் எனும் புண்ணியகதியைப் பெறுவேன்" என்று சாங்கோபாங்கமாய்ச் சாற்றினன்.

இவ்வார்த்தைகளைக்கேட்டதும், நாரத முனிவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து குழந்தையை ஆசிர்வதித்தார். அப்பால், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சந்நிதி அடைந்து, ஸாஷ்டாங்கமாகத் தண்டம் சமர்ப்பித்தார்.

"ஸ்வாமீ! தங்கள் லீலைகள் அதிசயம்! அதிசயம்!! என்ன நேருமோவென்று நான்சந்தேகித்தேன். என் அறியாமைக்கு மன்னியுங்கள். ஸத்ஸங்கத்தின் பலன்களைத் தெரிந்துகொண்டேன். திரிலோக நாயகரே! வாழ்க! ஓம் நமோ நாராயணா! வாழ்க!" என்று ஸ்தோத்தரித்தார். ●

உ

திருச்சிற்றம்பலம்

திருமாலும் உருமாறிச் சிரஞ்சீவியாகித்
தேடியுங்கண் டறியாத சேவடிகள் வருந்த
வருமாலை மண்ணுறுத்தப் பெயர்த்து நடந்தருளி
வஞ்சகனேன் இருக்குமிடம் வலிந்திரவில் தேடித்
தெருமாலைக் கதவுதனைத் திறப்பித்து நின்று
செவ்வண்ணத் திடைப்பசந்த திருமேனி காட்டிக்
குருமாலைப் பெருவண்ணக் கொழுந்தொன்று
கொடுத்தாய்!
குருமணிநின் திருவருளைக் குறித்து மகிழ்ந்தனனே!

அன்றொருநாள் இரவிடைவந்(து) அணிக்கதவம்
திறப்பித்(து)
அருள்மலர்ச்சே வடிவாயிற் படிப்புறத்தும்
அகத்தும்
மன்றவைத்துக் கொண்டென்னை வரவழைத்து
மகனே
வருந்தாதே யிங்கிதனை வாங்கிக்கொள் ளென்ன,
ஒன்றுசிறி யேன்மறுப்ப மறித்தும் வலிந்தெனது
ஒருகைதனில் கொடுத்திங்கே உறைதியென்று
மறைந்தாய்!
இன்றதுதான் அனுபவத்துக் கிசைந்ததுநா யடியேன்
என்னதவம் புரிந்தேனோ! இனித்துயரொன்
றிலனே!

—திருவருட்பா.

தேவி உபாஸனை

ஸ்ரீ ஜி. வேங்கடேஸ்வர ராவ்

தெய்வத்தைத் தாயாக வழிபடும் பண்பு, நம் பாரத நாட்டின் தனிச்சிறப்பாகும். தாயாகக் கடவுளை வழிபடும் முறை நம் நாட்டில்தான் பரிபூர்ண நிலையை எய்தியுள்ளது.

வேதம் அநாதியானது. வேதத்தில் இந்திரன், அக்னி, யமன், வருணன் முதலிய ஆண் தெய்வங்களைப் போற்றியிருந்தாலும், அதிதி என்னும் தேவமாதாவையும் அது புகழ்கிறது.

ஸந்தியா வந்தனத்தில், "ஆயாது வரதா தேவீ" என்று காயத்ரீ தேவி துதிக்கப்படுகிறுள்.

உபநிஷதங்களிலும் ஸ்ரீ வித்யோபாஸனை கூறப்படுகிறது. பராசக்தியின் உபாஸனையே ஸ்ரீ வித்யை ஆகும்.

சகல சக்திகளுக்கும் ஆதாரமாகவும் அதீதமாகவும் உள்ளவள் ஆதி பராசக்தி. நம்மைப் பத்து மாதங்கள் கர்ப்பத்தில் சுமந்து உருவாக்கி, நமக்குப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கிற அன்னையே அப்பராசக்தியின் அம்சம்தான். "நமாதுர் தைவதம் பரம்" (அம்மாவைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் வேறு எதுவும் இல்லை) என்பது சான்றோர் வாக்கு.

பாரதப்போருக்கு முன்னர், ஸ்ரீ கிருஷ்ணபகவானின் கட்டளையால், அர்ஜுனன் தேவியைத் துதித்தான். அதேபோல் இராமரும், யுத்தத்திற்கு முன் தேவியை வழிபட்டார். ருக்மிணி தன் விவாகத்துக்கு முன்னால் தேவியைப் பூஜை செய்தாள்.

ஸ்ரீ தேவியின் மகிமை, பல புராணங்களில் விளக்கப்பட்டுள்ளது. அவற்றுள் தேவீ பாகவதமும், பிரம்மாண்ட புராணமும், மார்க்கண்டேய புராணமும் முக்கியமானவை. புகழ்பெற்ற ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமஸ்தோத்ரம் பிரம்மாண்ட புராணத்தில் இருக்கிறது. ஸ்ரீ தேவீமாஹாத்மியம் எனப்படுகிற துர்காஸப்தசதீ, மார்க்கண்டேய புராணத்தில் இருக்கிறது. இவற்றைத் தவிர, பல தந்திரங்களிலும், ஆகமங்களிலும், ஸம்ஹிதைகளிலும், தேவியின் பிரபாவம் மிகவும் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

தேவியின் வழிபாடு பாரதம் எங்கும் பரவியுள்ளது. கேரளத்தில் பகவதியாகவும், தமிழ்நாட்டில் காமாக்ஷியாகவும் மீனாக்ஷியாகவும் அகிலாண்டேஸ்வரியாகவும், ஆந்திர தேசத்தில் கனகதுர்கையாகவும், மைசூரில் சாமுண்டேஸ்வரியாகவும்சாரதாவாகவும், மகாராஷ்டிரத்தில் பவானியாகவும், குஜராத்தில் அம்பிகாவாகவும், வங்காளத்தில் காளியாகவும் துர்கையாகவும், அஸ்ஸாமில் காமாக்யாவாகவும், உத்தரப் பிரதேசத்தில் ராதாவாகவும் சீதாவாகவும், ஸ்ரீ பரதேவதை வழிபடப்படுகிறாள். நேபாள தேசத்தில் பௌத்தர்கள் தாரா தேவியென்றும், காஷ்மீரில் ஜைனர்கள் சாரதா என்றும் பத்மாவதியென்றும், இவளையே வழிபடுகிறார்கள்.

குழந்தையாய் இருக்கும்போது முதலில் நாம் தாயாரைத்தானே தெரிந்து கொள்கிறோம்? அவ்விதமே, இகத்திலும் பரத்திலும் சுகத்தைப் பெறவேண்டுமானால், முதலில் நாம் அம்பிகையைத்தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

தேவி பூஜையில், வாமமார்க்கம் தக்ஷிண மார்க்கம் என இரண்டு வகைகள் உண்டு. வாமமார்க்கம் வடநாட்டில் மிகுதியாகப் பரவியுள்ளது. தக்ஷிணமார்க்கம் தென்னாட்டில் பிரபலமாக இருக்கிறது. இது பிரம்மவித்யை எனப்படுகிற வேதாந்தமார்க்கத்தையேபெரும்பாலும் தழுவியதாக அமைந்திருக்கிறது.

தேவியின் புகழைப் பாடிய மகான்களுக்குள்ளே, வியாசர், துர்வாசர், மூகர், காளிதாஸர், ஆதி சங்கரர், பாஸ்கரர், அப்பய்ய தீக்ஷிதர், குமரகுருபரர், கவி ராஜபண்டிதர், அபிராம பட்டர், மாவதச் சிவஞான யோகிகள், இராமலிங்க வள்ளலார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

தேவியின் மூர்த்தங்களுக்குள்ளே, காமாக்ஷியென்னும் திருநாமத்துடன் காஞ்சியம்பதியில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீ லலிதாம்பிகையே மிகவும் உத்கிருஷ்டமானவள். இவளே ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி. இவளே ஸ்ரீ ராஜராஜேஸ்வரி. ஸரஸ்வதி லக்ஷ்மி பார்வதி இம்மூவரும், முறையே இவளது இச்சாஞானக் கிரியா சக்திகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இவளை சூக்ஷ்ம ரூபத்தில் உபாசிக்கின்ற முறையே ஸ்ரீ சக்ர பூஜை என்று சொல்லப்படுவது. அந்தப் பூஜையின் கிரமங்களும் தத்துவங்களும், குருவினிடம் தீக்ஷைபெற்றே தெரிந்து கொள்ள வேண்டியவையாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு இந்நான்கையும் ஒருங்கே அடைவதற்கு, அம்பிகையின் உபாஸனையைப்போன்ற ஓர் உத்தமமான வழியோ, எளிதான வழியோ, உலகில் வேறு எதுவுமே கிடையாது.

உங்கள் பிரச்னைகள்

பிரச்னை

ஒரு சகோதரி பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"இரண்டு வருஷமாக என்னிடம் இருக்கும் பொறாமை, காமம் போன்ற கெட்ட குணங்களைப் போக்கிக் கொள்வதற்காக, இறைவனைத் தீவிரமாக வழிபாடு செய்துகொண்டு வருகிறேன். ஆனால் இந்தப் பிசாசுகள் என்னை இன்னும் விடவில்லை. என்னையும் துன்புறுத்திக் கொண்டு, சில சமயங்களில் எனக்கு மிக ஆப்தமானவர்களையும் கஷ்டப்படுத்தி விடுகிறேன். இதிலிருந்து மீள எனக்கு ஒரு வழி சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். 'அருள்' பத்திரிகையின் மூலம் உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்."

இந்தக் கடிதத்துக்கு அடியில் "தன் தவறுகளுக்காக மிக்க வருந்தும் சகோதரி" என்று கையொப்பமிட்டிருக்கிறது.

ஆலோசனை

ஒருவர் தம்மிடம் உள்ள துர்குணங்களைப் போக்கிக் கொள்வதற்கு, இறைவனை நோக்கி மனம் வருந்திப் பிரார்த்தனை செய்வதைக் காட்டிலும் சிறப்பான வழி வேறு எதுவுமே கிடையாது. இந்த சகோதரி தன் தவறுகளுக்காக மனமும் வருந்துகிறார். பிரார்த்தனையும் செய்கிறார். பின் ஏன் அவர் குறிப்பிட்டுள்ள கெட்ட குணங்கள் அவரை இன்னும் விடாமல் பற்றிக்கொண்டிருக்கின்றன?

காரணம், அவர் மனம் வருந்துவதும், பிரார்த்தனை செய்வதும், அவரது உள்ளத்தின்மேல் மட்டத்திலேயே நிகழுகின்றன. அடித்தளத்தில் நிகழவில்லை.

அதாவது, தாம் செய்வது தவறு என்று அவரது நல்லறிவு சொல்லுகிறது. ஆனால் அதே சமயத்தில், அவருடைய அகந்தையானது, அந்தத் தவறுகளிலும் ஓர் இனிமை இருப்பதாக அறிந்து அனுபவிக்கிறது.

இனிமை என்னும்போது, காமத்தினாலோ பொறாமையினாலோ செய்யப்படுகிற காரியங்களின் வாயிலாகக் கிடைக்கும் களிப்பை இங்கே குறிப்பிடவில்லை. எவ்விதச் செயல்களிலும் ஈடுபடாத நிலையிலேயே, காமமான எண்ணங்களாலும், பொறாமையான எண்ணங்களாலும் உள்

ளத்தில் தோன்றுகின்ற மகிழ்ச்சி யையே இங்கே குறிப்பிடுகிறோம்.

காமத்திலிருந்தும் பொறுமை யிலிருந்தும் உண்மையிலேயே விடுபட விரும்புகிறவர்கள், அந்த மகிழ்ச்சிக்கு இடம் கொடுக்கக்கூடாது. அதாவது, காமமான எண்ணங்களும் பொறுமையான எண்ணங்களும் உள்ளத்தில் உதயமாகும் பொழுதே, அவற்றை மனவுறுதியோடு ஒழித்துவிடவேண்டும்.

கங்கா நதியைக் காசியிலே போய்ப் பார்க்கும்போது, அது ஒரு பெரிய நகரத்தையே அடித்துச் சென்றுவிடக் கூடிய ஆற்றல் பொருந்தியதாய்க் காணப்படலாம். ஆனால், அது உற்பத்தியாகின்ற இடத்திலே, ஒரு சிறு வாய்க்காலைப் போன்றுதான் அது காட்சியளிக்கிறதாம்.

காம எண்ணங்களும் பொறுமை எண்ணங்களும், அந்த கங்கா நதியைப் போலவே முதலில் ஒரு சிறிய வாய்க்காலாக உதயமாகி, விரைவில் பெரிய வெள்ளமாக வளர்ச்சி அடைந்து விடுகின்றன. அப்படி வெள்ளமாக வளர்ந்துவிட்ட பிறகு, அவற்றை எப்பேர்ப்பட்ட மகானும் கட்டுப்படுத்த முடியாது. அந்த வெள்ளம் அந்த மகானையே அடித்துச் சென்றுவிடும். எத்தனையோ மகான்கள் அவ்வாறு அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு, புராணங்களிலேயே ஆதாரங்கள் இருக்கின்றன.

ஆனால், அவை வெள்ளமாக வளர்ச்சியடையாமல் சிறு வாய்க்காலாக இருக்கும் சமயத்தில், அந்த எண்ணங்களை மிகவும் எளிதாகவே நாம் கட்டுப்படுத்தி விடலாம். எனினும், அவற்றை அவ்வாறு கட்டுப்படுத்துவதற்கு நாம் பெரும்பாலும் விரும்புவதில்லை. காரணம், அத்தகைய எண்ணங்களை எண்ணுவதிலேயே, நம் உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சியைத் தியாகம் செய்துவிடும் அளவுக்கு, நமது மனவுறுதியை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

தம்மிடம் துர்குணங்கள் இருப்பதே மிகப் பலருக்குத் தெரிவதில்லை. அவர்களால் ஒரு நாளும் சீர் திருந்தவே முடியாது. அவர்களைக் காட்டிலும், தம்மிடம் துர்க்குணங்கள் உள்ளன என்பதை உணர்ந்திருப்பவர்கள் எவ்வளவோ மேலானவர்கள். காரணம், அவ்வாறு உணர்ந்திருப்பவர்களால் எப்படியும் தம்மைத் திருத்திக்கொண்டுவிட முடியும்.

நமக்குக் கடிதம் எழுதியுள்ள சகோதரி, தன் தவறுகளை நன்கு உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது. ஆனால் அவற்றைத் திருத்திக் கொள்வதற்கான மனோவலிமை, அவரிடம் போதுமான அளவு இல்லையென்றே தோன்றுகிறது. அந்த மனோ வலிமையைத் தமக்குத் தந்தருளுமாறு, இறைவனை அவர் மனமுருகிப் பிரார்த்திக்க வேண்டும். பிரார்த்தனை எவ்வளவுக்கு எவ்வளவு மனப்பூர்வமானதாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவருடைய மனோவலிமை வளர்ச்சியடைந்து வரும்.

தம்முடைய பிரார்த்தனையை மனப்பூர்வமானதாய் ஆக்கிக் கொள்வதற்கு, வாரத்திற்கு ஒரு நாள் அவர் உண்ணாவிரதமும் மௌன விரதமும் இருக்கவேண்டும். உண்ணாவிரதத்தின் போது,

பால், பழரசம்போன்ற எதுவுமே சாப்பிடக் கூடாது. வேண்டுமானுல், இடையிடையே சிறிது நீர் மோராவது பானகமாவது சாப்பிடலாம். அன்றைய தினம் பகல் முழுவதும் படுத்து உறங்கக் கூடாது. இரவு பத்து மணிக்குப் பிறகுதான் படுத்துறங்க வேண்டும். முதல்நாள் காலை சூர்யோதயத்திலிருந்து, மறுநாள்காலை சூர்யோதயம் வரையில் இவ்வாறு உண்ணுவிரதம் இருக்க வேண்டும்.

அதே சமயத்தில், அந்த இருபத்துநாலு மணிநேரமும் மௌன விரதத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். வாய்பேசாமல் இருப்பது மட்டும் அல்ல; காகிதத்தில் கூடப் பிறருக்கு எதையும்எழுதிக் காட்டக் கூடாது. மனத்தையும் வீணை எண்ணங்களில் அலையவிடக் கூடாது. தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம், பகவத் கீதை, இராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், கந்தபுராணம், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம், ஸ்ரீமத் பாகவதம் போன்ற ஏதேனும் ஒரு புனிதமான நூலை, வாய்விட்டுப் படிக்காமல் மனத்திற்குள்ளேயே படித்துக்கொண்டிருக்கலாம். மந்திரோபதேசம் பெற்றவர்கள், தம்முடைய மூல மந்திரத்தை மனத்திற்குள்ளேயே ஜபித்துக்கொண்டிருக்கலாம். மந்திரோபதேசம் பெருதவர்களாயிருந்தால், தமக்கு இஷ்டமான தெய்வத்தின் திருநாமத்தை ஆயிரக்கணக்கான தடவைகள் ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டேயிருக்கலாம்.

இவ்வாறு வாரத்துக்கு ஒரு நாள் மௌன உபவாசத்தைக் கடைப்பிடித்துவந்தால், எவ்வளவு பலவீனமான மனமாய்இருந்தாலும், மிகவிரைவில் அது சிறப்பான வலிமையைப்பெற்றுவிடும். மனம்மட்டும் வலிமை பெற்றுவிட்டால், நம்மிடம் உள்ள தவருன குணங்களும் பழக்க வழக்கங்களும், தாமாகவே ஒழிந்து போய்விடும். நம்முடைய வாழ்க்கையும் மகிழ்ச்சிகரமானதாய் அமைந்துவிடும்.

அது மட்டுமல்ல. வாரத்துக்கு ஒருநாள் மௌனஉபவாசம் இருந்தால், நம் உடம்பில் பதுங்கிக் கொண்டிருக்கும் கொடிய நோய்கள்கூட, யாதொரு மருந்தும் சாப்பிடாமலே குணமாகிவிடும்.

கடைசியாக ஒரு வார்த்தை. உண்மையிலேயே தம்முடைய மனே வலிமையைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள், உள்ளக் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடக் கூடிய எந்த ஒரு புத்தகத்தையும் படிக்கக் கூடாது: எந்த ஒரு திரைப்படத்தையும் பார்க்கக் கூடாது.

கருவூர்த் தேவர்

வித்வான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்

கருவூர்த் தேவர் என்பவர் கீழக் கொங்கு நாட்டிலுள்ள கருவூரில் பிறந்தவர். அதனால் அவர் கருவூர்த் தேவர் எனப் பெயர் பெற்றார். (தேவர்-உயர்ந்தோர்).

இவரது இயற் பெயரும் பெற்றோர்கள் பெயரும் விளங்கவில்லை. இவர் அந்தணர் குலத்தவர். சிலர் இவரை வேளாளர் குலத்தவர் என்றும், பொற்கொல்லர் குலத்தவர் என்றும் கூறுவர்.

இவர் வேத சிவாகமங்களைப் பயின்றவர். இனிய தமிழைக் கற்றவர். கவிபாடுவதில் வல்லவர். சைவ சமயத்தில் நின்றவர். போக நாதர் என்னும் சித்தரிடம் ஞானோபதேசம் பெற்றுச்சிவயோகத்தில் திளைத்தவர். தம் உடல் நன்னிலைபெறக் காய கற்பம் உண்டவர். சித்தர்கள் பலருடன் இருந்து பல சித்திகள் பெற்றவர். ஒரு சமயம் தம்மூரிலுள்ள மக்களுக்குக் காலமல்லாத காலத்தில் மழை பெய்யவும், ஆற்றில் வெள்ளம் பெருகி வரவும், பூதங்கள் தமக்குக் குடை பிடிக்கவும், இவை போன்ற பல அற்புதங்களைக் காட்டி மகிழவைத்தவர். பித்தர் போல் திரிந்தவர். துறவு நிலைபூண்டு பிட்சை ஏற்று உண்டவர். உலகப் பற்றுச் சிறிதும் இல்லாதவர். மலைகளிலும் காடுகளிலும் பற்பல நகரங்களிலும் திரிந்தவர். சிவத் தலங்களைத் தரிசித்து வழிபடுவதில் பெருவிருப்புக் கொண்டவர்.

இவர் ஒரு சமயம் தென் பாண்டிநாட்டிலுள்ளதிருப்புடைமருதூர் (கடைமருது) சென்று, அங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானிடம் திருவடி தீட்சை பெற்றார். ஸ்ரீ வைகுண்டத்தை அடுத்த காந்தீசுவரம் என்ற சிவத் தலத்தில், இறைவனின் பேரொளியைக் கண்டு தரிசித்து மகிழ்ந்தார். பின்பு இவர் நெல்லைப் பதியை (திருநெல்வேலியை) அடைந்து, திருக்கோயில் திருவாயிலின் முன் நின்று, "நெல்லையப்பா" என்று அன்புடன் கூவி அழைக்க, அப்பொழுது நெல்லையப்பர் இவரது பெருமையைப் பலரும் அறியும் பொருட்டுச் சிறிது காலம் தாழ்க்க, "இங்கு கடவுள் இல்லை போலும்" என்று பெருஞ்சினத்துடன், "ஈசன் அங்கு; எருக்கு இங்கு" என்று கூறிக் கொண்டு செல்ல, சிவாலயம் பாழாகியது.

அதனை அறிந்த ஊரார் நெல்லையப்பரை வேண்டி வருந்த, நெல்லையப்பர் கருவூர்த் தேவரை மானூர் என்ற இடத்தில் சந்தித்து அருள்பாலித்து, நெல்லைப் பதிக்கு அழைத்து வந்து காட்சி கொடுத்தருளினார். அப்போது கருவூர்த் தேவர் மனமகிழ்ந்து, "செந்நெல் இங்கு; எருக்கு அங்கு" என்று கூற, நெல்லையப்பர் ஆலயம் செழித்தோங்கியது என்பர்.

பிறகு, கருவூர்த் தேவர் நெல்லைப் பதியை விடுத்துத் திருக்குற்றாலம், பாபநாசம் முதலிய

தலங்களைத் தரிசித்துக் கொண்டு, பொதியமலையை அடைந்தார். அங்கு அகத்தியர் அருள்பெற்றுப் பலகாலம் இருந்தார்.

கருவூர்த் தேவர் பொதிய மலையில் இருக்குங்கால், தஞ்சாவூரில் முதல் இராசராசச் சோழன் (கி. பி. 938 — 1014) தனது ஆட்சியில் தஞ்சைப் பெருவுடையார்க்குப் பெருங்கோவில் எடுப்பித்து, அவர்க்கு அட்டபந்தன மருந்தைப் பலமுறை சாத்தியும், அது இறுகி நிற்காமல் இளகி நின்றது. அது கண்ட அரசன் வருந்தி, ''என் செய்வது?'' என மனக்கவலை கொண்டான்.

அப்போது, ''கருவூர்த் தேவர் இங்குவரின் நீ எண்ணிய கருமம் கை கூடும்'' என்று விண்ணிடை ஓர் அசரீரி எழுந்தது.

அதனைக் கேட்ட அரசன் மகிழ்ந்து, ''அப்பெரியார் இங்கு வருவது எப்படி?'' என்று அங்கிருந்தாரை வினவியபோது, மாற்றுருவம் தாங்கி அங்கு நின்ற போகநாதர் என்னும் சிவயோகியார், ''அரசே! வருந்தற்க; கருவூர்த் தேவரை இங்கு யாம் வரவழைக்கின்றோம்'' என்று கூறி, தம் தவ வலிமையால் பொதிய மலையில் இருந்தகருவூர்த்தேவரை தஞ்சைக்கு வருமாறு அழைப்பித்தார்.

கருவூர்த் தேவரும் விரைந்து தஞ்சைப்பதியை அடைந்து, தம் குருவையும் அரசனையும் கண்டு செய்தியை அறிந்தார். பின்பு, பெரிய கோயிலுட் சென்று பெருவுடையாரை (சிவலிங்கத்தை) வணங்கி, தம் தவ வலிமையால் அட்டபந்தன மருந்தைப் பொன்னை உருக்கி வார்த்தது போல இறுகச் செய்து, பெருவுடையாரைச் செவ்வனே நிலை நிறுத்தினார்.

அப்போது பெருவுடையார் இராசராசேச்சுரம் உடையார் என்ற திருநாமம் பெறலானார். பின்னர் கருவூர்த்தேவர், பெருவுடையார் மீது திருவிசைப்பா திருப்பதிகம் ஒன்று பாடித் துதித்து வணங்கினார். அன்றியும் இவர் பல சிவத் தலங்களுக்கும் திருவிசைப்பா பாடியுள்ளார்.

அதன் பின்னர், கருவூர்த் தேவர் தஞ்சையினின்றும் புறப்பட்டு, ஸ்ரீரங்கத்தைத் தரிசித்துக் கொண்டு கருவூரை அடைந்தார். கருவூரிலுள்ள சில வைதிகப் பிராமணர்கள், கருவூர்த்தேவரது தன்மையை அறியாது, அவ்வூர் அரசன்பால் சென்று, கருவூர்த் தேவர் வைதிக ஒழுக்கத்தை விட்டவர் என்றும், வாம பூசை செய்பவர் என்றும், இவை போன்ற பல பழிச் சொற்களைக் கூறி ஊரை விட்டு அகற்ற முயன்றனர்.

அரசன் கருவூர்த் தேவரின் தூய்மை நிலையினை ஆராய்ந்து அறிந்து மகிழ்ந்து, பழிச் சொற்கூறும் அந்தணர்களைச் சினந்து கண்டித்தான். பிறகு அவ்வந்தணர்கள் அழுக்காற்றினால் மறைமுகமாகக் கருவூர்த் தேவர்க்குப் பல துன்பங்களை இழைத்து வந்தனர்.

ஒரு நாள், கருவூர்த்தேவர் அவ் வைதிகப் பிராமணர்களுக்குப் பயந்தவர் போல நடித்து ஓடி, கருவூர்த் திரு ஆனிலை ஆலயத்துள் புகுந்து, பசுபதீசுவரரைத் தழுவிக்கொண்டு இரண்டறக் கலந்தருளினார் என்பர். இவரது காலம் சுமார் 930 ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும்.

கால்களை கடலை தின்றது!

திரு. E. A. சீரங்கமுதலியார்

கும்பகோணத்திலே, வேளாண் செட்டியார் மரபிலே, சிவப்பிரகாசர் என்ற ஒருவர் இருந்தார். (இவர் வேறு, துறைமங்கலம் சிவப்பிரகாசர் வேறு.) இவர் மிகச் சிறு வயதிலேயே தமிழ் இலக்கண இலக்கியம் கற்ற வல்லவர். நிறை குணம் படைத்தவர். சிவஸ்தலங்கள் பலவற்றிற்கும் சென்று, சிவனைத் தரிசித்துச் சிந்தை மகிழ்பவர். திருவாவடுதுறைச் சைவ மடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ நமசிவாய மூர்த்திகளிடம் ஞானோபதேசம் பெற்றுத் துறவியானார்.

அவர் ஒரு சமயம், அடியார்களுடன் திருச்செங்குன்றூருக்கு எழுந்தருளினார். சைவப் பழமாகிய அவர் சிவிகை ஊர்ந்தார். அவ்வூரிலுள்ள சிலர் அதனைக் கண்டு அழுக்காறுற்றனர். சிவிகையில் வருவதைத் தடுத்தனர், ஆகையால், கால்நடையாகவே ஊரை வலம்வந்து, மலையேறினார் மங்கை பங்கன் மலரடி தொழ.

சிவனடியார்களும், பொறாமைக்காரர்களிற்சிலரும் அவரைப் பின் தொடர்ந்தனர். "இவர் உண்மைத் துறவியானால், அர்த்தநாரீசர் சந்நிதிக்கு அருகில் அமர்ந்துள்ள கல் காளை கடலை தின்னச் செய்யட்டும்" என்று, பொறாமை கொண்டவர்கள் அவரது சீடர்களிடம் சொல்லிக் கொண்டே வந்தனர்.

இதனை அறிந்த துறவியார், தனக்கு இக்காரியங்களால் வரும் புகழ் தேவையில்லை, ஆண்டவன் அருளே போதும் என மறுத்துவிட்டார். மங்கைபங்கனைக் கண்டு கண்டு கண்களும் மனமும் குளிர்ந்தார். பரவசமடைந்தார்.

சீடர்களும், சிவன் அடியார்களும், ஊர்ப் பெருமக்களும், பொறாமைக்காரர்களுடைய செருக்கினை அடக்கவேண்டும் என்று பன்முறை பணிந்து வேண்டவே, சம்மதித்தார். அடியார்க்கு அருளும் ஆண்டவன் அருளை வேண்டி,

"வில்லார் பொதுச்சபையின்
வித்தகா! நீயுமுனம்
கல்லானைக்(கு)இக்கருத்திக்
காட்டியவுன்—வல்லாண்மை
கட்டுரையே யாகிலிந்தக்
கல்லே றெழீஇக்கடலை
இட்டஇவர் முன்தி(ன்)னச்
செய்யே"

என்று பாடினார்.

அக்கணமே, அக்கல் ஏறு முக்காரம் இட்டது. வாலை ஆட்டி நிமிர்த்தியது. காலை நீட்டி எழுந்தது. இட்ட கல் கடலையைத் தின்றுவிட்டுத் தன் பழைய நிலையை அடைந்தது.

இதனைக்கண்ட சிவனடியார், மாதிருக்கும் பாதியனின் அருட்டிறத்தைவியந்தனர். பொறாமை கொண்டோர் இப்பொழுது பயந்தனர். வாயடங்கினர். ஓடோடி மலைவிட்டிறங்கித் தங்கள் தலைவரிடம் கூறினர்.

அத்தலைவரும் விரைந்து வந்து, முன் செய்கைக்கு மாறாகச் சிவப்பிரகாசரைச் சிவிகையில் ஏற்றி, தன் கூட்டத்தார் சுமந்து வர அழைத்துச் சென்று, தன் மடத்திலே எழுந்தருள்வித்து, பல நாள் பரிவுடன் பணிவிடைகள் புரிந்து வந்தார்.

சிவாலயத்தின் தத்துவம்

ஆலய அமைப்பு இரண்டுவிதம். ஒன்று சரீர அமைப்பை ஒட்டியது; மற்ருென்று இருதய கமல அமைப்பை ஒட்டியது. சத்த தாதுக்களின் நிலைமை முதலியவற்றை முன்னும், உள்ளத்தின் கண் சொல்லாயும் பொருளாயும் அமைந்துள்ள ஒவ்வொரு பொருளையும் பற்றிப் பின்னும் அறியலாம்.

சிவாலயங்களில் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபனமண்டபம் (நீராட்டு மண்டபம்), தம்பமண்டபம், நிருத்தமண்டபம் முதலியனவும், ஐந்து அல்லது மூன்று பிராகாரங்களும், கோபுரம். யாகசாலை, நந்தி, பலிபீடம், துவஜஸ்தம்பம் முதலியவைகளும் முக்கியமாகக் காணப்படுவனவாகும்.

தேகமாகிய ஆலயத்துக்குள்ளும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம். அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என ஆறு ஆதாரங்களும் அறியப்படும். மற்ருெரு வகை — உடலில் தலை, கழுத்து, மார்பு, நாபி, பாதம் என ஐந்து பிரிவுகள் உள்ளன. சிவாலயங்களில் கர்ப்பக்கிருகம் தலை; அர்த்த மண்டபம் கழுத்து; மகாமண்டபம் மார்பு; யாகசாலை நாபி; கோபுரம் பாதம் ஆகும்.

இவ்வுடலில் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என ஐந்து கோசங்கள் உள்ளன. கோசம்—சட்டை. கோயிலிலுள்ள ஐந்து பிராகாரங்களும் இவற்றைக் குறிக்கின்றன. அன்னமயகோசம் முதலியவற்றைத் தூலசரீரம், சூக்கும சரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம், காரணசரீரம் என அறிக.

ஐந்து பிராகாரங்களை நிவர்த்தி முதலிய ஐந்து கலைகளாகவும் கூறுப. இவைகள் எல்லாம் உண்மை நூல்களை முறையாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தக்கனவேயல்லாமல், தாமாகப் படித்துத் தெரிந்து கொள்ளத் தக்கன அல்ல. ஆதலின் சுருக்கமாகக் கூறப்பட்டன.

இனி, இருதய அமைப்பை ஒட்டி ஆராய்வாம். இருதயத்தில் கீழ் நோக்கிய தாமரை மொட்டு வடிவான மாமிச பிண்டம் ஒன்றிருக்கிறது. அதன் நடுவில் அங்குட்டப் பிரமாணமுள்ள இடைவெளி யிருக்கிறது. அது தகராலயம் எனப்படும். யோகிகள் தியானிப்பது இச் சபையிலே.

சிவாலயத்திலுள்ள தூபியும் இருதய கமலாகாரமாகத் தியா

னிக்கப்படும். அவற்றின் விரிவை நூல்களிற் கண்டு கொள்க.

இனி, இவ்வான்மா இச்சரீரத்தில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரீயம், துரீயாதீதம் என ஐந்தவத்தைப் படும். சாக்கிரம்—நனவு; சொப்பனம் — கனவு; சுழுத்தி—தூக்கம்; துரீயம்—பேருறக்கம்; துரியாதீதம்—உயிர்ப்படங்கு நிலை.

நனவு கனவு உறக்கமேயல்லாமல், ஒருவன் "நன்றாகத்தூங்கினேன்" என்று சொல்வதைக் கொண்டு பேருறக்க நிலையும், ஒரு சிலர் நன்றாய்த் தூங்கும்போது ஒன்று இரண்டு நிமிடம் சுவாசிப்பதையும்விட்டிருந்து பிறகு பெருமூச்சு விடுதலைக் கொண்டு உயிர்ப்பு அடங்குநிலையும், உண்டெனக் கொள்க. ஆலயங்களிலும் அவ்வண்ணமே மூலஸ்தானத்திலிருந்து வெளிவந்து, வீதியுலாப் போந்து, மீண்டும் மூலஸ்தானத்தை யடைவதையும் கண்டுகொள்க.

சிவாலயங்களில் இலிங்கம், நந்தி, பலிபீடம் மூன்றுள்ளன. அவை பதி, பசு, பாசம் மூன்றையுங் குறிப்பன. சிவாலயம் முழுவதும் தேவதாசொரூபமேயாகும். சிவபெருமான் தான் ஒருவரேயாயிருந்தும், ஆன்மாக்களுக்கு நிக்கிரகம் அநுக்கிரகம் செய்யும் பொருட்டுச் சாந்தமும் கோரமுமாகிய பல வடிவங்களைக் கொண்டருளுவர். அவ்வடிவங்களே ஆலயங்களில் பூசிக்கப்படும் மூர்த்திகளாகும்.

சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டுச் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் ஆகிய பஞ்ச கிருத்தியங்களும் செய்தருளுவர். இப் பஞ்சகிருத்தியம் நித்திய பஞ்சகிருத்தியம், மகா பஞ்சகிருத்தியம் என இருவகைப்படும். பூதபரிணமமாகிய தூல உடம்பைக் கொடுத்தலும், பிராரத்தகன்மம் புசித்துத் தொலைக்கும் வரை தூல உடம்பை நிறுத்துதலும், தூல உடம்புகளைச் சங்கரித்தலும், கன்மத்தை உருசிப்பித்து ஆணவ வலியையடக்கலும், தனது திருவடி நிழலில் இருந்து பேரின்பத்தை அநுபவிக்கச் செய்தலும் நித்திய பஞ்சகிருத்தியமாகும்.

இனி மாயையிலிருந்து தநு, கரண, புவன போகங்களைத் தோற்றுவித்தலும், தோற்றுவிக்கப்பட்டவைகளைப் புசிப்புக்காலம் வரை நிலைநிறுத்துதலும், அவற்றைத் தத்தம் காரணத்திலொடுக்குதலும், பக்குவம் வரும் அளவும் கன்மங்களைப் புசிப்பித்தலும், பக்குவ ஆன்மாக்களுக்குத் தீட்சை செய்து பாசத்தை அழித்துத் திருவடி நிழலிற் சேர்த்தலும், முறையே மகாபஞ்சகிருத்தியமாம்.

சிவாலயங்களில் நடைபெறும் நித்திய பூசைகளும் திருவிழாக்களும், இவ் விருவகைப் பஞ்சகிருத்தியங்களை உணர்த்துவனவாகும்.

★

ஆசிரியர் : இராம. மணிமேகலை. வெளியிடுபவர்: T. ராமநாதன், 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

அருள்

ஆசிரியர்: கலைச்செல்வி மணிமேகலை

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

அருள்

உ

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அன்பார்ந்த வாசகர்களுக்கு

இந்த இதழிலிருந்து, வினா விடை என்ற ஒரு புதிய பகுதி ஆரம்பம் ஆகிறது. அத்துடன், உங்கள் பிரச்னைகள் என்ற பகுதியும் தொடர்ந்து வெளியிடப்படுகிறது. இவ்விரண்டு பகுதிகளுக்கும் அன்பர்கள் தம் ஐயப்பாடுகளை எழுதியனுப்பலாம்.

ஆனால், ''வினா விடை'' என்ற பகுதியில், தத்துவம், சமயம், தர்ம சாஸ்திரம், புராணம், இதிகாசம் இவை சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு மட்டுமே பதில் அளிக்கப்படும். வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு அதில் பதில் அளிக்கப்படமாட்டாது.

வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு உரிய ஆத்மிக—தார்மிக—சமய ரீதியான ஆலோசனைகள், ''உங்கள் பிரச்னைகள்'' என்ற பகுதியில் வெளியிடப்படும்.

— ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	மார்ச்
கருணை 6	சந்தா	15-3-70
மாசி, சௌமிய	ரூ. 3-60	விலை 30 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, ''அருள்'' 4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17.

உ

திருச்சிற்றம்பலம்

புண்ணிலே புகுந்த கோலெனத் துயரம்
புகுந்தெனைக் கலக்கிய போதும்,
கண்ணிலே யெனது கருத்திலே கலந்த
கருத்தனே நின்றனை யல்லால்
மண்ணிலே வழங்கும் வானிலே பிறரை
மதித்திலேன் மதிக்கின்றூர் தமையும்
நண்ணிலேன் வேறென்(று) எண்ணிலேன் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே!

ஊன்பெறும் உயிரும் உணர்ச்சியும் அன்பும்
ஊக்கமும் உண்மையும் என்னைத்
தான்பெறு தாயும் தந்தையும் குருவும்
தனிப்பெருந் தெய்வமும் தவமும்
வான்பெறு பொருளும் வாழ்வுநற் றுணையும்
மக்களும் மனைவியும் உறவும்
நான்பெறு நண்பும் யாவுநீ யென்றே
நம்பினேன் கைவிடேல் எனையே!

—திருவருட்பா

இறைவி வணக்கம்

ஸ்ரீ மூக மஹாகவி

தாயே காமாக்ஷி! பகைவர்களை அடித்து, அவர்களால் விளையக் கூடிய பயத்தைப் போக்குவதில் வல்லமையுள்ள கலப்பையையும் உலக்கையையும் ஆயுதங்களாகத் தரித்துக் கொண்டு, வராஹ இனத்தின் தலைவி போன்ற பயங்கர மான முகத்தோடு திகழும் ஸ்ரீ மஹாவாராஹியாகவும், நீயே உலகில் விளங்கித் திருவிளையாடல் புரிகின்றாய்!

ஹே அம்பிகே! ஆச்சார்யனின் திருவடிகளை ஆராதித்த ஒரு சில பாக்யவான்கள், ஸபீஜயோகம் நிர்பீஜயோகம் என்னும் படிக்கட்டுகளின் உப்பரிகையை, உன்னுடைய கிருபையால் அடைகின்றனர்.

உலகங்களை ஈன்ற அன்னையே! மங்களவடிவினளே! நீ வெல்க, வெல்க! ஹே ஸ்ரீ காமாக்ஷிதேவீ! நீ வெல்க, வெல்க! மலைதருமகளே வெல்க! மஹேசனுக்குப் பிரிய மானவளே வெல்க, வெல்க! சித் சந்திர மண்டலத்திலிருந்து பொழியப்படுகின்ற அமிருதமழை வடிவினளே, நீ வெல்க, வெல்க!

வேதசாஸ்திர புராண பிரவசன திலகம்

பிரம்மஸ்ரீ

மஞ்சக்குடி இராஜகோபால சாஸ்திரிகள்

வேலவன்

அம்பிகைக்கு பாஷாரூபா என்று ஒரு பெயர் உண்டு. அதாவது, நாம் பேசுகிற பாஷைகள் எல்லாம் பராசக்தியின் வடிவமே என்பது, அதன் பொருள்.

அதேபோல், எழுத்துக்கள் எல்லாம் மந்திர வடிவங்களே! மந்திர சக்தி இல்லாத எழுத்துக்களே கிடையாது என்பது, சாஸ்திரங்களின் முடிபு.

எழுத்துக்களே மந்திரங்கள் என்னும்போது, அந்த எழுத்துக்களாலாகிய சொற்களை நாம் எவ்வளவு ஜாக்ரதையாக உபயோசிக்க வேண்டும்? பாஷையே பரதேவதை என்னும்போது, அந்த பாஷையை நாம் எவ்வளவு பயபக்தியோடு பயன்படுத்த வேண்டும்?

சபையில் உள்ளவர்களின் கைதட்டல்களைப் பெறுவதற்காக, அந்த ஜாக்கிரதையையும் பயபக்தியையும் கைவிட்டு விடுகிறவர்கள் பலரை நாம் பார்க்கிறோம். அவ்விரண்டையும் கைவிடாமலே, மக்களின் மனத்தைக் கவருகிற மகாமேதைகளும் ஒரு சிலர் உண்டு என்றால், அதற்கு ஓர் உதாரண புருஷராய் விளங்குபவர் பிரம்மஸ்ரீ மஞ்சக்குடி இராஜகோபால சாஸ்திரிகளே ஆவர்.

ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு இப்போது ஐம்பத்தொரு வயதுதான் ஆகிறது. ஆனால், அவரது உபன்யாசங்களைக் கேட்கும்போது, அவர் நூற்றைம்பது வயதைக் கூடத்

தாண்டினவராய் இருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம், மிக நெடுங்காலம் முயன்று பயின்றவர்களுக்கு மட்டுமே கிட்டக்கூடிய அவ்வளவு ஆழமான சாஸ்திர ஞானமும், தெளிவான சிந்தனையும், முதிர்ச்சியான பண்பாடும், அவருடைய உபன்யாசங்களில் ஒளி வீசி நிற்கின்றன. சேங்காலிபுரம் தீக்ஷிதர் பெருமானுக்குப் பிறகு, ஸ்காந்தம் போன்ற மாபெரும் புராணங்களைக் கையேடு இல்லாமலே ஒருவர் பிரவசனம் செய்கிறார் என்றால், அவர் நமது சாஸ்திரிகளே ஆவர்.

ஆனால், அவரது இந்தத் திறமையைப் பற்றி, நாம் அவ்வளவாக வியப்பு அடைய வேண்டியதில்லை யென்று தோன்றுகிறது. ஏனென்றால், ஸ்ரீ தீக்ஷிதர் பெருமானும் சாஸ்திரிகளும் ஒரே குலத்தில் தோன்றிய தாயாதிகள். முத்தண்ணா என்ற ஒரு புகழ்பெற்ற மகானை, ஸ்ரீ தீக்ஷிதர் தம் பாட்டனாராகப் பெற்றிருந்தார். அதேபோல, ஸ்ரீசாஸ்திரிகளுக்கும், முத்தண்ணா என்ற புகழ்பெற்ற மகான் ஒருவர், பாட்டனாராக அமைந்திருந்தார். அம்மாதிரி மகான்களின் வழி வந்த பெரியோர்கள், மகா மேதைகளாய் விளங்குவதில் வியப்பு என்ன இருக்கிறது?

ஸ்ரீ தீக்ஷிதரவர்களைப் போலவே, ஸ்ரீசாஸ்திரிகளும் மிக இனிய ஸ்வபாவம் படைத்தவர். வேத சாஸ்திர புராணங்களில் மட்டுமன்றி, மந்திர சாஸ்திரங்களிலும் சிறந்த ஆராய்ச்சி உடையவர். அண்மையில், சென்னை வீனஸ் காலனியிலுள்ள ஆஸ்திக சமாஜத்திலே அவர் நடத்தி வைத்த ஸ்ரீசுப்ரமண்ய மூல மந்திர மஹாயஜ்ஞமே, அதற்கு ஒரு சான்றாக விளங்கியது.

ஸ்ரீமகாபாரதத்திலே, ஸ்கந்தாபஸ்மார கிரஹம் என்ற ஒரு துர்தேவதையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. முற்பிறப்புகளில் செய்த வினையின் விளைவாக இந்த துர்தேவதையினால் பீடிக்கப்பட்டவர்கள், இப்பிறப்பில் பல சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். மயக்கம், வலிப்புநோய், பக்ஷவாதம், குஷ்டம், குன்மம், சித்தப்பிரமை போன்ற கோளாறுகள் எல்லாம், இந்தத் தேவதையினால் ஏற்படுபவையேயன்றி வேறல்ல. இவற்றை வைத்திய சிகிச்சைகளினால் குணப்படுத்த முடியாது.

வேறு எப்படித்தான் இவற்றை குணப்படுத்தலாம் என்றால்,—

குமார தந்திரம் என்னும் தந்திர சாஸ்திரத்திலே, சுப்ரமண்ய படலம் என்ற பிரகரணத்தில், ஸ்ரீஸ்கந்த மூலமந்திர யஜ்ஞம் என ஒரு ஹோமத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஹோமத்தைச் செய்தால், ஸ்கந்தாபஸ்மார கிரகத்தினால் ஏற்படக் கூடிய சகல பீடைகளும் நிவர்த்தியாகி, எல்லா க்ஷேமங்களும் ஏற்படும். ஸ்ரீமஞ்சக்குடி இராஜகோபால சாஸ்திரிகள், ஆஸ்திக சமாஜத்திலே நிகழ்வுற்ற தமது ஸ்காந்த புராண உபன்யாசத்தின் கடைசி நாளாகிய 11-1-70வையன்று, 'சத்ரு சம்ஹார த்ரிசதி' என்ற மகாமந்திர அர்ச்சனையை அங்கமாகக் கொண்ட இந்த ஸ்கந்த மூல மந்திர ஹோமத்தை, தாமே முன்னின்று மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். அதில் நேரில் கலந்துகொள்ளும் பேறுபடைத்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு, கண் கொள்ளாத் தெய்விகக் காட்சியாகவும், செவிகொள்ளா மந்திரமழையாகவும் அது அமைந்

திருந்தது. அன்று இரவு ''வேத சாஸ்திர புராண பிரவசன திலகம்'' என்ற பட்டமும், தங்கப் பதக்கமும், சென்னை உயர்நீதி மன்றம் பிரதம நீதிபதி ஸ்ரீ வீராசாமி அவர்களால், ஆஸ்திக சமாஜத்தின் சார்பில் ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு அளிக்கப்பட்டது.

ஸ்ரீ சாஸ்திரிகளின் சொந்த ஊராகிய மஞ்சக்குடி யென்பது, கும்பகோணத்துக்கும் திருவாரூருக்கும் இடையே, சேங்காலிபுரத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கிறது. இவரது தந்தையாரின் பெயர் கைலாஸநாத சாஸ்திரிகள். அன்னையாரின் பெயர் சங்கரியம்மாள். மூன்றுவது வயதிலேயே இவருக்கு அக்ஷராப்யாஸம் ஆரம்பமாகி விட்டது. ஏழாவது வயதிலிருந்து பத்தொன்பதாவது வயது வரையில், பன்னிரண்டு ஆண்டு காலம் முறைப்படி கிருஷ்ணயஜுர் வேதத்தை அத்யயனம் செய்து முடித்தார். பின்னர் பதினோராண்டு காலம், சேங்காலிபுரம் ஐயா தீக்ஷிதர் என்ற ஆச்சார்யரிடத்தில் வியாகரணம், வேதாந்தம் போன்ற சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

இன்று நம் நாட்டில் அஸ்வமேத யாகம் செய்யக்கூடிய அரசர்கள் கிடையாது. அப்படி யாரேனும் ஒரு பேரரசர் இப்போது தோன்றுவாராயின், அவருக்கு அந்த யாகத்தைச் செய்து வைக்கக் கூடிய பரிபூர்ண தகுதி படைத்தவர் ஸ்ரீ ஐயா தீக்ஷிதர் ஆவர். வேத சாஸ்திராதிகளில் கரைகண்ட அந்த மகாபண்டிதரிடம் மாணவராயிருந்து பயின்ற பெருஞ்சிறப்பு, நமது சாஸ்திரிகளது உபன்யாசங்களில் மிகத் தெளிவாக வெளியாகி விளங்குகிறது.

ஸ்ரீ சாஸ்திரிகளின் முன்னோர்களில் பலர், சன்யாசிகளாகவும் உபன்யாஸகர்களாகவும் இருந்திருக்கிறார்கள். சாஸ்திரிகள் தமது இருபத்தைந்தாவது வயதிலேயே உபன்யாஸம் செய்யத் தொடங்கிவிட்டார். தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்குள், அவருடைய புகழானது தமிழகத்தில் மட்டும் அன்றி வெளி மாநிலங்களிலும் பரவிவிட்டது. அதற்குக் காரணம், அவருடைய மதுரமான வாக்விபவம் மட்டும் அல்ல. அவரிடத்தே காணப்படுகிற அற்புதமான கானசம்பத்தும் அதற்கு ஒரு காரணமாகும் அவரைக் கேட்டால், தாம் முறையாக சங்கீதம் பயின்றதில்லை யென்று அவர் சொல்லுகிறார். ஆனால், சங்கீதத் துறையில் மஹா வித்வான்களாய் உள்ளவர்களும் கேட்டு அதிசயிக்கும் வகையில், மிக அபூர்வ ராகங்களிலெல்லாம் கூட அவர் சுலோகங்களைப் பாடுகிறார். பல வருஷ காலம் விடா முயற்சியோடு சாதகம் செய்து பெற வேண்டிய சாரீர உதவுபடி, அவரிடம் இயல்பாகவே அமைந்திருக்கிறது. அத்துடன், பழமையான தமிழ்ச் செய்யுள்களிலும்

இவருக்கு நல்ல தேர்ச்சியிருக்கிறது. இப்படிப் பல்வேறு வகையான சிறப்புகளைக் கொண்டிருப்பதால், இவருடைய உபன்யாசங்கள் பண்டிதர்களையும் பாமரர்களையும் ஒருங்கே வசீகரிப்பவையாய் அமைந்திருக்கின்றன.

இராமாயணம், மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம், தேவீ பாகவதம், ஸ்காந்தம், ஹாலாஸ்ய மாஹாத்மியம் போன்ற பல புராண இதிகாசங்களை, ஸ்ரீசாஸ்திரிகள் உபன்யாசம் செய்து வருகிறார். அத்துடன், ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளால் நிறுவப்பட்டுள்ள வேத தர்ம சாஸ்திர பரிபாலன சபையிலும் ஒரு முக்கியஸ்தராக இருந்து, தர்மசாஸ்திரப் பிரவசனங்கள் செய்து வருகிறார். ''காஞ்சி ஸ்ரீ ஆச்சார்யேந்திராளின் திருவருள்தான், இன்று என்னை ஓர் உபன்யாசகனாக ஆக்கி வைத்திருக்கிறது!'' என்று தம் நாத்தழுதழுக்க அவர் கூறுகிறார்.

மக்களின் உள்ளங்களில் ஆஸ்திகப் பயிரை வளர்ப்பதற்கென்றே இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட உத்தமர்களில், நமது சாஸ்திரிகள் ஒரு பிரதான புருஷராக விளங்குகிறார். அவர் இந்நிலவுலகில் இனிதே நீடூழி வாழுமாறு, அந்த இறைவனது திருவடிகளை நாம் இறைஞ்சுவோமாக! ●

உ

திருச்சிற்றம்பலம்

சோதிக் கொடியே ஆனந்த
 சொரூபக் கொடியே சோதியுருப்
பாதிக் கொடியே சோதியிடப்
 பாகக் கொடியே எனையீன்ற
ஆதிக் கொடியே உலகு கட்டி
 ஆளுங் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம
 நிமலக் கொடியே அருளுகவே!

பொருள்நற் கொடியே மாற்றுயர்ந்த
 பொன்னங் கொடியே போதாந்த
வருணக் கொடியே எல்லாம் செய்
 வல்லா ரிடஞ்சேர் மணிக்கொடியே
தருணக் கொடியே என்றனைத்
 தாங்கி யோங்கும் தனிக்கொடியே
கருணைக் கொடியே ஞானசிவ
 காமக் கொடியே அருளுகவே!

—திருவருட்பா

இறைவன் கருணையைப் பெறுவது எப்படி?



ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியார்

ஒவ்வொருவரும் இறைவனுடைய கருணையைப் பெற வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். ஆனால் அதற்குரிய வழிவகை தெரியாமல் தவிக்கிறார்கள்.

ஒரு ஊருக்குப் போக வேண்டும் என்றால், வழி தெரிந்து கொண்டு போவது மிக மிக அவசியமானது. அதுபோல் இறைவனுடைய கருணையைப் பெறவேண்டுமானால், அதற்கு வழி எது என்பதை உணர்வது இன்றியமையாத அறிவுடைமையாகும்.

இறைவன் கருணைக்கடல்; கருணை மேரு; கருணை மேகம். யாவருக்கும் மேலானவன்; அரியவன்; பெரியவன்.

இத்தகைய எம்பெருமானுடைய கருணையை நாம் பெற வேண்டுமானால், நாம் கருணையுடையவர்களாக இருக்கவேண்டும். முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும். மானை மான் காட்டிப் பிடிக்கவேண்டும். அதுபோல் எளியவர்களிடத்தில் நாம் கருணை காட்டினால், நாம் இறைவனுடைய கருணையைப் பெறலாம். கருணையைக் கருணையால்தான் பெறவேண்டும்.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்தார்கள். அப்போது வான் மழை சுருங்கி, எங்கும் உணவுப் பொருள் அருகிப் பஞ்சம் பெருகியது. அதனைக் கண்ட இரு தவசீலர்களும், இறைவனிடம் படிக்காசு பெற்று, பெரிய அளவில் உணவு தயாரித்து, பறைசாற்றி, வறியார்க்கு முப்போதுந் தப்பாது உணவு அளித்தார்கள்.

திருமருகல் என்ற திருத்தலத்துக்கு ஞானப்பாலுண்ட ஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளினார். விடியற்காலை திருக்கோயிலுக்குச் செல்லுகின்றார். அங்கு ஓர் இளம் பெண் அழுதுகொண்

டிருந்தாள். தாவிப் படரக் கொழுகொம்பில்லாத தனிக் கொடி போல், அம்மடவரல் "ஓ" என்று வாய்விட்டுக் கதறிப் பதறிக் கண்ணீர் வடித்து, துடித்துத் துள்ளி அழுவதைக் கண்டார் ஞான சம்பந்தர்.

அவர் அறிவுடன் தொடர்பு கொண்டவர். ஞானம் என்றால் அறிவு. சம்பந்தம்—தொடர்பு கொள்வது.

அறிவின் பயன் எது? பிறவுயிர் படும் துன்பத்தைக் கண்டு கருணை செய்வதுதான் அறிவி னால் ஆகும் பயன் என்கின்றார் திருவள்ளுவர்.

"அறிவினா னாகுவ துண்டோ
பிறிதின்நோய் தன்நோய்
போல் போற்றாக் கடை"

ஆதரவு இன்றித் தன்னந்தனி யாக ஒரு பெண்மணி அழுவதைக் கண்ட திருஞானசம்பந்தர், "நாட்டில் நாலாயிரம் நிகழ்ச்சி கள்! நாம் வழிபாடு செய்யத் திருக்கோயிலுக்குப் போகின் றோம். யார், எதற்காக, எங்கு அழுதால் நமக்கென்ன? ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு வகை யில் துன்பம். ஊழ் காரணமாக உயிர்கள் துன்புறுகின்றன" என்று கருதிக் கோயிலுக்குள் சென்றாரா? இல்லை, இல்லை.

துன்பக் கடலில் விழுந்து துடிக் கின்ற அவள்பால், அப்பெருமா னுக்குக் கருணை வெள்ளம் பொங்கி எழுந்தது. அவளுடைய துன்பத்தைக் களைந்த பின்னர் ஆலய வழிபாடு செய்யலாம் என்று அவர் கருதினார்.

அழுகின்ற அப்பெண்மணியை நோக்கி "அம்மா அழாதே! உனக்கு உற்ற இடர் யாது?" என்று தாய் போல் பரிந்து கேட்டருளினார். அவள் திரு ஞான சம்பந்தரைத் தொழுது அழுது கொண்டே கூறுகின்றாள்:

"ஐயனே! வனப்பூரில் வாழ் கின்ற தாமன் என்ற வணிகர் தலைவனுடைய மகள் யான். என் தந்தைக்கு ஏழு புதல்விகள். என் அத்தை மகன், தாய் தந்தை யர் இன்றி எங்கள் வீட்டில் வளர்ந்து வந்தார். என் பிதா ஒவ்வொரு பெண்ணாக 'உனக்குத் தருவேன் தருவேன்' என்று கூறி, சொன்ன சொல்லைக் காற்றில் பறக்கவிட்டு, தனவந்தர்கட்குக் கல்யாணம் பண்ணித் தந்தார். முடிவில் என்னையும் அவ்வாறே இவருக்குத் தருவதாக வாக் களித்து, வேறொரு தனவந்தருக் குத் தருவதாகத் தீர்மானித்தார்.

"வாக்களித்த மாத்திரத்தி லேயே, யான் என் அத்தை மக னுக்கு மனைவியாகிவிட்டேன். பிறகு மற்றவரை மணப்பது பெண்ணறமாகாது. ஆதலால், வாடி வருந்தியுள்ள என் அத்தை மகனும் நானும், உற்றாரையும் பெற்றாரையும் துறந்து, அயலூர் சென்று மணம் புரிந்து கொள் வோம் என்று கருதிப் புறப்பட்டு வழி நடந்துவந்தோம். இரவு இந்த மடத்துத் திண்ணையில் படுத்தோம். அரவந் தீண்டி இதோ என் எதிர்காலக் கண வனார் இறந்து விட்டார்.

"பெருமானே! அரவந் தீண்டி யும் யான் தீண்டாது அழுகின் றேன். விதிப்படி பாணிக் கிரகணம் ஆகாமையால், இவரை யான் தீண்டி அழவும் இயலாதவளாகக் கலங்கி நிற்கின் றேன். தாய், தந்தை, உடன் பிறந்தார் முதலிய அனைவரை-

யும் துறந்து, இவரை நம்பிவந்தேன். இவர் என்னை நட்டாற்றில் விட்டு நடந்துவிட்டார். இனி எனக்கு வாழ்வு ஏது? என் முன்வினை மூண்டது போலும்'' என்று கூறி முறையிட்டாள்.

திருஞான சம்பந்தர், அப்பெண் மணியின் துயரைக் கேட்டுப் பெரிதும் கருணைகொண்டார்.

''அம்மா, அழாதே! திருக்கோயிலில் கருணைக்கடலாயுள்ள எம்பெருமான், உன் துயரைக் களைவார். வருந்தற்க'' என்று ஆறுதல் கூறியருளினர்.

அவளை அழைத்துக்கொண்டு திருக்கோயிலுக்குள் சென்றார். ''இறைவனே! ஆலம் உண்ட நீலகண்டப் பெருமானே! நஞ்சரவணிந்த நம்பனே! பாம்பணையில் துயின்ற பரந்தாமனும், விதி விலக்கு வரையும் வேதனும் போற்றும் வித்தகனே! இவள் உன்னை நாத்தழும்பேற ஏத்தி ஏத்தித் தோத்திரம் புரிகின்றாள். இவள் துயரைக் களைவாய்'' என்று சுவாமியிடம் முறையிட்டார்.

''சடையா யெனுமால் சரணீ
யெனுமால்
விடையா யெனுமால் வெருவா
விழுமால்
மடையார் குவளை மலரும்
மருகல்
உடையாய் தகுமோ இவள்
உள் மெலிவே''

என்ற தேவாரப் பாடலைப் பாடியருளினர்.

அந்த அமுதப் பாடல் பாடியவுடன், இறைவன் கருணையால், மாண்ட செட்டிக்குமாரன் உயிர் பெற்று எழுந்தான். அப்போது, அல்லல்பட்டழுத அம்மங்கை ஆனந்த வெள்ளத்துள் திளைத்தாள். இருவருக்கும் அக்கணமே திருமணஞ் செய்வித்தார் திருஞானசம்பந்தர்.

இறைவனுடைய கருணையை நாடிய ஞானசம்பந்தர், தானும் கருணையுடையவராகத் திகழ்ந்தார்.

குசேலமுனிவர் வறுமையாகிய சிறுமையில் முழுகினவர். அப்படி வறுமைப் பிணி மூடியும், அவருடைய மனம் சதா கண்ணபிரானையே நாடியது.

மனைவியின் வேண்டுகோளின் படியே கண்ணனைக் காணப் புறப்பட்டார். அவர் வாழும் அவந்திக்கும் துவாரகைக்கும் நெடுந்தூரம். குடையும் பாதரட்சையும் அவருக்கு ஏது? கடும் வெயில். அக்கினிப் பிழம்பாக ஆதித்தன் காய்கின்றான். மண் சுடுகிறது. குசேலர் இந்த வெயிலில்தான் நடக்கின்றார்.

அவர் செல்லும் சாலையின் இருபுறங்களிலும், நல்ல நிழல் தரும் மரங்கள் குளிர்ந்த நிழலைத் தந்துகொண்டிருக்கின்றன. குசேல முனிவர் அந்த நிழலில் ஒதுங்கிச் சென்றால், வெயிலின் கொடுமையிராது. ஆனால் அவர் நிழலில் ஒதுங்காமல் நடுச்சாலையில் செல்கின்றார். கால் சுடுகின்றது, தலை சுடுகின்றது. இரு கரங்களையும் விரித்துத் தலைக்குமேல் மறைத்துக்கொண்டு, ''கண்ணா! கண்ணா! தாங்கமுடியாத வெப்பமாக இருக்கின்றதே, என் செய்வேன்? இன்னும் எத்தனை தூரம் இருக்கின்றதோ?'' என்று கூறிக்கொண்டே நடக்கின்றார்.

அவர் ஏன் நிழலில் ஒதுங்கவில்லை? காரணம் தெரி

கின்றதா? ''ஈக்கள், எறும்புகள், புழுக்கள் முதலிய சிற்றுயிர்கள், கொடிய வெயிலைத் தாங்கமாட்டாது நிழலில் ஒதுங்கிஇருக்குமே? நாம் நிழலில் நடந்தால் அச் சிற்றுயிர்கள் இறந்துவிடும்'' என்று கருதினர். கருணை காரணமாகவே நிழலில் ஒதுங்காமல் வெயிலில் நடந்து துன்புற்றார். இத்தகைய கருணை அவர்பால் இருந்ததனல், கண்ணபிரானுடைய கருணை அவர்பால் சுரந்தது.

''சீத நீழற்செலில் சிற்றுயிர்த்
தொகை
போதசாம்பும் என்றெண்ணிய
புந்தியான்
ஆதவன் தவழ் ஆறு நடந்திடும்
காதல் அங்கை விரித்துக் கவித்
தரோ''

—குசேலோபாக்கியானம்.

நம் தமிழகத்தில் பிறவுயிர்க்குப் பெரிதும் இரங்கிய திருவாளர்கள் பலர் வாழ்ந்தார்கள். ஓரறிவுடைய முல்லைக்கொடி தனியே வாடி நிற்பதைக் கண்ட பாரி மன்னன், தன் தேரை நிறுத்தி அதன் மீது கொடியைச் சுற்றி, அதற்கு உதவி புரிந்து நடந்து சென்றுன். அவனுடைய கருணை எத்துணை விழுமியது?

ஒரு தலைவன் அயலூர் சென்றிருந்தான். தன் கருமம் முடிந்தது. அவன் இளைஞன். கருமம் முடிந்ததும் தன் வீட்டிலுள்ள தலைவியை நினைத்தான். காதல் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது! தலைவியை நோக்கித் தலைவன் புறப்பட்டான்.

மணிகள் பூட்டிய தேரில் வருகின்றுன். வழியில் இருமருங்கிலும் பூச்செடிகள். நிரம்ப மலர்கள் குலுங்குகின்றன. அம் மலரில் வண்டுகள் தம்தம் காதல் நிறைந்த பெண் வண்டுகளுடன் அமர்ந்து தேனைக் குடிக்கின்றன. இதனைக் காண்கின்றுன் தலைவன்.

அவன் உள்ளம் கருணைமயமானது. தேரில் மணிகள் ஒலித்தால், தேன் உண்ணும் வண்டுகள் அஞ்சியகலும். அவைகட்கு இடையூறுகும் என்று அவனுடைய திருவுள்ளம் எண்ணி உருகியது. தேரை நிறுத்தினன். தேரில் உள்ள ஒவ்வொரு மணியின் நாக்கையும், அசையா வண்ணம் சிறுசிறு கயிறுகளால் கட்டினன்.

இப்போது மணியில் நா அசையாது நின்றது. வண்டுகட்கு இடர் விளையாது என்று மன நிறைவு கொண்டான். தேர் ஏறித் தன் காதலியை நாடிச் சென்றுன். அப்பெருமகனின் கருணையை நினைத்தால் கல் மனமும் கரையுமே!

''பூத்த பொங்கர் துணையோடு
தாதுண் பறவை பேதுறல்
அஞ்சி
மணி நாவார்த்த மாண் வினைத்
தேரன்
உவக்காண்தோன்றும்''

—அகநானூறு

ஆகவே, இறைவனுடைய கருணையைப் பெற விழைகின்ற ஒவ்வொருவரும், பிறவுயிர்களிடம் கருணைகாட்டவேண்டும். எல்லா உயிர்களிடத்திலும் இறைவனைப் பார்க்கவேண்டும். எல்லாவுயிர்களும் இறைவனுடைய கோயில்கள். ஆதலால் இறைவனை எவ்வுயிர்களிலும் கண்டு, அவ்வுயிர்கட்கெல்லாம் கருணை செய்தல் வேண்டும்.

அதுவே கடைத்தேறும் வழி!

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரத ஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராமதீக்ஷிதர்

பாபிகள் பிறருடைய கெட்ட குணங்களை அறிவதில் எவ்வளவு விருப்பம் கொள்ளுகிறார்களோ, அவ்வளவு நல்ல குணங்களை அறிவதில் விருப்பம் கொள்ளுவதில்லை.

பெரிய காரிய சித்தியை விரும்புகிறவன், ஆதிமுதல் தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஸ்வர்கத்திலிருந்து அமிருதம் விலகாதது போல், தர்மத்திலிருந்து அர்த்த ஸித்தி விலகுவதில்லை.

எவனுடைய மனம் பாபச் செயலிலிருந்து விலகி நல்ல காரியத்தில் ஈடுபடுகிறதோ, அவனால் அதன் பயனான சுகங்கள் யாவும் அறியப்பட்டதாக ஆகிறது.

எவன் தர்மம், அர்த்தம், காமம் இவைகளை அந்தந்தக் காலத்தில் செய்கிறானோ, அவன் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் அவைகளின் பயனை நிரம்ப அடைகிறான்.

எவன் கோபம் சந்தோஷம் இவைகளின் வேகத்தை அடக்குகிறானோ, எவனது மனம் ஆபத்துக்களில் கலக்கத்தை அடையவில்லையோ, அவன் ஸம்பத்துக்கு இருப்பிடமாக ஆகிறான்.

பெரும் தீங்கைச் செய்ய வல்லமை உள்ளவனுடன் விரோதத்தை அடைந்து, நாம் வெகு தூரத்தில் இருக்கிறேம் என்று நம்பி இருக்கக்கூடாது.

ஸ்திரீகளிடத்திலும், அரசர்களிடத்திலும், பாம்புகளிடத்திலும், தான் கற்ற வேதத்திலும், பணக்காரர்களிடத்திலும், சத்ருக்களிடத்திலும், போகங்களிலும், ஆயுஸ்ஸிலும் எந்த புத்திமான் விசுவாசம் வைக்கமுடியும்? (அடிக்கடி இவைகளை கவனித்து அறிய வேண்டுமெனக் கருத்து)

சத்ருக்களுடைய புத்தியாகிற பாணத்தால் அடிபட்டவனுக்கு, வைத்யர்களுமில்லை, மருந்துகளுமில்லை. ஹோமங்களோ மந்திரங்களோ இல்லை. நன்மையைச் செய்யும்காரியங்களுமில்லை, அதர்வண வேதங்களில் கூறிய ஆபிசார மந்திரங்களுமில்லை. ரஸகுளிகையுமில்லை.

ஸர்ப்பமும், அக்னியும், ஸிம்ஹமும், தன்குலத்தில் பிறந்த புத்ரனும், மனிதனல் அவமதிக்கத் தகுந்தவர்களல்ல. இவர்கள் யாவரும் மிகுந்த தேஜஸ்ஸுள்ளவர்கள்.

பிள்ளைகளுடன் கூடிய நீர், கொடிக்கு சமமானவர். பாண்டுவின் புத்ரர்கள் தேக்கு மரங்களுக்கு ஒப்பானவர்கள். பெரிய மரத்தை அண்டாத கொடி, ஒரு பொழுதும் விருத்தியாவதில்லை.

வயது முதிர்ந்தவர் வரும்போது, யௌவனமுடைய மனிதனின் பிராணன் வெளிப்புறப்படுகின்றது. அவன் எதிர்கொள்வது, நமஸ்காரம் செய்வது, இவற்றால் அந்தப் பிராணனைத் திரும்ப அடைகிறன்.

தீரனை மனிதன், தன் வீடு வந்த ஸாதுவுக்கு ஆஸனம் கொடுத்து, ஜலத்தால் பாதங்களை அலம்பி, ஸுகம் விசாரித்து, தன் நிலையை அறிவித்து, பின்பு சிரத்தையுடன் அன்னமளிக்க வேண்டும்.

எவனுடைய வீட்டில் வேதம் அறிந்த அந்தணன் அவனுடைய லோபத்தினலோ, அவனிடமுள்ள பயத்தினலோ, அவனதுகிருபணத் தன்மையினலோ, பாத்ய ஜலத்தையும் மதுபர்கத்தையும், பசுவையும் பெற்றுக் கொள்ளவில்லையோ, அந்த வீட்டுக்காரனுடைய உயிர் வாழ்க்கையைப் பயனற்றதாகப் பெரியோர்கள் சொல்லுகிறர்கள்.

உப்பு, பக்குவமான அன்னம், தயிர், பால், தேன், எண்ணெய், நெய், எள்ளு, மாம்ஸம், பழங்கள், கிழங்குகள், கீரை, சிவப்பு வஸ்திரம், நல்ல வாசனைப் பொருள்கள், வெல்லம் இவைகளை விற்கக்கூடாது. (இவைகள் நிரம்ப இருந்தால், இவைகள் இல்லாதவர்களுக்கு இனமாகக் கொடுக்கவேண்டுமென்றும், அதனல் நிரம்ப தர்மம் கிடைக்குமென்றும் கருத்து)

எவன் கோபமற்றவனும், ஓட்டாஞ்சல்லி கருங்கல் பொன்

இவைகளை சமமாக நினைப்பவனும், நிந்தை புகழ் இவற்றில் ஒழிவடைந்தவனும், விருப்பு வெறுப்புக்களை விட்டவனும், உதாஸீனன் போன்றவனுமாக இருக்கிறானோ, அவன்தான் சிறந்த பிக்ஷு".

வனத்தில் வசித்துக்கொண்டு, தினை, கிழங்கு இங்குத விருக்ஷத்தின் காய், கீரை இவைகளால் ஜீவிப்பவனும், மனத்தை அடக்கினவனும், அக்னி கார்யங்களில் ஸாவதானமாக நடப்பவனும், அதிதிகளை பூஜிப்பதில் தவறாதவனும், காரிய பாரத்தை வஹிக்கிறவனும், புண்யத்தைச் செய்கின்றவனும் ஆன இவனே தபஸ்வியாவான்.

புத்திமானுக்கு அபகாரத்தைச் செய்துவிட்டு, தூரத்தில் இருக்கிறேனென ஸமாதானத்தை அடையக்கூடாது. புத்திமானுடைய கைகள் நீண்டவைகள். அவனைத் துன்புறுத்தினால், துன்புறுத்தினவனை அக்கைகளால் துன்புறுத்தி விடுவான்.

பொறுமை இல்லாதவனும், மனைவியைக் காக்கிறவனும், வரும்படி பிரித்துக் கொடுக்கிறவனும், பிரியத்தைச் சொல்லுகிறவனும், மிருதுவான ஸ்வபாவமுள்ளவனும், ஸ்திரீகளிடத்தில் இனிமையாகப் பேசுகிறவனுமாக இருக்கவேண்டும் ஆனால் ஸ்திரீகளுக்கு வசமாக ஆகிவிடக்கூடாது.

பூஜிக்கத்தக்கவர்களும், மஹா பாக்யமுள்ளவர்களும், பரிசுத்தர்களும், வீட்டை விளங்கச் செய்கிறவர்களுமான ஸ்திரீகள், வீட்டிற்கு லக்ஷ்மிகளாகச் சொல்லப்படுகிறார்கள். ஆகையால் அவர்கள் நன்கு காக்கப்படத்தகுந்தவர்கள்.

தகப்பனுக்கு அந்தப்புரத்தின் மேல்பார்வையை அளிக்கவேண்டும். தாய்க்குச் சமையற்கட்டின் மேல்பார்வையை அளிக்கவேண்டும். பசுக்களிடத்தில் தனக்கு சமமாயுள்ள கூடப்பிறந்தவர்கள் முதலியவர்களை மேல்பார்வைக்கு வைக்கவேண்டும். தானே வயல்களைப் பார்க்கச் செல்லவேண்டும். வேலைக்காரர்களை வியாபாரத்தைக் கவனிக்க ஏவ வேண்டும். புத்திரர்களை பிராமணர்களுக்கு பணிவிடை செய்யும்படி ஏவ வேண்டும்

அக்னிக்கு ஒப்பான தேஜஸ்ஸை உடையவர்களும், நற்குலத்தில் பிறந்தவர்களுமான ஸாதுக்கள், பொறுமையுடன் கூடியவர்களாகவும், உள்ளே இருக்கும் தேஜஸ்ஸை வெளிக் காட்டாதவர்களாகவும், கட்டைக்குள் அக்னி இருப்பது போல் இருக்கின்றனர்.

எந்த அரசனுடைய ஆலோசனையை, அவனைச் சேர்ந்தவர்களும் வெளியில் உள்ளவர்களும் அறியவில்லையோ, எந்த அரசன் எங்கும் சாரர்களாகிய கண்கள் உடையவனாய் இருக்கிறானோ, அந்த அரசன் நீண்டகாலம் ஐச்வர்யத்தை அனுபவிப்பான்.

தர்மம் அர்த்தம் காமம் இவைகள் நிமித்தமான காரியங்களைச் செய்யப் போகிறவன், சொல்லக் கூடாது. செய்தவைகளைச் செய்த பிறகுதான் வெளியிட வேண்டும். அப்படியானால் ஆலோசனையானது வெளியாகாது.

மலையின் உச்சியிலோ, உப்பரிகையிலோ ஏறி, ஏகாந்தமாக இருந்து ஆலோசனை செய்ய வேண்டும். செடி கொடிகள் இல்லாத காடாக இருந்தால், அவ்விடத்தில் ஆலோசனை செய்ய வேண்டுமெனக் கூறப்படுகிறது.

ஸ்நேஹிதனில்லாதவனும், ஸ்நேஹிதனானாலும் கல்வியில்லாதவனும், கல்வியுள்ளவனாயிருந்தாலும் அடக்கமில்லாதவனும், முடிவான ஆலோசனையை அறியத்தகுந்தவனல்ல.

வேதமறியாத பிராமணர்களை எப்படி சிரார்த்த பிராமணர்களாக வரிக்கக் கூடாதோ, அப்படியே ஸந்தி விக்ரஹம் முதலிய ராஜநீதியை அறியாதவன் மந்திராலோசனையைக் கேட்க அருகனாகமாட்டான்.

சிவனும் விஷ்ணுவும் ஒருவரா? அல்லது இருவரா?



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்

பரமேசுவரனும் ஸ்ரீமந் நாராயணனும் ஒரே வஸ்து, இரண்டல்ல. இதுதான் எல்லா சாஸ்திரங்களின் ஸித்தாந்தம்.

பெயர் வேறு, உருவம் வேறு, வேலை வேறு, ஆனால் உள்ளிருக்கும் வஸ்து ஒன்றே. நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்களின் ஸித்தாந்தமும் இதுவே.

ஆனால் மூவகையான கொள்கைக்காரர்கள், பரமசிவன் வேறு-ஸ்ரீமந் நாராயணன் வேறு என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

மெய்கண்ட சாஸ்திரம் என்று மற்றொரு பெயருடைய சைவ ஸித்தாந்தத்தில், பரமசிவனும் ஸ்ரீமந் நாராயணனும் வேறு வேறு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத்வாசாரியரும் அப்படியே சொல்லியிருக்கிறார். ஸ்ரீ ராமானுஜருடைய அபிப்பிராயமும் அதுதான்.

ஸ்ரீகண்டாசாரியாரும் பிரம்ம ஸூத்திரத்திற்குப்பாஷ்யம் செய்திருக்கிறார். அவருடைய அபிப்பிராயம் மெய்கண்ட சாஸ்திரத்தின் அபிப்பிராயத்திற்கு ஒத்தது. ஸ்ரீமந் நாராயணனுடைய ஹிருதயத்தில் பரமசிவன் அந்தர் யாமியாக இருப்பதாக அவர் சொல்லுகிறார்.

ஸ்ரீமத்வாசார்யர், பரமசிவனுடைய ஹிருதயத்தில் ஸ்ரீமந் நாராயணன் அந்தர்யாமியாக இருப்பதாகச்சொல்லியிருக்கிறார். ஸ்ரீ ராமானுஜர், மற்ற பொருள்களிலெல்லாம் ஸ்ரீமந் நாராயணன் அந்தர்யாமியாகவிருப்பது போல், பரமசிவனாகிய ஜீவனிலும் அந்தர்யாமியாக இருக்கிறார் என்று சொல்லுகிறார்.

இவருக்குள் அவரோ, அவருக்குள் இவரோ இருப்பதாக அவர்கள் சொல்லுவதால், ஒருவருக்குச் செய்யும் நமஸ்காரம் இருவருக்கும் செய்வதுதான். மத்வ ஸித்தாந்தப்படி சிவாலயங்களுக்குப் போகலாம். ஆனால் ருத்திர

னுக்கு என்று நமஸ்காரம் செய்ய வேண்டும். ராமானுஜ சித்தாந்தப்படி விஷ்ணு கோயிலுக்குப் போவது போதும். ஆனால் வழியில் சிவ மூர்த்தத்தைக் கண்டால் ஸேவிக்க வேண்டும். பரமசிவன் பரமபாகவதராகையால், கண்டவிடத்தில் அவரை வணங்காமல் போதல் நிந்தனையாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மெய்கண்ட ஸித்தாந்தம் சுமார் 800 வருஷங்களுக்கு முன்னும், இராமானுஜ ஸித்தாந்தம் சுமார் 700 வருஷங்களுக்கு முன்னும், மத்வ ஸித்தாந்தம் சுமார் 600 வருஷங்களுக்கு முன்னும் ஏற்பட்டவை. திருவாவடுதுறை முதலிய ஆதீனங்களும், சிவ தீக்ஷை செய்துகொள்வோரும், சைவ ஸித்தாந்தத்தை அனுஷ்டிப்பவர்கள்.

சைவ ஸித்தாந்தம் 14 கிரந்தங்களையுடையது. பண்டார சாஸ்திரம் என்றும் அவைகளுக்குப் பெயர். இந்த மூன்று ஸித்தாந்தப்படியும் தீக்ஷை உண்டு.

இராமானுஜ ஸித்தாந்தப்படி, ஜன்மத்தில் ஒருமுறை ஸமாசிரயணம் செய்து கொள்ள வேண்டும். மத்வஸித்தாந்தப்படி பஞ்ச முத்ரா தாரணம் ஆசார்யர்களைக் காணும் போதெல்லாம் செய்து கொள்ள வேண்டும். சைவத்தில் முத்ராதாரணம் இல்லையாயினும், தீக்ஷை உண்டு. ஆதி சைவர்கள் என்று சொல்லப்படும் குருக்கள்மார்களும், வேளாள பரம்பரையினரும், சிவ தீக்ஷை செய்துகொள்ளுகிறார்கள்.

மத்வஸம்பிரதாயம் தெலுங்கு, கன்னடம், மஹாராஷ்டிரம் பேசப்படும் பிரதேசங்களில் வியாபித்துள்ளது. இராமானுஜஸம்பிரதாயம் தமிழ்தேசத்தில முக்கியமாகவும், தெலுங்கு தேசத்தில் கொஞ்சமாகவும் வியாபகமுடையது. இந்தமதஸ்தர்கள் பரமசிவன் வேறு, ஸ்ரீமந்நாராணன் வேறு என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒருவர் மற்றவரில் அந்தர்யாமியாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

இந்த மூன்று மதங்களும் ஏற்படுவதற்குமுன், அதாவது 800 வருஷங்களுக்குமுன், ஜனங்கள் எப்படி அபிப்பிராயப்பட்டிருந்தனர்? அந்தக்கால அபிப்பிராயத்திற்கு ஆதாரமாக இருந்த பிரமாணங்கள் வேதங்கள், சாஸ்திரங்கள், 18 புராணங்கள் ஆகியவைகளே.

ஸ்ரீராமானுஜர் காலத்திற்கு முந்தியும், விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் சிற்சிலரால் அபிமானிக்கப்பட்டு வந்தது. திருமலைநம்பி, ஆளவந்தார், நாதமுனிகள் முதலியவர்கள் விசிஷ்டாத்வைதிகள். நாதமுனிகளிடமிருந்து ஸ்ரீராமானுஜர் உபதேசம் பெற்றதால், விசிஷ்டாத்வைதத்திற்கு நாதோபஜ்ஞம் என்றும் பெயருண்டு.

நாதமுனிகளின் பிதா ஈசுவர பட்டர். ஸ்ரீராமானுஜரின் பிதா கேசவஸோமயாஜி; ஸோமயாகம் செய்தவர். அவருடைய மாமா திருமலைநம்பிகள். ஸ்ரீராமானுஜர் பிதா விவாஹம் செய்துகொண்டபோது, அவர் ஸமாசிரயணம் செய்துகொண்டால்தான் பெண் கொடுக்க முடியுமென்று பெண் வீட்டுக்காரர்கள் சொன்னார்களாம். ஆகையால் விசிஷ்டாத்வைத அனுஷ்டானங்களில் அவர்

கள் மிகப்பற்றுடையவர்கள் என்று தெரிகிறது. ஆகையால் ஸ்ரீராமானுஜர், தமது மாதுல பரம்பரையில் அபிமானிக்கப் பட்டு வந்த ஸித்தாந்தத்தைப் பிரபலப்படுத்தினார் என்றேற்படுகிறது.

விசிஷ்டாத்வைதக் கொள்கைகளுக்குத் திருவாய்மொழி ஆதாரமென்று அவர் கொண்டார். சைவஸித்தாந்தத்திற்குத் தேவாரம், திருவாசகம் ஆதாரங்களென்று சைவர்கள் கொண்டார்கள். மத்வாசாரியர் வேதத்தையே ஆதாரமாகக்கொண்டவர். வேறு கன்னட கிரந்தங்களை அவர் ஆதாரமாகக் கொள்ளவில்லை.

தேவாரம் திருவாய்மொழி களை, அந்தந்த மதஸ்தர்கள் வேதத்திற்குச் சமமாக வைத்துக் கொண்டார்கள். மத்வாசாரியர் கன்னடபாஷைக்கிரந்தம் எதையும் தமக்கு ஆதாரமாகத் தேடவில்லையாயினும், கன்னடபாஷைக்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்தினார். கன்னடத்தில்தான் புராணத்தைச் சொல்லவேண்டுமென்றும், கன்னடத்தைத்தான் சிராத்தகாலத்தில் பேசவேண்டுமென்றும் சொல்லி, அதற்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்தினார்.

இப்படியெல்லாம் மற்ற மதாசாரியர்கள் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினார்களாயினும், நம்முடைய ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாத ஆசாரியர்கள் ஒரு

கட்டுப்பாடும் வைக்கவில்லை. நமக்கு ஒரு தீக்ஷையுமில்லை. பிராம்மணர்களுக்கு உபநயனந் தான் தீக்ஷை

புராணக்கதைகளில் ஸ்ரீ ராமன் ஸ்ரீ கிருஷ்ணன் முதலியவர்களுடைய சரித்திரங்கள் சொல்லப் பட்டிருப்பதில், அவர்கள் முத்ரா தாரணம் செய்து கொண்டதாகக் காணவில்லை. அத்துவைதிகளாகிய நாம் எல்லாக் கோயில்களுக்கும் போகிறோம். வீரசைவர்கள் விஷ்ணு கோயிலுக்குப் போக மாட்டார்கள். ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தில் சிரத்தை யுள்ளவர்கள் சிவன் கோயிலுக்குப் போகமாட்டார்கள். நாம் மாத்திரம் எல்லாக் கோயில்களுக்கும் போவதால், நமது பெரியோர்கள் அபிப்பிராய மென்னவென்று பார்ப்போம். அக்காலத்தில் வைதிகமதந் தவிர வேறு மதமில்லை.

நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் "பிரச்னோத்தர ரத்னமாலிகை" என்ற கிரந்தத்தில் தமது அபிப்பிராயத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"சங்கரநாராயணாத்மா ஏக :" என்று அவர் சொல்லியிருக்கிறார். சங்கரநாராயணன் கோயில் என்றுஒருக்ஷேத்திரமுமிருக்கிறது. ஸ்வாமி ஒரு பக்கம் சிவனாகவும், மற்றொருபக்கம் நாராயணனாகவுமிருக்கிறார்.

ஹரிஹரம் என்று பம்பாய்க்குப் போகிற வழியில் ஒரு க்ஷேத்திரமிருக்கிறது.

ஸ்ரீ பகவத்பாதாசாரியர்கள் சிவனும் விஷ்ணுவும் ஒன்றென்று சொல்லுகிறாரே, வேதம் என்ன சொல்லுகிறது? உபநிஷத்துக்களில் பத்துத்தான் முக்கியமானவை. அந்தப் பத்து உபநிஷத்துக்களில் 'சிவ' என்ற சப்தம் ஒரு இடத்திலும், 'விஷ்ணு' என்று சப்தம் ஒரு இடத்திலுமே வந்திருக்கின்றன. மற்ற இடங்களில் எல்லாம் "பிரம்மம்" என்ற பதமே பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

'விஷ்ணு' என்ற சப்தம் கடோபநிஷத்தில் இருக்கிறது. "விஷ்ணோ: பரமம் பதம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்டூக்ய உபநிஷத்தில் "சிவம் அத்வைதம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'விஷ்ணோ: பரமம் பதம்' என்பதற்கு மூன்று விதமாக அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது.'பச்யந்தி' அதாவது பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற சொல்லை வருவித்துக் கொண்டு, நித்திய ஸூரிகள் "விஷ்ணுவினுடைய பரமபதமாகிய வைகுண்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று மற்றவர்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் "விஷ்ணுவாகிய பரமபதத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

விஷ்ணு அரூபமானவர். நமக்கு அனுக்கிரஹம் செய்ய வேண்டியதற்காகக் கரசரணாதிகளைத் தரித்திருக்கிறார். விஷ்ணுதான் பரமபதம் என்பது அவரது வியாக்கியானம்.

விஷ்ணுவினுடைய பரமபதமாகிய வைகுண்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்

னும்போது, நித்திய ஸூரிகள் அந்த லோகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஏற்படுகிறதேயல்லாமல், மூர்த்தியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று ஏற்படவில்லை. ஊரைப்பார்ப்பது மோக்ஷமாகாது. அவரைப் பார்ப்பதுதான் மோக்ஷமாகும்.

சைவ ஸித்தாந்தத்தில், விஷ்ணு என்ற சொல்லில் ஐந்தாம் வேற்றுமை உருபு தொக்கு நிற்பதாகக் கொண்டு, ''விஷ்ணுவைக் காட்டிலும் பரமமாகிய பரமசிவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்'' என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள், விஷ்ணு வேறு—சிவன் வேறு என்று கொள்ளாமல், ''விஷ்ணுவாகிய பரமபதம்'' என்று சொல்லியிருக்கிறார்.

அப்படியானால், சில புராணங்களில் ஒன்றை உத்கிருஷ்டமாகச் சொல்லியிருப்பதற்குக் காரணம் என்ன?

எந்த இடத்தில் எந்த மூர்த்தியை உத்கிருஷ்டமாகச் சொல்ல வேண்டுமோ, அங்கு அப்படிச் சொல்லி யிருக்கிறது என்று ஸாதாரணமாக ஒரு ஸமாதானம் சொல்லுவதுண்டு. இதற்கு ''நஹி நிந்தா நியாயம்'' என்று பெயர்.

ஒரு மூர்த்தியை நிந்தை செய்வது தாத்பரியமல்ல, ஆனால் மற்றதை உத்கிருஷ்டமாகச் சொல்லுவதே உச்தேசம். அது மாத்திரமல்ல. சிவன் விஷ்ணுவை உபாஸிப்பதும், விஷ்ணு சிவனை உபாஸிப்பதும் நிஜந்தான். ஸேதுவில் ஸ்ரீ ராமன் லிங்கப் பிரதிஷ்டை செய்தார், குடிமல்லத்தில் பரசுராமன் சிவபூஜை செய்தார், காஞ்சியில் விஷ்ணு கச்சபேசுவரரைப் பிரதிஷ்டை செய்தார் என்பதிலிருந்து, ஸ்ரீ மஹா விஷ்ணுவே சிவபூஜை செய்தாரே, ஆகவே நாம் எல்லோரும் சிவபூஜை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும்.

அப்படியே, சிவனே விஷ்ணுவைப் பூஜை செய்தாரே, ஆகவே நாம் எல்லோரும் விஷ்ணு பூஜை செய்யவேண்டு மென்று நினைப்புண்டாகும்.

சிவன் சிவனையே பூஜை செய்வதைக் காட்டிலும், விஷ்ணு ரூபமாக இருந்துகொண்டு செய்வதால் லோகத்திற்கு அனுக்கிரஹம் ஏற்படுகிறது. அப்படியே விஷ்ணு சிவரூபமாக இருந்து கொணடு பூஜை செய்வதாலும். ஆகையால் அவர்கள் பரஸ்பரம் பூஜை செய்து கொண்டதும் நிஜமே.

இவ்விதழின் முகப்பு அட்டையில் காட்சியளிப்பவர், வேதசாஸ்திர புராண பிரவசன திலகம், பிரம்மஸ்ரீ மஞ்சக்குடி இராஜ கோபால சாஸ்திரிகள் ஆவர்.

ஸ்ரீசைதன்யரின் தென்னிந்திய யாத்திரை

டாக்டர் சம்பிதானந்த தாஸ்

பாபநாசத்தைத் தரிசித்து விட்டுக் காவிரிக்கரை யோரமாக மேற்கு நோக்கிப் புறப்பட்டு, ஆவணி மாதத்தில் ஸ்ரீசைதன்யர் ஸ்ரீரங்கம் போய்ச் சேர்ந்தார், சாதுர்மாஸ்ய விரதத்தை ஏற்று ஆவணி முதல் கார்த்திகை மாதம் வரை நான்கு மாதங்கள் அவர் இங்கேயே தங்கினர்.

இங்கேதான், இந்தியாவில் உள்ள கோயில்களிலேயே செல்வச் சிறப்பும் புகழும் வாய்ந்த அரங்கநாதர் கோயில் அமைந்திருக்கிறது. லட்சக்கணக்கான யாத்ரிகர்கள் இங்கே வந்து அரங்கநாதனைத் தரிசித்தவண்ணமாகவே இருக்கிறார்கள். வைஷ்ணவர்களின் பிரதான ஸ்தலம் இதுவே. ஸ்ரீரங்கத்தில் தரிசனத்துக்காக வருபவர்களுக்குத் தம்முடைய தத்துவத்தை உபதேசிக்க வேண்மென்ற ஆர்வ மிகுதியே, அவரை ஸ்ரீரங்கத்தில் இருக்கச் செய்தது,

நான்குமாத காலம் தங்கிய பிறகு, சைதன்யர் தம்முடைய பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டார். திருச்சி, திண்டுக்கல் வழியாக ரிசவ பர்வதத்துக்குப் புறப்பட்டார். இப்பொழுது மதுரை ஜில்லாவில் உள்ள பழனி என்று எல்லோராலும் வழங்கப் பெறும் மலையே ரிசவ பர்வதமாகும்.

ரிசவ பர்வதத்தில் மூன்று நாள் தங்கிவிட்டு, சைதன்யர் மதுரைக்குப் புறப்பட்டார். மதுரையில் ராமபக்தரான ஓர் அந்தணர் இல்லத்தில் சைதன்யர் விருந்தினராகத் தங்கினர். சீதையை இராவணன் அபகரித்துச் சென்றுவிட்டானே என்ற வருத்தத்தில் அவர் உண்ணாவிரதம் இருந்தார்.

"பரிபூரண ஆத்மாவின் பிரதிநிதியான சீதையின் முன்பு, எந்தச் சக்திக்கும் வலிமை ஒன்றும் கிடையாது. இராவணன் நெருங்கிய உடனே சீதை மறைந்து, பதிலாக மாய சீதையே இருந்தாள். அவளைத்தான் ராவணன் அபகரித்துச் சென்றான். இராவணன் மரணத்துக்குப் பிறகு சீதை

அக்னிப் பிரவேசம் செய்தபோது, மாய சீதை மறைந்து ராமர் முன் நிஜ சீதை தோன்றினள்'' என்று சொல்லி, அவருக்கு சைதன்யர் ஆறுதல் கூறினர்.

வைகை என்னும் கிராதமாலா நதியில் நீராடிய பிறகு மதுரையைத் தரிசித்துவிட்டு, அநேகமாகக் காளையார் கோயில் வழியாக, சைதன்யர் தர்ப்பசயனம் வந்தடைந்தார். ராமநாதபுரத்துக்கு ஏழுமைல் கிழக்கே கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது தர்ப்பசயனம். இங்கே சீதாலக்ஷ்மி சமேதரான இராமசந்திர மூர்த்திக்கு ஓர் ஆலயம் இருக்கிறது.

ராமேசுவரம், தனுஷ்கோடி, சேது முதலிய இடங்களுக்குச் செல்லும் முன், அவர் மகேந்திர மலையில் பரசுராமரைத் தரிசித்தார். இலங்கைக்கு வெகு சமீபமாக, மன்னர் வளைகுடாவில் அமைந்துள்ளது ராமேசுரம் என்னும் தீவு. ராமேசுவரத்துக்கு 12 மைல் தென் கிழக்கே உள்ள தனுஷ்கோடியில் நீராடிவிட்டு, ராமேசுவரத்தில் உள்ள ஸ்ரீராமலிங்கத்தைத் தரிசனம் செய்துகொண்டார். பின்னர் அவர் மதுரைக்குச் சென்று, இரவை அங்கே கழித்தார். அடுத்த நாள் அவர் தெற்கு நோக்கித் தம்முடைய யாத்திரையைத் தொடங்கினர்.

திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது தாம்பிரபருணி. திருநெல்வேலிக்கு வடக்கே, சித்ரா நதிக்குத் தெற்கே உள்ள தென்காசியை அடைந்தார். அந்தத் தலத்தைத் தரிசனம் செய்த பின்னர், ஸ்ரீசைதன்யர் தாம்பிரபருணி நதிக்கரையை அடைந்தார். திருவாங்கூர் ராஜ்யத்தில் உள்ள மலைகளில் உற்பத்தியாகி, திருநெல்வேலி ஜில்லாவில் பாய்ந்து, தாம்பிரபருணி மன்னர் வளைகுடாவில் சங்கமமாகிறது.

தென்காசிக்கு அடுத்து ஸ்ரீசைதன்யர் விஜயம் செய்தது பிரபல வைஷ்ணவ ஸ்தலமான ஸ்ரீவைகுண்டம். பின்னர் ஆழ்வார் திருநகரியை ஸ்ரீசைதன்யர் அடைந்தார். இந்த ஸ்தலம் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து நான்கு மைல் தொலைவில்தான் இருக்கிறது. அங்கே உள்ள பெருமாளையும் ஆழ்வாரையும் ஸ்ரீசைதன்யர் தரிசித்து மனம் மகிழ்ந்தார்.

ஆழ்வார்திருநகரிலிருந்து மலய பர்வதத்தின் தென் எல்லையில் உள்ள அகஸ்தியமலைக்குச் சென்று, அகஸ்தியர் மேல் தோத்திரங்களைப் பாடி மகிழ்ந்தார் ஸ்ரீசைதன்யர். பின்னர் பணகுடிக்குச் சென்று சீதாலட்சுமி சமேதரான ஸ்ரீராமசந்திர மூர்த்தியை வழிபட்டார். திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரத்துக்குப் போகும் பாதையில் சுமார் 30வது மைலில் உள்ள இந்த வைணவக் கோயில்,

சைவக் கோயிலாக மாற்றப் பட்டது.

நாகர்கோயிலுக்கு அருகே உள்ள சியர்த்தலை என்னும் ஊருக்குச் செல்லும் முன்பு, ஸ்ரீசைதன்யர் எங்கனூர் என்னும் தலத்துக்குச் சென்று ஸ்ரீ ராம லட்சுமணர்களைச் சேவித்துக் கொண்டார். பின்னர் சியர்த் தலைக்கும் சென்று அங்கே வீற்றி ருக்கும் சீதாலக்ஷ்மி சமேதரான ஸ்ரீராமசந்திரமூர்த்தியை வழி பட்டார். பின்னர் ஸ்ரீசைதன்யர் கஜேந்திர மோட்சம் என்னும் தலத்துக்குச் சென்று அங்கே எழுந்தருளியுள்ள ஸ்ரீ விஷ்ணு வைத் தரிசித்தார்.

நாகர் கோயிலிலிருந்து 2மைல் தூரத்தில் இருக்கும் இந்தத்தலத் தின் கோயில், இப்பொழுது சை வர்களின் பொறுப்பில் இருக்கி றது. கடைசியாக, இந்திய தீபகற் பத்தின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரியை ஸ்ரீசைதன்யர் வந்தடைந்தார். பின்னர் மேற் குக் கடற்கரையோரமாக வடக்கு நோக்கித் தமது யாத்திரையை மேற்கொண்டார்.

உங்கள் பிரச்னைகள்

பிரச்னே

1) "1946'லிருந்து என் மன நிலை ஓரிடத்தில் இல்லை. இரண்டு முறை என்னை அறியாமலே நான் என் வீட்டை விட்டுச் சென்று விட்டேன்.

2) "1968'ல் என் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டேன். கை தேர்ந்த டாக்டர்கள் என்னைப் பரீட்சை செய்து பார்த்தும், என் உடல் நிலையைக் குறித்து அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

3) "என் உத்தியோகத்தில் எதிர்பாராத சில கெட்ட சம்பவங்கள் நடந்து வருகின்றன.

4) "எனக்குமனைவியும் நான்கு குழந்தைகளும் இருக்கிறார்கள். நான் ஒருவன்சம்பாதித்துத்தான் என் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். நான் திடீரென்று இறந்து விட்டால், என் மனைவியும் குழந்தைகளும் நடுத்தெருவில் நின்று பிச்சையெடுக்கும் நிலையில்தான் இருப்பார்கள். நான் அவர்களுக்கென்று எந்த வித ஆஸ்தியும் இதுவரையில் சேர்த்து வைக்க முடியவில்லை.

"இந்த நான்கு சிக்கல்களையும் எப்படித் தீர்ப்பதென்று, தங்கள் 'அருள்' பத்திரிகையில் விளக்கம் தரும்படி வேண்டிக் கொள்கிறேன்."

இப்படி எழுதியிருக்கிறார் ஓர் அன்பர். இந்த அன்பருடைய நிலையிலேதான், இன்று நம் நாட்டில் உள்ள பெரும்பாலான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதாவது,—

1) மனநிலை சரியில்லை;

2) உடல்நிலை சரியில்லை;

3) உத்தியோக நிலை சரியில்லை;

4) பொருளாதார நிலை சரியில்லை;

5) "நமக்குப் பிறகு நம் குடும்பம் என்ன ஆகுமோ!" என்ற பயமும், உள்ளத்தை அடிக்கடி துன்புறுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த ஐந்து கோளாறுகளும், அவரவர் தரத்துக்குத் தக்கபடி சிறிது கூடுதலான அளவிலோ, அல்லது குறைவான அளவிலோ, அநேகமாக ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டுமானால், இந்த ஐந்து கோளாறுகளுக்கும் மூலகாரணம் யாது என்பதை நாம் கண்டு பிடிக்க வேண்டும்.

இந்தக் கோளாறுகளை நாம் எப்போது உணர்கிறோம் என்

பதை, சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிக் கிடக்கும்போது, இவை நம்மால் உணரப்படுவதில்லை.

ஆனல், விழித்து எழுந்த பின்பு உணருகிறேம். விழித்து எழுவதற்கு முன்னமேயும், கனவுக் காலத்தில் உணருகிறேம்.

காரணம், கனவு நிலையிலும் விழிப்பு நிலையிலும், நம் மனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. உறக்க நிலையில், அது சிறிதும் இயக்கமின்றி ஒடுங்கிக் கிடக்கிறது.

எனவே, மனம் அசைவற்று இருக்கும் போது, நம்மால் எந்த ஒரு துன்பமும் உணரப்படுவதில்லை. மனம் இயங்கத் தொடங்கும்போது, கூடவே நம் துன்பங்களும் தொடங்கி விடுகின்றன.

உறக்க காலத்தில் மனம் அசைவற்று இருப்பதுபோல, விழிப்புக் காலத்திலும் நம் மனத்தை நாம் அசைவற்ற நிலையில் வைத்துக் கொண்டிருக்க முடியுமேயானல், வாழ்க்கையில் எந்த ஒரு துன்பமுமே நம்மை வந்து தொட்டுப் பார்க்க மாட்டாது.

விசுவாமித்திரர் விடுத்த பிரம்மாஸ்திரமே வசிஷ்டரை வந்து தீண்டமுடியாமல் போய் விட்டது என்று நாம் இராமாயணத்தில் படித்திருப்பதை, இந்த இடத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனல், நாம் எல்லோரும் வசிஷ்ட முனிவர்கள் அல்ல. அவரைப் போல் நம்மால் விழிப்புக் காலத்திலும் மனத்தை அசைவற்ற நிலையில் வைத்துக் கொண்டிருக்க முடிவதில்லை. எனினும், நாம் தீவிரமாக முயலுவோமானல், நம்மாலும் அந்தஉயரிய நிலையை அடைந்து விட முடியும் என்பதில் ஐயமே இல்லை. நாம் அப்படி அடைய வேண்டும் என்பதற்காகத்தான், நமது சாஸ்திரங்களில் பல்வேறு வகையான உபாசனு மார்க்கங்களும் சாதனு முறைகளும் சொல்லப்பட்டு இருக்கின்றன.

சாஸ்திரங்களில் கூறப்பட்ட அத்தகைய உயரிய சாதனு முறைகளில் ஈடுபடுவதற்கு நம்மால் முடியாமல் போய் விட்டாலும், நமது அன்றுட வாழ்க்கையின் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கான சில எளிய மனப்பயிற்சிகளையாவது நாம்செய்து வரலாம் அல்லவா?

அத்தகைய ஒரு பயிற்சியைத் தான், இப்போது நாம் ஆராயப் போகிறேம்.

ஆலோசனை

நம்முடைய மனத்தில் தோன்றும் எண்ணங்கள்தாம், வாழ்க்கையில் நமக்கு இன்பத்தையோ துன்பத்தையோ தோற்றுவிக்கின்றன. எண்ணங்கள் இனிமையானவையாய் இருந்தால், வாழ்க்கையும் நமக்கு இனிமையாக அமைகிறது. எண்ணங்கள் இனிமையற்றவையாய் இருந்தால், வாழ்க்கையும் இனிமையற்றதாய் அமைகிறது. இந்த அடிப்படைஉண்மையை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம்.

கொலைகள், கொள்ளைகள், மற்றும் பல பயங்கர நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒரு துப்பறியும் நாவலை நாம் பகல் எல்லாம் படித்துக் கொண்டிருப்போமானல், இரவில் கண்ணயர்ந்த பிறகும் அம்மாதிரியான பயங்கர நிகழ்ச்சிகளே நம் கனவில் வந்து காட்சியளிக்கும். இதை நாம் ஒவ்வொருவரும் நமது அனுபவ வாயிலாகக் காண முடியும்.

அதாவது, கதையைப் படித்ததன் மூலம் நம் மனத்தில் பதிந்து போயுள்ள பயங்கர எண்ணங்கள், கனவில் நாம் அனுபவிக்கும் பயங்கர நிகழ்ச்சிகளாக வடிவெடுத்து விடுகின்றன. அவ்வாறு வடிவெடுக்கும் ஆற்றல் நம் எண்ணங்களுக்கு உண்டு என்பதை, நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம்.

ஆனல், எண்ணங்களின் இந்த ஆற்றல், கனவுக் காலத்தோடு முடிவடைந்துவிடுவதில்லை. நமது விழிப்புக் காலத்திலும் கூட, அது தொடர்ந்து தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. அதாவது, நமது பயங்கரமான எண்ணங்கள் கனவுக் காலத்தில் எப்படி பயங்கர நிகழ்ச்சிகளாக வடிவெடுத்து வந்தனவோ, அப்படியே நமது விழிப்புக் காலத்திலும் அவை பயங்கர நிகழ்ச்சிகளாக வடிவெடுத்துவருகின்றன.

எனவே, நாம் விழித்திருக்கும் காலத்தில் நமக்கு ஏற்படும் அனுபவங்கள் மகிழ்ச்சிகரமாய் அமைய வேண்டுமானல், நமக்கு வெளியே உள்ள சூழ்நிலைகளைத் திருத்தி அமைக்க முயலுவதால் யாதொரு பயனும் ஏற்படமாட்டாது. அதற்கு மாருக, நமக்கு உள்ளே உள்ள நமது மனப்பான்மையை நாம் மகிழ்ச்சிகரமான முறையில் திருத்தி அமைக்க முயல வேண்டும்.

எப்படியென்றல்,—

நாம் எப்போதும் மகிழ்ச்சிகரமான எண்ணங்களையே எண்ண வேண்டும். வேதனைதரக் கூடிய எண்ணங்களை எண்ணவேகூடாது.

மகிழ்ச்சிகரமான எண்ணங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும். வேதனையான எண்ணங்கள், வாழ்க்கையில் வேதனைகளைத் தோற்றுவிக்கும்.

"நம் உடல் கெட்டுவிடுமோ? நம்உத்தியோகம் போய்விடுமோ? நம் வியாபாரம் நொடித்து விடுமோ? நாம் இறந்துவிடுவோமோ? நம் குடும்பம் நிர்கதியாகி விடுமோ?" — இவையெல்லாம் வேதனையான எண்ணங்கள்.

இந்த எண்ணங்கள் நமக்கு அடிக்கடி கெட்ட கனவுகளைத் தோற்றுவிக்கும். நம் அன்ருட வாழ்க்கையிலும் துன்பகரமான அனுபவங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும்.

அவ்வாறுஇன்றி, வாழ்க்கையில் நமக்கு இன்பகரமான அனுபவங்கள் உருவாக வேண்டும் என்ருல், நம் உள்ளத்தில்உள்ள தீயகற்பனைகளையெல்லாம் அறவே ஒழித்து விட்டு, நல்ல கற்பனைகளை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

எப்படி?

"இனிமேல் நாம் ஒருவித நோய் நொடியும் இல்லாமல் ஆரோக்கியமாக வாழப் போகிறோம்! விரைவிலே நமக்கு ஓர் உத்தியோக உயர்வு ஏற்படப்

போகிறது! இன்று முதற் கொண்டு, நம்முடைய வியாபாரம் செழித்து ஓங்கப் போகிறது! நாம் இன்னும் நெடுங் காலம் உயிர்வாழப் போகிறோம்! நமக்குப்பிறகும்கூட, நம்முடைய குடும்பம் மிகவும் மேலான நிலையில், சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருக்கும்!'' இப்படிப்பட்ட இன்பமான எண்ணங்களையெல்லாம் நாம் எண்ணிப் பழக வேண்டும்.

வெறுமே எண்ணினால் மட்டும் போதுமா? போதாது. வேறு என்ன செய்ய வேண்டும்?

நமக்குக் கடிதம் எழுதியிருக்கும் அன்பர், ''நான் திடீரென்று இறந்து விட்டால்,என் மனைவியும் குழந்தைகளும் நடுத்தெருவில் நின்று பிச்சையெடுக்கும் நிலையில் தான் இருப்பார்கள்!'' என்று குறிப்பிட்டிருக்கிறார் அல்லவா? அதன் பொருள் என்ன?

தான் திடீர் என்று இறந்து விட்டது போலவும், தன் மனைவியும் மக்களும் தெருவில் நின்று பிச்சையெடுத்துக் கொண்டிருப்பது போலவும், அவர் தன் மனக் கண் முன்பு ஒரு கற்பனைக் காட்சியைக் காண்கிறார். இம் மாதிரித் துன்பகரமான கற்பனைக் காட்சிகளை, அவர் தொலைத்துத் தலை முழுக வேண்டும்.

அதற்குப் பதிலாக, தன்மனைவி மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வது போன்ற கற்பனைக் காட்சிகளை, அவர் தன் உள்ளத்தில் அடிக்கடி உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

கடனில் மூழ்கியிருப்பவர்கள், தம் கடன்களையெல்லாம் கொடுத்துத் தீர்ப்பது போன்ற கற்பனைக் காட்சிகளை, அடிக்கடி தம் மனக் கண் முன் உருவாக்கிக் கொண்டு இருக்க வேண்டும்.

நோயுற்றிருப்பவர்கள், தாம் நோய் நீங்கி எழுந்து ஆரோக்கிய மாக உலாவித் திரிவது போன்ற கற்பனைக் காட்சிகளை, அடிக்கடி தம் மனக்கண் முன் உருவாக்கிக் கொண்டு இருக்கவேண்டும்.

பகைவர்களால் துன்பம் அடைபவர்கள், அந்தப் பகைவர்கள் தமக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டது போன்ற கற்பனைக் காட்சிகளை, அடிக்கடி தம் மனக்கண் முன் உருவாக்கிக் கொண்டு இருக்க வேண்டும்.

இத்தகைய கற்பனைக் காட்சிகளை நாம்எவ்வளவுக்கு எவ்வளவு தீவிரமாக உருவாக்கிப் பார்க்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு விரைவாக அவை சித்தியளிக்கும். அதாவது, நாம் மனத்தில் கற்பனையாகக் கண்டது, வாழ்க்கையில் உண்மையிலேயே பலிதமாகும்.

மனத்தின் கற்பனைகளுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது.

ஆனால் ஒன்று; பிறருக்குத் தீமைவிளைவது போன்ற காட்சிகளை நாம் கற்பனைசெய்தால்,அது நமக்குத்தான் தீமைவிளைவிக்கும்.

நமக்கு நன்மை விளைவது போன்ற காட்சிகளையே நாம் எப்போதும் கற்பனை செய்ய வேண்டும். அந்தக் கற்பனை பலிப்பதற்கான சாத்தியக் கூறே, நம் கண்ணுக்கு எட்டிய வரையில் தென்படாமல் இருக்கலாம். இருந்தாலும், கடவுள் அதை பலிதமாக்கிக் கொடுப்பார் என்று நாம் உறுதியாக நம்பவேண்டும். அந்த நம்பிக்கையைப் போல் நன்மை அளிக்கக் கூடியது, உலகில் வேறு எதுவுமே கிடையாது!

திருவான்மியூர் வரலாறு

திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார்

திருவான்மியூர் என்னும் திருத் தலம், தொண்டை நாட்டில், தேவாரப் பாடல்பெற்ற சிவத் தலங்கள் முப்பத்திரண்டினில் ஒன்ருகும். இது கடற்கரையில், திருமயிலாப்பூருக்கு நான்குமைல் தெற்கில் உள்ளது.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு, இத்தலம், "ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர் கோட்டத்துக் கோட்டூர் நாட்டுத் தேவதானம் திருவான்மியூர்" என்று சோழமன்னர்கள் காலத்தியகல்வெட்டுக்களில்கூறப் பட்டுள்ளது. தேவாரகாலத்தில், இத்தலம் புகழ்பெற்றதொரு தலமாய் இருந்தது. ஆனல், இப்போது எளியமக்களின் சிறு ஊரா கவே இத்தலம் உள்ளது.

திருஞான சம்பந்தர் மயிலாப்பூரிலிருந்து புறப்பட்டுத் திருவான்மியூரைத் தரிசித்துப் பதிகங்கள் பாடிச் சில நாட்கள் தங்கியிருந்து, பிறகு திருஇடைச்சுரம் சேர்ந்தார் என்றும்;

திருநாவுக்கரசர், திருக்கழுக்குன்றத்திலிருந்து புறப்பட்டுத் திருவான்மியூரைத் தரிசித்துப் பதிகம் பாடித் திருமயிலாப்பூர் சேர்ந்தார் என்றும்;

பெரிய புராணம் பேசுகிறது.

அருணகிரிநாதர், இப்போதைய தாம்பரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ள மாடம்பாக்கம் கோயிலிலுள்ள முருகவேளுக்குத் திருப்புகழ்ப் பாடல்கள் சாத்தி, திருவான்மியூர் சேர்ந்து "குசமாகி" எனத் தொடங்கும் திருப்புகழ் பாடிய பிறகு, திருமயிலாப்பூர் சேர்ந்தார்.

வடமொழியில் இராமாயணம் பாடிய வால்மீகி மகரிஷி, மார்க்கண்டேய முனிவருடைய கட்டளையின்படி இவ்வுலகத்தை வலம் வரும்போது, திருவான்மியூர் சேர்ந்தவுடன் "நாம் இங்கு இருக்கிருேம்" என்று ஆகாயத்தில் ஓர் அசரீரி வாக்கு கேட்டது.

இவ்வாறு அசரீரி கேட்குமிடத்திலேயே தங்கித் தவம் புரியும்படி கட்டளையிட்ட மார்க்கண்டேய முனிவர் சொற்படி, வால்மீகி முனிவர் இத்தலத்தில் தவம் புரியும் நாளில், ஒரு வன்னிமரத்தின் கீழ் ஒரு சிவலிங்க ரூபத்தில் சிவபெருமான் பங்குனி மாதம் பௌர்ணிமையன்று காட்சி கொடுத்ததோடு, நடன தரிசனத்தையும் அருளிச் செய்தார்.

இக் காரணங்களால், வால்மீகி ரிஷிக்குக் காட்சி கொடுத்த தலம் திருவான்மியூராயிற்று; பங்குனி மாதப் பௌர்ணிமை வால்மீகித் திருநடன வைபவத் திருநாளாயிற்று.

வால்மீகி ரிஷிக்கு வரம்தரும் முறையில் சிவபெருமான் தமது

சடையிலிருந்து ஐந்து கங்கைத் துளிகளை விட்டார். அவை 1. காமநாசினி, 2. பாபநாசினி, 3. ஜென்மநாசினி, 4 ஞான தாயினி, 5. மோக்ஷ தாயினி என்னும் இத் தலத்திலுள்ள ஐந்து தீர்த்தங்களாயின.

1. காமநாசினி — கோயிலின் புறத்தே வான்மீகியார் கோயி லின் சமீபத்திலுள்ள நீரோடை.

2. பாபநாசினி — நீராழி மண்டபமுள்ள தெப்பக்குளம்.

3. ஜென்மநாசினி — கோயில் அருகிலுள்ள சிறிய குளம்.

4. ஞான தாயினி |
5. மோட்ச தாயினி |

கோயிலினுள் அம்மன் சந்நிதி எதிரிலுள்ள இரு கிணறுகள்.

நான்முகன் கொட்டாவியில் குரங்கு ரூபமாய்ப் பிறந்த ஓர் இரக்ஷசு, சத்யலோகத்திலுள்ள கல்யாணத் தீர்த்தத்தில் மூழ்கிப் பெண்ணுருவம் பெற்றதை மாற்ற, இத் தலத்திலுள்ள ஜென்ம நாசினி தீர்த்தத்தில் மூழ்கிப் பெண்ணுரு நீங்கித் தனது சுயரூபம் பெற்றான்.

கொல்லமாட்டேன் என்று வில்லைக் கை நழுவவிட்ட அருச்சுனனுக்குப் பகவத்கீதை உபதேசம் செய்து, அவனைக் கொண்டு அவன் சுற்றத்தாராகிய கௌரவர்களைக் கொன்று முடித்த கிருஷ்ணன், தனது பாவம் தீர, உபமன்யு முனிவரிடம் திருவடி தீக்ஷை பஞ்சாக்ஷர உபதேசம் முதலியன பெற்று, திருவான்மியூரில் பாபநாசினி தீர்த்தத்தில் மூழ்கி, மருந்தீசரை வணங்கித் தனது பாபம் நீங்கி நற்கதி பெற்றான்.

குரு பத்தினியைப் புணர்ந்த சந்திரன், தனது குருவாகிய வியாழ பகவானால் சபிக்கப்பட்டு, அச்சாபம் தீர இத்தலத்திலுள்ள காமநாசினி தீர்த்தத்தில் மூழ்கி, மருந்தீசனை வணங்கித் தனது சாபம் நீங்கப் பெற்றான்.

சூரிய பகவான், உதய வேளையில், தினந்தோறும் மந்தேகத் தீவிலுள்ள 60,000கோடி ராக்ஷஸர்களால் பீடிக்கப்படுவது வழக்கம். இதை நீக்க, அஸ்தமன வேளையில் இத்தலத்து மருந்தீசனை வணங்கி, தனது துன்பங்களை ஒழித்தான். சூரியன் பூசையை ஏற்கவே, மருந்தீசன் மேற்கு சந்நிதியாக உள்ளான்.

பிருகு முனிவர் புதல்வியை அவரெதிரிலேயே தேவேந்திரன் முத்தமிட்டதால், முனிவர் ராக்ஷஸனாகும்படி கொடுத்த சாபத்தை நீக்க, இத்தலத்து ஜென்ம நாசினியில் மூழ்கிச் சாபம் தீர்ந்து, மருந்தீசனை வழிபட்டுத் தனது தேவேந்திர பதவியையும் பெற்றான்.

சோமுகன் எனும் அசுரன் கைப்பற்றிய பாவம்தீர, நான்கு வேதங்களும் மருந்தீசனைப் பூசித்தமையால், மருந்தீசற்கு வேத புரீசன் என்றும், தலத்திற்கு வேதபுரி என்றும் பெயர்கள் தோன்றின.

வசிஷ்ட முனிவர் சாபத்தால் காட்டுப் பசுவின் ரூபம் பெற்றுக் காமதேனு திரிந்து வரும்போது, திருவான்மியூர் அருகில் வந்து, ஜென்மநாசினி தீர்த்தத்தில் மூழ்கிச் சுயரூபம் பெற்று, ஞான தாயினியில் மூழ்கி ஞானம் பெற்று, வன்னி மரத்தடியில் ஒரு புதருக்குள் இருந்த மருந்தீசற்கு நாள்தொறும் அன்பின் மிகுதியால் மடியில் பால் பெருகிப்

பெருகி ஆருகச் செல்ல, அதை மருந்தீசற்கு அபிஷேகித்து வந்தது.

ஒருநாள் சதமு எனும் அரசன் வேட்டையாடி வர, ஒரு காட்டு மிருகம் மருந்தீசனருகில் ஓடி வந்தது. உடனே காமதேனு அதைக் கொம்பிஞல் குத்திக் கொன்றது. அரசனது வேடர்கள் இதைத் துன்புறுத்தவே, அவர்களேயும் கொன்றது. அரசன் இதைச் சூழ்ந்துகொல்ல முயன்ருன். உடனே இலிங்கத்தின் மேல் குளம்பை ஊன்றிப் பாய்ந்து, அரசனேயும் கொன்றது.

சிவலிங்கத் திருமேனியில் குளம்பு பட்டமைக்காக மிகமிக வருந்திய காமதேனுவிற்கு வரம் அளித்து, அதன் அடிச்சுவட்டை இளமுருகன் அடிச்சுவடெனவே விரும்பி அணிவதாகவும், நாள்தோறும் மடியிலிருந்து கரந்த பால் சுடச்சுட இருந்தமையால் உருகிய வெண்ணிறத்தோடிருப்பதாகவும், பால்வண்ணநாதன் என்ெருரு பெயரையும் ஏற்பதாகவும் இறைவன் அருளிஞன். இன்றும் இவற்றை மருந்தீசன் திருமேனியில் தரிசிக்கலாம்.

அரசனும் வேடர்களும் உயிர் பெற்றனர். அரசன் இத்தலத்தைப் பெரிய நகரமாக்கித் திருவிழாச் செய்து, மோக்ஷதாயினியில் மூழ்கிக் கயிலே சேர்ந்தான்,

○



வினா - விடை

வினா 1 :- வேதாந்திகளால் மாயை என்று கூறப்படுகிற பொருள் யாது?

விடை :- அந்தி மயங்கிய வேளையில், மங்கலான வெளிச்சத்தில், நடை பாதையிலே கிடக்கின்ற ஒரு கயிறானது பாம்பைப் போல் காட்சியளிக்கிறது அல்லவா?

அதே போல், அஞ்ஞானத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் உள்ளங்களுக்கு, பிரம்மம் எனப்படுகிற இறைவனே பிரபஞ்சமாகக் காட்சியளிக்கிறான்.

அவ்வாறு காட்சியளிக்கும் சக்தி இறைவனுக்கு இருக்கிறது. இறைவனுடைய அந்த சக்திக்கே மாயை யென்று பெயர்.

வினா 2 :- பராபக்தியென்று சொல்லுகிறார்களே, அது என்ன? சாதாரண பக்திக்கும் பராபக்திக்கும் உள்ள வேறுபாடு யாது?

விடை :- நம்முடைய உள்ளமானது உலகியல் பொருள்களை விட்டு விட்டு இறைவனை நோக்கித் திரும்பி நிற்குமானால், அப்படித் திரும்பி நிற்பதிலே அதற்கு ஒரு சுவை ஏற்படுமானால், அந்த உயரிய நிலையே பக்தி எனப்படுவது.

குரங்குக் குட்டி தன்னுடைய சொந்த முயற்சியால் தாயின் வயிற்றைப் பற்றிக்கொள்கிறது. அந்த முயற்சியில் தளர்ச்சி ஏற்பட்டு, அது தன் பிடியை விடுமாயின், குட்டி கீழே வீழ்ந்து விடும்.

ஆனால், பூனைக்குட்டி அப்படி அல்ல. அது தன் தாயைப் பற்றிக் கொள்வதேயில்லை. அதற்காக எந்த ஒரு முயற்சியும் செய்வதில்லை. அது சும்மாவே இருக்கும். அதனுடைய தாய்தான் அதைத் தன் வாயினால் கவ்வித் தூக்கிக் கொண்டு ஓடும்.

குரங்குக் குட்டியைப் போல் நாம் நமது சொந்த முயற்சியினால் இறைவனது திவ்யகுணங்களையோ திருவுருவத்தையோ தியானம் செய்வது சாதாரண பக்தி.

பூனைக்குட்டியைப் போல் நம்முடைய உள்ளமானது எந்த ஒரு சிந்தனையும் செயலும் இல்லாமல், தன்முனைப்பு அற்ற நிலையில் சும்மா அடங்கிக் கிடப்பது பராபக்தி. உள்ளம் அப்படி அடங்கிக் கிடக்கும் போது, பூனை தன் குட்டியைக் கவ்விக்கொள்வது போல் இறைவனே நம்மைப் பற்றிக் கொள்கிறான். எனவே

பராபக்தி என்பது, பரிபூர்ண சரணுகதியே அன்றி வேறல்ல.

வினு 3:- வைகுண்டம், கைலாஸம் என்ற சொற்களின் பொருள் என்ன?

விடை:- குண்டம் என்ருல், அழிவுடையது, வைகுண்டம் என்னும் சொல்லுக்கு அழிவில்லாதது என்று பொருள். எனவே, என்றும் அழியாப் பெரும்பதவியாகிய முக்திநிலேயே வைகுண்டம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது.

கேலி என்ருல் ஆனந்தம். அதில் நிலேபெற்றிருப்பதே கைலாஸம், அதாவது, பரமானந்தத்தின் அனுபவ நிலேயே கைலாஸம் எனப்படுவது.

வினு 4 :- புராணங்களில் வருகிற அசுரர்கள் எல்லாம், கடவுளிடம் வரம் பெற்றவர்களாகவே காணப்படுகிருர்கள். வரத்தை வாங்கிக் கொண்டு, பின்னர் அந்த வரத்தின் வலிமையால் தேவர்களேத் துன்புறுத்துகிருர்கள். அசுரர்கள் தீயவர்கள் என்று தெரிந்திருந்தும், கடவுள் ஏன் அவர்களுக்கு வரம் கொடுக்கிருர்?

விடை:- ஒருவன் நல்லவனுயிருந்தாலும் தீயவனுயிருந்தாலும், அவன் செய்யும் கர்மாக்களுக்குப் பலன் கொடுக்க வேண்டியது இறைவனுடைய கடமையாகிவிடுகிறது. அந்த முறையில், அசுரர்கள் இயல்பிலேயே தீயவர்கள் என்பது தெரிந்தும் கூட, அவர்கள் செய்யும் கடுமையான தவங்களுக்கு உரிய வரங்களே, இறைவனுல் அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்க முடிவதில்லே.

அதுமட்டும் அல்ல. தேவர்கள் இயல்பிலேயே நல்லவர்களாயிருந்தாலும், சில சமயங்களில் அவர்களும் கடுமையான பாவங்களேச் செய்து விடுகிருர்கள். அந்தப் பாவங்களின் பயனுகவே, அசுரர்கள் கடுந்தவம் செய்து வரம் பெறுகிருர்கள். எடுத்துக்காட்டாக, தக்கன் செய்த சிவநிந்தனேயைத் தேவர்கள் தம் செவிகளால் கேட்டுக் கொண்டிருந்தார்கள் அல்லவா? அவர்கள் செய்த அந்தப் பாவம்தான், சூரபத்மனுக வடிவெடுத்து வந்து அவர்களேத் துன்புறுத்தியதாம்!

எனவே, உலகில் நல்லவர்கள் துன்புறுவதிலும், தீயவர்கள் ஆக்கம் பெறுவதிலும் கூட, உள்ளூற ஒரு நியதி இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

எனினும், இறுதியில் அசுரர்கள் நாசம் அடைந்து, தேவர்கள் க்ஷேமம் எய்துவதாகத்தான் நாம் புராணங்களில் காண்கிருேம். அதேபோல், நமது உலகியல் வாழ்விலும், முடிவில் தீயவர்கள் அழிவடைவதும் நல்லவர்கள் நலம் பெறுவதும் உறுதியிலும் உறுதியென்பதை, நாம் அனுபவ வாயிலாக அறியலாம்.

வினு 5 :- கோயிலுக்கு வெறுங்கையோடு செல்லலாமா?

விடை :- தம்மிடம் எதுவுமே யில்லையென்னும் நிலையில் உள்ள வர்களைத் தவிர, மற்ற எவரும் வெறுங்கையோடு கோயிலுக்குச் செல்லக் கூடாது. மலரோ, பழமோ, கர்ப்பூரமோ, சாம் பிராணியோ, இப்படி இறை வனது வழிபாட்டுக்கு உரிய ஏதே னும் ஒரு பொருளை, நமது வச திக்கு ஏற்ற வகையில் எடுத்துச் செல்ல வேண்டும். எதுவுமே எடுத்துச் செல்ல வாய்ப்பு இல்லாவிட்டால், அங்குள்ள உண்டியலிலாவது, கர்ப்பூர ஆரத்தித் தட்டிலாவது, நம்மால் இயன்ற வெண்பொற்காசுகளைப் போடவேண்டும்.

வினு 6 :- சத்தியமே வெல் லும் என்று சொல்லுகிறுர்கள். அப்படியானுல், சத்தியம் என்பது என்ன?

விடை :- மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு, வாயால் வேறென்றைப் பேசுவது சத்தி யம் அல்ல. வாயால் ஒன்றைச் சொல்லிவிட்டு, பின்னர் அதற்கு முரணாக நடந்து கொள்வதும் சத்தியம் அல்ல.

சத்தியத்தில் மூன்று நிலைகள் உண்டு.

உள்ளத்தைக் கள்ளங்கபடு இல்லாமல் வைத்துக் கொள்வது முதலாவது நிலை. அதற்கு உண்மை என்று பெயர்.

தான் பொய்யென்று அறிந்த ஒன்றைத் தன் வாயினுல் கூறுமல் இருப்பது இரண்டாவது நிலை. அதற்கு வாய்மை என்று பெயர்.

தன் வாயினுல் வாக்களித்த வண்ணமே செயலிலும் நடந்து காட்டுவது மூன்ருவது நிலை. அதற்கு மெய்ம்மை என்று பெயர்.

உண்மை, வாய்மை, மெய்ம்மை இம்மூன்றும் ஒன்று பட்டு நின்ற நிலையே சத்தியம் எனப்படுவது. அத்தகைய சத்தியம்தான் வெற்றியடையும் என்று வேதம் சொல்லுகிறது.

ஆனுல் சில சமயங்களில், நம் மையும் மீறிய காரணங்களால், நம்முடைய வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் போக லாம். நமக்கு உண்மை யென்று பட்டதை, வெளிப்படையாகச் சொல்ல முடியாமலும் போய்விட லாம்.

அம்மாதிரி சந்தர்ப்பங்களில், பிறருக்கு யாதொரு தீங்கும் விளைக்காத ஒரு பொய்யைச் சொல்லுவதில் தவறு ஒன்றும் இல்லை. அந்தப் பொய்யினுல் ஏதேனும்நன்மை விளையுமாயின், அது வாய்மைக்கு நிகரானதே என்கிறுர் வள்ளுவர் பெருமான். வாய்மையே பேசுவதால் ஒரு தீமை நேருமாயின், அந்த வாய்மை சத்தியமாகாது என்பது அவர் கருத்து.

அதாவது, தீமையை விளைவிக் கின்ற வாய்மையைக் காட்டிலும் நன்மையை விளைவிக்கின்ற பொய்ம்மையே மேலானது என் பதே, அறநூல்களின் முடிபு.

அதேபோல், நம்மால் முடிந்த வரையில் நாம் மனப்பூர்வமாக முயற்சி செய்தும், ஒருவருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் போய் விடுமானால், அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், முயற்சி செய்வதற்கு உரிய அதிகாரம் ஒன்றுதான் நமக்கு உண்டே தவிர, அதன் பலனை உருவாக்குவதற்கு உரிய அதிகாரம் நமக்குக் கிடையாது. அது பகவானைச் சேர்ந்தது. நம்மால் உறுதியாக நிறைவேற்ற முடியும் என்று கருதப்படுகிற காரியங்களே, சில சமயங்களில் நாம் எவ்வளவு முயன்றாலும் நிறைவேற்ற முடியாமல் போய் விடுவது, இதற்கு ஒரு சான்றாகும்.

ஆனால், அவற்றை நிறைவேற்றுவதற்காக நாம் செய்யும் முயற்சிகள், உண்மையிலேயே மனப்பூர்வமானவையாக இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், நமது செய்கையில் பொய்ம்மை இருக்கிறதா மெய்ம்மை இருக்கிறதா என்பது, அந்தச் செய்கையினால் விளையக் கூடிய பயனைப் பொறுத்தது அல்ல; அதைச் செய்யும் போது நாம் மனத்திலே கொண்டுள்ள பான்மையைப் பொறுத்தது. பான்மையில் உண்மையிருந்தால், செய்கையில் பலன் ஏற்படாவிட்டாலும் அது பொய்ம்மை ஆகமாட்டாது; மெய்ம்மையாகவே அமையும்.

•

1956ம் வருஷத்திய ரிஜிஸ்தரேஷன் ஆப் நியூஸ் பேப்பர் (சென்ட்ரல்) விதிகளில் 8வது விதிப்படி "அருள்" என்ற தமிழ் மாதப் பத்திரிகையின் உடைமையாளர் பற்றிய கீழ்க்கண்ட விவரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன.

பாரம் 4

1. பிரசுரிக்கப்படும் இடம் :	சென்னை-17
2. பிரசுரத்தின் தன்மை :	மாதம் ஒரு முறை
3. அச்சிடுவோர் பெயர் :	கொண்டா. காசி சீதாராமன் இந்தியர் ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ் 81-5, பாண்டி பஜார், சென்னை-17
4. ஆசிரியர் பெயர்:	கலைச்செல்வி மணிமேகலை
இனம் :	இந்தியர்
முகவரி :	4, தணிகாசலம் செட்டித் தெரு, தி. நகர், சென்னை-17
5. பிரசுரகர்த்தர் பெயர் :	T. ராமநாதன்
இனம் :	இந்தியர்
6. இப்பத்திரிகையின் சொந்தக்காரர் பெயர், விலாசம், மொத்த முதலில் நூற்றுக்கு ஒன்றுக்கு மேல் முதல் போட்டுள்ள கூட்டாளிகள், பங்குதாரர்கள் பெயர்கள், விலாசங்கள்.	T. ராமநாதன் 4, தணிகாசலம் செட்டித்தெரு, சென்னை-17 (பூரண உரிமையாளர்)

ராமநாதன் என்ற நான் இதன் மூலம் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நானறிந்த மட்டில் உண்மை.

(ஒப்பம்)

1-3-70

T. ராமநாதன்
பிரசுரகர்த்தர்

செருப்புத் தைத்த சீமான்

மஹரிஷி ஸ்ரீசிவானந்தர்

பாடலிபுத்திரா எனும் க்ஷேத்திரத்தில் முன்னொரு காலத்தில் ஓர் சக்கிலிய மஹான் வசித்து வந்தார்.

மிதியடிகளைத்தைத்துக்கொடுப்பதில் ஒரு சில அணுக்களை அவர் சம்பாதிப்பார். வருமானத்தில் முக்கால் பாகத்தை ஏழைகளுக்குத்தானம் வழங்கி, எஞ்சியதைத் தமக்கென வைத்துக் கொள்வார். அவர் ஒரு ராம பக்தர். ராம நாமத்தை தினந்தோறும் 4 லக்ஷம் ஜபம் பண்ணுவார். மூன்று மணி நேரம் தூங்குவார். அவர் மஹான் என்று யாருக்கும் தெரியாது.

ஓர் நாள் ஒருயாத்திரிகர் தமது மிதியடிகளைக் கொடுத்தார். சக்கிலிய மஹான் அவற்றைச் சீர் திருத்திக் கொடுத்தார்.

யாத்திரிகர், ''சக்கிலியா! நான் காசிக்குச் சென்று கங்கா ஸ்நானம் பண்ணப்போகிறேன்'' என்றார்.

உடனே சக்கிலிய மஹான், ''மரியாதைக்குகந்த மஹாப் பிரபுவே! நான் காலணா தருகிறேன். கங்காதேவி ஜலமட்டத்திற்கு மேல் கையைத் தூக்கினால், வலது கையில் காலணாவைத் தயவு செய்து கொடுங்கள்'' என்றார்.

இதை கேட்ட யாத்திரிகருக்கு ஒரே வியப்பாகத் தோன்றியது. எனினும் இதற்குச் சம்மதித்துக் காலணாவைப் பெற்றுக் கொண்டு காசிக்கு நேராகச் சென்றார்.

யாத்திரிகர் காசிக்குச் சென்று கங்கையில் ஸ்நானஞ் செய்தான பிறகு, சக்கிலியனைப் பற்றி நினைத்தார்.

நினைத்தவுடனே வலது கை ஒன்று கங்கா தீர்த்தத்திற்கு மேலே தோன்றியது.

யாத்திரிகர் காலணாவை அக் கையில் கொடுத்துவிட்டு நடக்கலானார்.

அப்போது ''இவ்வளவு சீக்கிரத்தில் ஏன் ஓடிப் போகிறீர்? வைரக்கற்கள் பதிக்கப்பட்ட விலையுயர்ந்த தங்க வளையல் இதோ பெற்றுக் கொள்ளும். சக்கிலியனிடம் போய் எனது பிரசாதமாகக் கொடும்'' என்று ஓர் அசரீரியின் குரல் கேட்டது.

யாத்திரிகர் அப் பொன் வளையலைப் பெற்றுக் கொண்டு, கயை என்ற புண்ணிய க்ஷேத்திரதிற்குச் செல்லலானார்.

பேராசை பிடித்தது அவரை. ''இதைச் சக்கிலியனிடம் ஏன் கொடுக்க வேண்டும்? யாரிடமாவது விற்றுப் பணத்தை எடுத்துக் கொள்ளுகிறேன் நானே'' என்று

எண்ணமிட்டவாறே, கடைக்குப் போய் அதை விற்க முயன்றார்.

''இது மிகவும் விலையுயர்ந்த வளையல். போதுமான பணம் என்னிடம் இல்லை. இதை விலைக்கு வாங்க என்னால் இயலாது. வேறு ஒருவரிடம் போங்கள்'' என்றான் ஒரு வியாபாரி.

யாத்திரீகர் பலபேரிடம் வளையலைக் காட்டினார். விற்க முடியவில்லை. கடைசியில், ஒரு மஹாராஜாவின் திவானிடம் அதைக் கொண்டுபோய்க் காட்டினார்.

வளையலைக் கண்டவுடனே, ''மகாராணிக்காக வாங்குவார் மகாராஜா'' என்று கருதிய வண்ணம், அதைக் கொண்டு போய் மகாராஜாவிடம் கொடுத்தார் திவான்.

மகாராஜாவோ, அதை நேராக மகாராணியிடம் கொடுத்தார்.

பேரெழில் வாய்ந்த அப்பொன் வளையலை மகாராணி பெரிதும் விரும்பினாள். யாத்ரீகருக்கு நான்கு லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது.

அவருக்கோ ஆனந்தம் அபாரமாய்ப் பொங்கிவிட்டது. அழகான பங்களா ஒன்றை வாங்கினார். யௌவனம் தவழும் மங்கையை மணந்தார். பல ஆள் மாகாணங்களை வைத்துக் கொண்டார். இங்ஙனம் அந்த யாத்ரீகர் ஓர் இளவரசனைப் போன்று சுக வாழ்க்கையில் மூழ்கி மகிழ்ந்து கொண்டிருந்தார்.

வலது கைக்கு அலங்காரம் அளித்தது போல, இடது கைக்கும் அலங்காரம் வேண்டுமல்லவா? மகாராணி மகாராஜாவிடம் விண்ணப்பித்தாள். மகாராஜா யாத்திரீகரைத்தேடினார்.

யாத்திரீகர் வந்ததும், மகாராஜா, ''ஐயா! தாங்கள் கொடுத்த வளையல் ரொம்பவும் உயர்ந்தது. நேர்த்தியானது. மகாராணியின் இடது கைக்கும் ஒரு வளையலைக் கொடுங்கள்'' என்று கேட்டார்.

அந்த யாத்திரீகர், ''என்னிடம் அது ஒன்றுதானிருந்தது. மற்றொன்றுக்கு நான் எங்கே போவது?'' என்றார்.

மகாராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது. ''ஒரு மாத கெடுவுக்குள், நீர் மற்றொரு வளையலைக் கொடுக்கா விட்டால், உம்மைச் சிரசாக்கினை செய்வேன்'' என்று உத்தரவிட்டார்.

யாத்திரீகருக்குத் திகிலும் கவலையும் சூழ்ந்து கொண்டன. துக்கமயமாய்த் தமக்குள், ''அந்தச் சக்கிலியனை நான் எப்படிப் பார்ப்பேன்? அவனை வஞ்சித்து விட்டேன். அவன் ஓர் பெரிய பக்தன் போலல்லவா தோன்றுகிறான்! எப்படியானாலும் அவனிடம் உண்மையைக் கக்கிவிடுகிறேன். என்னை மன்னிப்பான். கங்காதேவியின் திருவருளினால் எனக்கு மற்றொரு வளையலைக் கொடுப்பான்'' என்று எண்ணமிட்டார். நேராகப் பாடலிபுத்திரா க்ஷேத்திரத்தை நாடி, சக்கிலிய மஹானைத் தேடினார்.

உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி உரைத்தார். சக்கிலிய மஹான் புன்முறுவல் கொண்

டார். "கங்காதேவியின் வலது கையில் காலணியைத் தந்தீர்களா!" என்ருர்.

யாத்திரீகர் நடந்த விவரங்களை நவின்ருர். யாத்திரீகர் கண்ணீர் விட்டுக் கதறியழுது, சக்கிலிய மஹானின் கால்களைப் பிடித்து வேரற்ற மரம் போல் விழுந்து சரணுகதி யடைந்தார்.

"மஹானுபாவரே! என்னை மன்னியுங்கள். தாங்கள் ஒரு பெரிய மஹான். சிரசாக்கினைக்கு உட்பட்டவனுய்த் தவிக்கிறேன். மற்ருெரு வளையலைக் கொடுங்கள்" என்று அவர் கெஞ்சினுர்.

அதற்கு அச்சக்கிலிய மஹான், "தோலும் நீரும் உள்ள இந்த தகரப் பாத்திரத்தில் கையை நுழைத்து, உங்களுக்கு வேண்டிய வளையல்களை எடுத்துக் கொள்ளுங்கள்" என்ருர்.

யாத்திரீகர் "எனக்கு ஒன்றே போதும்" என்று கூறி, ஒரு வளையலை எடுத்துக் கொண்டார். மஹானிடம் விடை பெற்றுக் கொண்டு, மகாராஜாவிடம் போய் வளையலைக் கொடுத்தார்.

மகாராஜாவுக்கு மட்டற்ற வியப்பாகப் போயிற்று. அதை மகாராணியிடம் கொடுத்தார்.

யாத்திரீகரை, "உமக்கு இந்த வளையல் எங்கே கிடைத்தது?" என்று கேட்கவே, உண்மையைச் சொல்லி விட்டார்.

பிறகு மகாராஜாவும் யாத்திரீகரும் பாடலிபுத்திரா என்னும் க்ஷேத்திரத்திற்குப் போய், மஹானைத் தரிசித்தார்கள்.

மகாராஜா அந்தச் சக்கிலிய மஹானைப் பார்த்து, "தங்களிடம் இன்னும் வளையல்கள் இருக்கிறதா?" என்று வினவ, அதற்கு மஹான் "எவ்வளவோ இருக்கிறது. தகரப் பாத்திரத்தில் கையை விட்டால், வேண்டிய வளையல்களை எடுத்துக் கொள்ளலாம்" என்ருர்.

உடனே மகாராஜா தகரப் பாத்திரத்தில் கையை விட்டு, 50 வளையல்களை எடுத்துக் கொண்டார். ஒரு க்ஷண நேரத்தில் அப் பாத்திரத்தில் மீண்டும் 50 வளையல்கள் நிறைந்து விட்டன.

மீண்டும் மகாராஜா 50 வளையல்களை எடுத்துக்கொண்டார். மறுபடியும் பாத்திரம் நிரம்பியது 50 வளையல்களால்.

மகாராஜாவுக்கும் யாத்திரீகருக்கும் ஒரே வியப்பாகி விட்டது.

மகாராஜா தமக்குள், "சக்கிலியர் ஒரு பெரிய மஹான். தினசரி அணுக் கணக்கில் சம்பாதித்தாலும், மிகுந்த சந்தோஷத்துடன் இருக்கிருர். உலகத்திலுள்ள செல்வம் அனைத்திற்கும் இவர் அதிபதியாய் இருககிருர். இந்தப் பெரிய ராஜ்யத்தை ஆளுவதில் என்ன பிரயோஜனம்? கவலைகளும் ஆத்திரங்களும் என்னைப் பிடுங்கித் தின்கின்றன. இந்தப் பெரிய மஹானுக்கு நான் சிஷ்யனுகி விடுகிறேன். ஈசுவர தரிசனத்தைப் பெறுவேன்" என்றெல்லாம் எண்ணமிட்டார்.

மகாராஜாவின் உள்ளத்தில் மகத்தான வைராக்கியம் உதித்தது. உடனே ராஜ்யத்தைத் துறந்து விட்டு, அந்தச் சக்கிலிய மகானுக்குச் சிஷ்யர் ஆனுர்.

அம்மஹான் அரசர்க்கு ராம தாரக மஹா மந்திரத்தின் மர்மங்களை உபதேசித்தார்.

ராஜாவோ, உண்மைச் சிஷ்யனுக்கு உரிய பயபக்தி விசுவாசத்துடன், இடை விடாமல் ராம மந்திர ஜபம் பண்ணினார். இராமச்சந்திரமூர்த்தியைத் தியானித்தார். இறுதியில், இராமச்சந்திரமூர்த்தி தரிசனத்தையே பெற்றார். யாத்திரீகரும் தமது செல்வத்தைத் துறந்து மஹானுக்குச் சிஷ்யர் ஆனார்.

பக்தி சிரத்தையுள்ளவன் எவனும் பகவானைக் சாக்ஷாத்கரிக்கக் கூடும். ஒருவன் பக்தி செலுத்தினால், அதிலே ஆண்டவனுக்கு அலாதி விருப்பம். அந்த மனிதனுடைய ஜாதி, மதம், குலம், பதவி முதலியவற்றையும் கடவுள் பார்க்க மாட்டார். எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் சரி, ஈசுவர ஞானத்தை யாருமே பெறலாம்; அவன் கடவுளிடத்தில் பக்தியும், விரக்தியும், சிரத்தையும், மனத்தூய்மையும் உள்ளவனாய், சதாகாலமும் கடவுளை மறக்காமல் அவர் நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருந்தால்!

சக்கிலிய மஹான் பாதரட்சைகளைத் தைத்துக் கொடுத்து வயிறு வளர்த்தாலும்கூட, கடவுளிடத்தில் சதா வாழ்ந்து வரலானார். உண்மையான நீடித்த சந்தோஷத்தைச் செல்வம் உனக்குக் கொடுக்காது. நித்தியத்துவமெனும் தேவாமிருதத்தைப் பருகும் பொருட்டு, மகாராஜா பெரிய தேசார் ராஜ்யத்தையே துறக்கலானார். ஆகையால் செல்வத்திற்காகவும் பதவிக்காகவும் ஓடாதீர்கள். உங்களுக்கு கிடைத்தவற்றிலே திருப்திஅடையுங்கள். கடவுளின் நாம தியானத்தில் மூழ்குங்கள். உங்களுடைய தினசரி வாழ்க்கைக் கடமைகளை ஈசுவரார்ப்பணமாக ஆற்றுங்கள். இவ்வுலகிலிருக்கும் போதே, பல்வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கும்போதே, நீங்கள் கடவுளைச் சாக்ஷாத்கரிக்கக்கூடும். கீதையின் மூல உபதேசமும் இதுவே ஆகும்.

ஆசிரியர்: இராம. மணிமேகலை. வெளியிடுபவர்: T. ராமனுதன் 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர் சென்னை-17.

அருள்

ருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை




விஜிபி
சுலபத் தவணைத் திட்டம்
விஜிபியில் சகாயமான விலையில் தரமுள்ள பொருள்களை வாங்குவது அனைவருக்கும் திருப்தியளிக்கிறது.
யாவரும் விஜிபி தவணைத் திட்டத்தில் பொருள்கள் வாங்குவது மிகச் சுலபம்.
விஜிபி சுலபத் தவணைத் திட்டம் இப்பொழுது விஜிபி 'மொபைல் விற்பனை வேன்கள்' மூலம் உங்கள் வீடு தேடி வருகிறது.
வி.ஜி. பன்னீர்தாஸ் & கோ.
சைதாப்பேட்டை, சென்னை-15. போன் : 442333
கிளை : தி. நகர், சென்னை-17. போன் : 440246
VGP
தரமிகு பொருள்களின்
சிறப்புமிகு விற்பனையாளர்கள்
NAS-98 TM-A

அருள்

உ

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அன்பார்ந்த வாசகர்களுக்கு

''அருள் பத்திரிகையின் குறிக்கோள் யாது?'' என்று பல அன்பர்கள் நம்மைக் கேட்கின்றனர்.

மக்களின் உள்ளத்தில் ஆத்மிக வேட்கையை எழுப்புவதே, ''அருள்'' பத்திரிகையின் தலையாய குறிக்கோள்.

சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம் போன்ற சமயங்கள் அனைத்தையும்; துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் போன்ற சித்தாந்தங்கள் அனைத்தையும்; என்றும் நாம் சமத்துவ நோக்குடனேயே அணுகி வருவோம்.

மக்களிடையே தெய்வபக்தி, அறவொழுக்கம், சாதனையில் ஆர்வம் இவை வளரவேண்டும் என்பதே, எமது ஆசை. அத்துறையில் சிறப்பான பணிபுரிவதற்கான வாய்ப்பையும் ஆற்றலையும், இறைவன் எமக்கு அன்பர்களின் வாயிலாக அருள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

— ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	ஏப்ரல்
கருணை 7	சந்தா	15-4-70
சித்திரை, சாதாரண	ரூ. 3-60	விலை 30 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, ''அருள்''
4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17.

திருமால் வணக்கம்

வடலூர்

ஸ்ரீ இராமலிங்க வள்ளலார்

அறம்பழுக்கும் தருவேயென் குருவே என்றன்
ஆருயிருக் கொருதுணையே அரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக்(கு) அணையளித்த
நிலையே வெய்ய
மறம் பழுக்கும் இலங்கைஇரா வணனைப்
பண்டோர்
வாளியினுல் பணிகொண்ட மணியே
வாய்மைத்
திறம்பழுக்கும் சீராம வள்ள லேநின்
திருவருளே அன்றிமற்றோர் செயல்
இலேனே!

தர்ம ஸேவா துரந்தர
ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா

வேலவன்

அப்பைய தீக்ஷிதர் என்ற பெயரைக் கேட்டாலே, நம் பாரத தேசத்திலுள்ள ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் எல்லாம், இன்றைக்கும் தம் சிரமேல் கரம் குவித்து வணங்குவர். அவர் அக்கினியிலே ஆகுதியாக இட்ட ஒரு சால்வையானது, ஆலயத்திலுள்ள சிவமூர்த்தியைப் போய் அடைந்து, அந்த இறைவனின் திரு மேனியை அலங்கரித்து விளங்கியதாம். அத்தகைய தெய்விக சக்திகள் வாய்ந்த ஒரு சிவ பக்த சிரோமணியின் பெண்வழியில் தோன்றியவர்தான், இவ் விதழின் முகப்பு அட்டையிலே காட்சியளிக்கின்ற ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர்கள்.

ஸ்ரீசர்மா அவர்கள், திருஞான சம்பந்தர் அவதரித்த கௌண்டின்ய கோத்திரத்தில் பிறந்தவர் ஆனால் ஸ்ரீவத்ஸ கோத்திரத்துக்கு ஸ்வீகாரபுத்திரனைப் போனவர். அதனலேயே அவர் ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா என்று அழைக்கப்படுகிறுர்.

விழுப்புரத்தையடுத்த வெங்கந்தூர் என்னும் கிராமத்தில், இருபத்து நான்கு தலைமுறைகளாக வித்வான்கள் தோன்றி வந்துள்ள ஒரு வம்சத்தில், கணபதி சாஸ்திரிகள் என்னும் ஒரு மஹா பண்டிதரின் மூன்றுவது புதல்வராகத் தோன்றினர் ஸோமதேவர்.

அவரைத் தம் ஸ்வீகாரப் புதல்வராகக் கொண்ட அன்னியூர் யாகதீக்ஷிதர், ஒரு மாபெரும் ஆசுகவி. பலவேள்விகள் செய்தவர்.

ஸோமதேவருக்கு மிகவும் இளம் வயதிலேயே திருமணம் நடந்து விட்டது. அபிநவ வியாசர் என பெயர் பெற்றதிருவெண்காடு நாராயண யஜ்வா என்னும் மஹாவித்வானின் புதல்வி பார்வதியென்ற வனிதாமணியை, அவர் மணந்து கொண்டார் அப்போது, ஸ்வீகாரத் தந்தையாகிய யாகதீக்ஷிதர் சிறிது வர தக்ஷிணை வாங்கிவிட்டார். என்பதற்காக, பெற்ற தந்தையாகிய கணபதி சாஸ்திரிகள் அந்தத்

திருமணத்துக்கே போகவில்லையாம்! அன்றையப் பெரியவர்களின் பரந்த மனப்பான்மைக்கும், இன்று உள்ளவர்களின் பான்மைக்கும், எவ்வளவு வேறுபாடு பாருங்கள்!

பெற்ற தந்தை, ஸ்வீகாரத் தந்தை, மாமனுர் இம்மூன்று பெரியவர்களிடமிருந்தும், ஸோமதேவர் தமிழிலும் வடமொழியிலும் பலஅரிய பொருள்களைக் கற்றுத் தெளிந்தார். அதைத் தவிர, திருவண்ணுமலையிலிருந்த கற்பூண்டி வேங்கடரமண சாஸ்திரிகளிடம் மாகமும் அஷ்டகமும் பாடம் கேட்டார். முதலில் தம் ஸ்வீகாரப் பிதாவாகிய யாக தீக்ஷிதரிடமும், பின்னர் திருவொற்றியூர் ஸாம்பமூர்த்தி கனபாடிகள், சிதம்பரம் சாமா கனபாடிகள் ஆகியோரிடமும், வேத அத்யயனம் செய்தார். பின்னர் மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் சேர்ந்து, ஸ்ரீசந்திர சேகர சாஸ்திரிகளிடம் வேதாந்தமும் வியாகரணமும் கற்ருர். பழமானேரி பஞ்சாபகேச சாஸ்திரிகளிடம் தர்க்க சாஸ்திரமும், ஸ்ரீவேங்கடசுப்ரமணிய சாஸ்திரிகளிடம் மீமாம்ஸையும், திருவிடைமருதூர் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளிடம் தர்ம சாஸ்திரமும் பயின்ருர். இவற்ருேடு கூட, ஸோம தேவருக்கு ஆங்கிலத்திலும் ஓரளவு பயிற்சி ஏற்பட்டு இருந்தது.

ஸ்ரீஸோமதேவரின் வாழ்க்கை வரலாற்றை மிகவும் சுருக்கமாக எழுதுவதென்ருல் கூட, அது ஒரு புத்தக அளவுக்கு விரிவடைந்துவிடும். அவ்வளவு சுவையான சம்பவங்கள் அதில் நிரம்பியுள்ளன. அவற்றுள் இரண்டொன்றை மட்டுமே விவரிப்பதாலும், இக்கட்டுரையில் இடம் காணுது. முற்றிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இருவேறு துறைகளில், அவர் புகழ்பெற்றுவிளங்கியவர். ஒன்று அரசியல் துறை; மற்ருென்று ஆத்திகத் துறை.

லோகமான்பால கங்காதர திலகர் சென்னைக்கு விஜயம் செய்தபோது, அவருக்கு வடமொழியிலேயே வரவேற்பு அளித்தார் ஸோமதேவர். கஸ்தூரி ரங்கையங்கார், அரசியல் ஞானி அரங்கசாமி ஐயங்கார், வ வே சு ஐயர், சுப்ரமண்ய சிவா, வ உ சிதம்பரம்பிள்ளை, இராஜாஜி, ஸத்யமூர்த்தி, கவிச் சக்ரவர்த்தி சுப்ரமணிய பாரதியார் போன்ற மேதைகளுடன் அரசியல் துறையில் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களது பாராட்டுக்களைப் பெற்றவர் ஸ்ரீ சர்மா அவர்கள். ஆனுல், பிற்காலத்தில் அரசியலைக் கொண்டு வந்து மதத்திலும் புகுத்துவதற்குச் சில பெரியோர்கள் முற்பட்டபோது, தர்ம சாஸ்திரங்களில் ஆழ்ந்த பற்றுள்ளம் கொண்டிருந்த ஸோமதேவர், அந்த அரசியலுக்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வெளியேறிவிட்டார். அவர் அப்படி வெளியேறியது, ஆஸ்திக உலகத்தின்

அதிருஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

ஸ்ரீ சர்மா தம்முடைய பதினேழாவது வயதிலேயே உபந்யாசம் செய்யத் தொடங்கியவர். அவர் முதன் முதலாகச் செய்த உபந்யாசம் விராடபர்வக் கதை. அந்த இளம் வயதில் தொடங்கிய உபந்யாச சேவை, சுமார் ஐம்பதாண்டுகளுக்கு மேல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வரலாயிற்று. பல இடங்களில் ஸ்ரீமத்பாகவத ஸப்தாஹம் செய்து முடித்திருக்கிறார். சென்னை ஸ்ரீ சங்கரமடத்தில் முப்பதாண்டுக் காலம் நாள்தவறாமல் உபந்யாசம் செய்து, பதினெட்டு மஹாபுராணங்களையும் கூறி முடித்திருக்கிறார். அந்த மாதிரி, பதினெண் புராணங்களையும் ஒரே இடத்தில் ஒருவரே கூறி முடித்த நிகழ்ச்சி, அதற்கு முன் எங்குமே நடைபெற்றதில்லை.

இவ்வாறு முப்பது ஆண்டுகள் தொடர்ந்து செய்து முடித்த பதினெண்புராண உபந்யாசத்தின் சாரத்தை, ஸ்ரீசர்மா அவர்கள் ஒன்பதே நாட்களில் கூட சுருக்கமாகக் கூறி முடிப்பது உண்டு. அந்த முறையில், அவரது பதினெண்புராண உபந்யாசங்கள், நாடெங்கிலும் ஏராளமாக நடைபெற்றுள்ளன. பதினெண் புராணங்களைத் தவிர, பல உபபுராணங்கள், இராமாயணம், பாரதம், ஹரிவம்சம், கர்க்கஸம்ஹிதை. பகவத்கீதை போன்ற வேறு பல கிரந்தங்களையும் அவர் உபந்யாசம் செய்திருக்கிறார். அத்துடன், நாற்பதுக்கும் மேற்பட்ட அரிய நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றுள், ஆதி சங்கரரின் 103 கிரந்தங்களிலிருந்து திரட்டப்பட்ட 1300 உபதேச மொழிகள் அடங்கிய ''சங்கரோபதேச ரத்னம்'' என்னும் நூல், தலை சிறந்ததாகும்.

ஸ்ரீ சர்மா அவர்களுக்குத் தம்முடைய இளம் வயதிலேயே பகவான் இரமண மஹரிஷியுடன் நெருங்கிப் பழகும் பாக்யம் கிடைத்தது. அதன் விளைவாகத் தானோ என்னவோ, அவருக்கு அந்த நாளிலிருந்தே உள்ளுற ஒரு மனத்துறவுநிலை உருவாகத் தொடங்கி விட்டது. எனினும், அவர் தமது நித்யகர்மானுஷ்டானங்களில் சிறிதும் தவறுவதில்லை. தீர்த்தாடனம், ஆலயஸேவை, பஞ்சாயதனபூஜை, ஔபாசனம், வைச்வதேவம் முதலியவற்றை முறைப்படி அனுஷ்டித்து வருபவர்.

காஞ்சி ஸ்ரீகாமகோடி ஆச்சார்யாளிடத்தில், ஸ்ரீசர்மா அளவிறந்த பக்தி பூண்டவர். ஆச்சார்யாளின் ஆணைப்படி, அவர் ஊர் ஊராகச் சென்று தருமப்பிரசாரம் செய்திருக்கிறார். அவருடைய அறிவுரைகளைக் கேட்டு, எத்தனையோ பேர் புலால் உணவையும் சிட்டாட்டத்தையும் விட்டிருக்கின்றனர்.